இறையோனே, யா அல்லாஹ், உன் திருநாமங்களைத் தேர்ந்தெடுத்து
உனது கிருபை வேண்டி இருகரமேந்துகிறோம்....

- எந்தச் செயலிலும் நீயிருந்து துவக்கிடு!
  யா அவ்வலு – ரப்பே யா அவ்வலு!

- எந்த நிகழ்விலும் நீயிருந்து நிறைவாக்கு!
  யா ஆகிறு – ரப்பே யா ஆகிறு!

- சகலமும் பொதிந்தவனே சமுதாயத்தை ஒன்றாக்கு!
  யா ஜாமிஉ – ரப்பே யா ஜாமிஉ!

- வேற்றுமை புயற்காற்றை விலக்கி தடுத்திடு
  யா மானிஉ – ரப்பே யா மானிஉ!

- புத்தம்புது சிந்தனைகள் புத்தியிலே தந்திடு!
  யா காலிக்கு – ரப்பே யா காலிக்கு!

- முஸ்லிம் சமுதாயத்தை முன்னேறச் செய்திடு!
  யா முகத்திமு – ரப்பே யா முகத்திமு!

- தீனோர் வாழ்விலே அருள்மழைப் பொழிந்திடு!
  யா ரஹ்மானு – ரப்பே யா ரஹ்மானு!

**– கவிஞர், மர்ஹூம் தஞ்சை நபிநேசன்**

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் பாடியதில் பொறுக்கியவை.
அனைவருக்கும் இறை கிருபை கிடைப்பதாக. ஆமீன்

பன்னூலாசிரியர் : **மானா மக்கீன்**
பதிப்பாளர் : **மில்லத் எஸ்.பி. முஹம்மது இஸ்மாயில்**

அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளி

# புதிய வெளிச்சங்கள்

தேசத்தின் கண் – தமிழ்மணி – தாஜுல் உலூம்

## இலங்கை மானா மக்கீன்

ஆய்வு


வெளியீடு:

**ஜம் ஜம் பதிப்பகம்**

பாத்திமா மன்ஸில், 492, ரஹ்மானியா தெரு,
சக்கராப்பள்ளி – 614 211, தஞ்சாவூர் மாவட்டம்





## நூல் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | புதிய வெளிச்சங்கள் |
| ஆசிரியர் | : | மானா மக்கீன் |
| முதற்பதிப்பு | : | ஜனவரி – 2014 |
| பக்கங்கள் | : | 128 |
| விலை | : | ரூ. 150/– |
| அச்சிட்டோர் | : | ஏ.கே.எல். பிரிண்டர்ஸ், ராயப்பேட்டை, சென்னை – 600 014. |
| வெளியீடு | : | ஜம் ஜம் பதிப்பகம் பாத்திமா மன்ஸில், 492, ரஹ்மானியா தெரு, சக்கராப்பள்ளி – 614 211, தஞ்சாவூர் மாவட்டம் |
| நூல் கிடைக்குமிடம் | : | ஆயிஷா பதிப்பகம் 12, கனி நகர், அய்யம்பேட்டை – 614 201 தஞ்சாவூர் மாவட்டம் செல் : 98949 84513 / 75027 94481 |

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியப் பொதுச் செயலாளர்,
முனீருல் மில்லத் **பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன்** அவர்கள் வழங்கியுள்ள

# அணிந்துரை



தஞ்சாவூர் மாவட்டம் அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்திருப்பவை.

ஜம் ஜம் எஸ்.எம். பத்ருதீன் ஹாஜியார், மர்ஹூம் ஆலிமான் ஏ. ராஜா முஹம்மது, டாக்டர் ஏ.எம். ஜியாவுதீன், மர்ஹூம் ராஜகிரி என்.பி. முஹம்மது ஹூசைன், எம்.ஏ. குலாம் மைதீன் ஹாஜியார் போன்ற முதுபெரும் தலைவர்களும், அவர்களின் சந்ததிகளும், கண்ணியத்தென்றல் காயிதெ மில்லத் காலந்தொட்டு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவர்கள்.

ஜம் ஜம் குடும்ப கொழுந்தாகிய தம்பி மில்லத் எஸ்.பி. முஹம்மது இஸ்மாயில், அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி பற்றிய ஆய்வு ஒன்றை பேனா சக்கரவர்த்தி மானாமக்கீன் அவர்களை கொண்டு நடத்தி அதை நூலாக வெளியிட்டு அதன் மூலம் வரும் சன்மானங்களை நகர முஸ்லிம் லீகின் கட்டட நிதிக்கு சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருப்பதாக கூறினார்.

அவர் எண்ணத்திற்கு வலிமை சேர்க்கும் வண்ணம் சிம்லா பி.ஏ. நஜீபும், ஆலிமான் ஆர்.எம். ஜியாவுதீனும் நிறைந்த உற்சாகத்தையும், வழிகாட்டுதலையும் ஊட்டியிருக்கிறார்கள். விளைவு, `புதிய வெளிச்சங்கள்' என்னும் பெயரில் அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி வரலாறு ஆவணப்பேழையாக உருவாகியிருக்கிறது.

மானாமக்கீன் இலங்கை சீமைக்காரர் எனினும், இந்திய மண்ணுடன் குறிப்பாக தமிழக பூபாகத்துடன் இரண்டற கலந்து விட்ட உணர்வு மிக்கவர் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் இந்தப் பனுவலை ஒரு பயணியின் டைரியைப் போல்... படிப்பதற்கு ஆர்வமும், வேகமும் ஊட்டும் வகையில் படைத்திருக்கிறார்.

ஆய்வு என்றாலே மறைந்திருப்பதை வெளிச்சத்திற்கு கொணருவதுதான். அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி புராதன வரலாறு, முஸ்லிம்கள் அங்கு தோன்றிய காலம், அய்யம்பேட்டை முஸ்லிம்களுக்கும் இலங்கை மலேசியா போன்ற நாடுகளுக்கும் உள்ள சரித்திரத் தொடர்புகள், சன்மார்க்க, சமூக, அரசியல் துறைகளில் அவ்வூர் மக்களின் ஈடுபாடுகளும், எழில்மேவிய சேவைகளும், திருக்குர்ஆன், ஹதீஸ் விளக்க மாநாடுகளில் அம் மக்கள் கொண்டுள்ள பேரார்வமும் இந்நூலில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

சிறிய நூலாயினும் சீரிய நூல். இன்னும் பலப்பல உண்மைகளை உள்ளடக்கிய பெருநூலாக விரிவடையும் காலம் கனிந்து வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அய்யம்பேட்டை தாஜுல் பயான் ஏ.கே.எம். ஜியாவுதீன் ஆலிம் தமிழகத்தில் மார்க்கப் பிரச்சார தென்றலாக வலம் தந்து மனநலம் சேர்த்தவர். அவரைப் போன்று இந்நூலின் மூலமும் நலனும் பலனும் நற்றமிழ் நாட்டில் பெருகிட வாழ்த்துவோம்.

ஆய்வுக்கு முன்னுரிமை தந்து அருமையான நூலாக்கி அற்புதமாக வெளியிட முன்வந்துள்ள ஜம் ஜம் பதிப்பகத்தாருக்கு நம் வாழ்த்துக்கள்!

**அன்புடன்,**
**பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன்**

**திருச்சி**
**10.01.2014**

# புதிய வெளிச்சம் தெரிகிறது; பயணம் தொடர்கிறது....

அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி பாதம் படாத பூமி பாருலகில் இல்லை என பெருமைப்படத்தக்க வகையில் இந் நகரவாசிகள் உலகெங்கும் வியாபித்திருக்க இந் நகரின் வரலாற்றுப் புகழும், வான்புகழ் சிறப்பும், குடும்பங் களின் பெருமையும், சமுதாயப் பணியும், தாய்ச்சபை தொடர்பும் உலகெங்கும் பரவ வேண்டாமா? என்ற அவா என்னுள் எழுந்தது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் மாநில துணைச் செயலாளரான எனக்கு முஸ்லிம் லீக் பதிப்பக அறக்கட்டளை செயலாளர் பொறுப்பு தரப்பட்டபோது, தாய்ச்சபையின் வரலாற்றை ஆவணப்படுத்தி வெளியிடும் அரிய பணியினை மேற்கொள்ளும் போதெல்லாம் பிறந்தகத்தின் பெருமையையும் வெளிக்கொணரும் ஆர்வம் அதிகரித்தது.

பெருமைக்குரிய ஊர்கள் குறித்த நூல்கள் வெளிவரும் போதெல்லாம் இந்த எதிர்பார்ப்பு மேலும் மேலும் அதிகரித்து அதற்கொரு வடிகால் தேட முற்பட்டபோது என் நினைவை ஆக்கிரமித்த பெயர் ``மானாமக்கீன்''.

இலங்கையின் பிரபல எழுத்தாளராக இருந்தாலும் தமிழகத்தின் கீழக்கரை, காயல்பட்டினம், நீடூர், முத்துப்பேட்டை உள்ளிட்ட பல ஊர்களின் வரலாற்றையும், பாரம்பரிய சிறப்பையும் ஆவணப்படுத்தி புகழ் பெற்றவர்.

எனவே, அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி புகழையும், பார் அறியச் செய்யும் பதிப்புப் பணிக்கு பொருத்தமானவர் இவர் என முடிவெடுத்து இம் மாபெரும் பணியை அவரிடம் ஒப்புவித்தபோது, கிடைத்த ஒத்துழைப்பு அறிந்த விஷயங்கள் திரட்டிய தகவல்களை கொண்டு `புதிய வெளிச்சங்கள்' உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நூல் நாவலா, இலக்கியமா, வரலாறா அல்லது ஆய்வுத் தொகுப்பா என வியக்கும் வகையில் சுவையாக அமைந்துள்ளது மானமாமக்கீன் அவர்களின் தனிச் சிறப்பு. இந்நூலை படிக்கும் அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி வாசிகளுக்கு ஆச்சரியம் கலந்த ஆதங்கம் நிச்சயம் ஏற்படும் வரலாற்றுப் பதிவில் தங்கள் பாரம்பரியமும், சிறப்பும் இடம் பெறாமல் போய் விட்டதே என்று!

ஆனால், யாரும் வருத்தப்பட வேண்டாம்.

எப்போதுமே தொடக்கம் இப்படித்தான்! முழு ஒத்துழைப்புகளுடன் எதிர்பார்க்கும் தகவல்கள், செய்திகள் அனைத்தும் கிடைத்தால் தமிழுலகில் அய்யம் பேட்டை – சக்கராப்பள்ளியின் புகழ் ஒரு பெருமைக்குரிய ஆவணமாக மிளிரும். அதற்கு ஒத்துழைப்பு தர வேண்டியது உங்கள் கடமைதானே! உங்கள் உணர்வை தூண்டும் ஒரு முன்னோட்டம்தான் `புதிய வெளிச்சங்கள்'.

இந்நூல் தனி ஒருவரின் சுயநலத்திற்கோ, ஒரு குடும்ப நிறுவனத்தின் விளம்பரத்திற் காகவோ உருவாக்கப்பட்ட தல்ல. ஊர் சிறப்பை வெளிப்படுத்துவதோடு இதன் மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதும் அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி நகர இந்திய யூனியன் முஸ்லிம் லீக் புதிய கட்டிடம் உருவாக்குவதற்காகவே அளிக்கப்படுகிறது என்பது எங்களுக்கு மனநிறைவும், உங்களுக்கு மகிழ்ச்சியும் அளிக்கும் செய்தியாகும். ஜம் ஜம் பதிப்பகம் பெருமையுடன் வெளியிடும் இந்நூலை அருமையாக உருவாக்கிய மானாமக்கீன் அவர்களுக்கும், உறுதுணைபுரிந்த மௌலவி பி.எம். ஜியாவுதீன் பாகவி, சிம்லா பி.ஏ. முஹம்மது நஜீப், ஆலிமான் ஆர்.எம். ஜியாவுதீன் ஆகியோருக்கும் ஒத்துழைத்து தகவல் களை தந்த நல்ல உள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி!



புதிய வெளிச்சம் தெரிகிறது; இனி நம் பயணம் தொடரும்.... உங்கள் ஒத்துழைப்புடன்!

**தங்களன்புள்ள,**
**மில்லத் எஸ்.பி. முஹம்மது இஸ்மாயில், எம்.ஏ.,**
**பதிப்பாசிரியர்**




# நெஞ்சுக் கூட்டில் உலா வருவோர்...

## (அய்யம்பேட்டை - சக்கராப்பள்ளி)

### இலங்கையில் அடக்கத்தலம் கொண்டுள்ள ஆன்மிகத் தவசீலர்கள் :

ஷெய்கு கா. அப்துல் கனி அப்பா சாஹிபுல் காதிரி
ஆரிபுபில்லாஹ் அப்துல் கபூர் சாகிபுல் மஸ்தான் பாவா

### முஸ்லிம் பரிபாலன ஜமா அத் சபைத் தலைவர்கள்

(அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளி)

பாட்சா ராவுத்தர்
நாட்டாண்மை தாவுது கனி
எம்.கே.டி. பாவாஜி அப்துல் ரஹ்மான்
ராஜா பாய் முஹம்மது உசேன்
எஸ்.கே. அப்துல் ரஹ்மான்
கா.சு. இஸ்மாயில் ராவுத்தர்
கனியார் இ. முகம்மது இப்ராஹிம் ராவுத்தர்
அ.கா. அப்துல் ஹமீது
கே.எஸ். அப்துல் ஹமீது
லப்பா அப்துல் லத்தீப் (ராஜாபாய்)
வாலன் ஹாஜி ஏ. ஜமால் முஹம்மது
சாஹிபான் அப்துல் வஹாப்
ஆவூர் ஹாஜி ஏ. முஹம்மது பாரூக்
அடைகட்டி அல்ஹாஜ் எம்.பி. முஹம்மது காஸிம்
நாட்டாண்மை ஹாஜி ஏ. அப்துல் கரீம்
ஹாஜி ஓ.ஆர்.ஜே. முஹம்மது பஷீர் (தற்போதைய தலைவர்)

### சக்கராப்பள்ளி ஊராட்சி மன்றத் தலைவர்கள்

கட்டாராவுத்தர் முஹம்மது காசிம்
சேவூர் அப்துல் ஹமீது சாஹிப்
கலெக்டர் பீர் முஹம்மது சாஹிப்
மாமா ராவுத்த மதார்ஷா சாஹிப்
கட்டாராவுத்தர் ரஹ்மத்துல்லா சாஹிப்
டாக்டர் ஏ.எம். ஜியாவுதீன்
அறிஞர் அப்துல் குத்தூஸ் சாஹிப்
குட்டபிள்ளை ஏ. அப்துல் ரஜாக் சாஹிப்
ஏ. நஜ்முன்னீஷா, ஏ. குர்ஷித் பேகம், என். நாஸர்
ஓ.ஆர்.ஜே.ஏ. துரை புர்கானுதீன் (தற்போதைய தலைவர்)

## பள்ளிவாசல்கள், மதரஸாக்களின் புரவலர்கள் – வக்ஃபாளர்கள்:

| | |
|---|---|
| ஜனாப் முகைதீன் பிச்சை ராவுத்தர், மில்லத் நகர் | 1874 |
| ஹக்கீம் ந. அப்துர் ரஹ்மான் சாஹிப் | 1903 |
| பாச்சியான் கே.ந. இபுராஹிம் சாஹிப் | 1905 |
| ஈயக்கார அ. முஹம்மது காசிம் சகோதரர்கள் | 1935 |
| கனியார் ஹாஜி இ. தாவூத் சாஹிப் | 1958 – 1962 |
| கொட்டபாக்கி எம். அப்துர் ரஸாக் சாஹிப் | 1965 |
| கனியார் இ.ஜெய்னுலாப்தீன் சாஹிப் | 1965 |
| மாமா ராவுத்த வி.அமீர்பாட்சா | 1977 |
| ஹக்கீம் என்ஏ. நத்தர்சா சாஹிப் | 1977 |
| ஹாஜி பி.எம். அப்துல் லத்தீப் சாஹிப் | 1979 |
| கனியார் ஜனாப் இ. முஹம்மது காசிம் | 1979 |
| ஆவூர் ஹாஜி ஏ. அப்துல் காதர் சாஹிப் | |
| அடைக்கட்டி ஹாஜி எம்.பி. முஹம்மது காசிம் சாஹிப் | |

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தொண்டர் திலகங்கள்

'மஷாயக் ஹாஜி என்.எம். சயீது (தாய்ச்சபையின் முதுபெரும் தலைவர்)
வாணக்கார எம். முஹம்மது இப்ராஹிம் (நகர முதல் முஸ்லிம் லீக் தலைவர்)
கட்டா ராவுத்தர் எம். அப்துல் சமது (நகர முதல் முஸ்லிம் லீக் செயலர்)
'அஜ்ஜிபாய்' எஸ்.எம். அப்துல் ஹமீது
(நகர முஸ்லிம் லீக் செயலாளர், பொருளாளர்)

## 'முஸ்லிம் லீக் செயல்வீரர்' விருதாளர்கள்

(1998 – ஜூன் 20 – பொன் விழாவில்)
அபுல் பயான் மௌலவி எம். சையது முஹம்மது
அப்பா கே.ஏ.ஏ. முஹம்மது சாலிஹ்
சையது எஸ்.என் ஷர்புத்தீன் ஹஸரத்
கொக்கரட்டி ஹாஜி ஏ. அப்துல் காதர்
கத்தீப் ஏ. அப்துல் ரசீது
கத்தீப் ஒய்.ஏ. ஹாஜா முகைதீன்
எஸ். இ. பக்கீர் முஹம்மது



## ஊரின் சேவைச் செம்மல்கள்

'உச்சி ஹாஜி அப்துல் காதர் சாஹிப்
குண்டு ஜே.எம். சுல்தான்
மாமா ராவுத்த கிரஸெண்ட் ஏ. நூர் முஹம்மது
ஹாஜி நாட்டக்கார ஏ. அப்துல் கரீம் சாஹிப்
அப்பா கே.ஏ.ஏ. அப்துல் காதர்
ஐ.பி. முஹம்மது இபுராஹிம்
'லீக் பாய்' டீ. பக்கீர் முகையதீன்

## அருள்மறை மேம்பாட்டாளர்

'அபுல் மஸாக்கீன்' (ஏழைகளின் தந்தை) 'முஹிப்புல் உலமா' (உலமாக்களின் உற்ற நண்பர்)

பீ.ஏ. ஹாஜியார் எம். அப்துர் ரஹீம்.

24 அல் குர்ஆன் மாநாடுகள் நடத்தி அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளி ஊர்களை வரலாற்றில் பதித்தவர்.

இத்தனை மாணிக்க மனிதர்களுடன் இன்னும் விடுபட்டவர்களையும் நெஞ்சின் நினைவோடலில் நீந்தவிட்டு 'இச்சிறு நூலை சமர்ப்பிக்கிறோம். அவர்கள் 'புது வெளிச்சங்கள்' பாய்ச்சிக் கொண்டேயிருக்கிறார்கள்.

**– நூலாசிரியரும், பதிப்பாசிரியரும்.**

## இந்நூலாய்வுக்கும் பதிப்புக்கும் – தோன்றாத் துணைகள்

❒ 'முனீருல் மில்லத்' பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் எம்.ஏ.,
(தேசிய பொதுச் செயலாளர், மாநிலத் தலைவர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்)

❒ அல்ஹாஜ் ஆர்.ஜெ. முஹம்மது பஷீர்
(தலைவர், முஸ்லிம் லீக் பரிபாலன ஜமாஅத் சபை)

❒ ஹாஜி எம்.ஏ. குலாம் மைதீன் அவர்கள்
(தலைவர், பெ.ஆ.கழகம் அ. உயர்நிலைப்பள்ளி, சக்கராப்பள்ளி)

❒ சிம்லா ஹாஜி பி.ஏ. முஹம்மது நஜீப் (தலைவர் நகர இ.யூ. முஸ்லிம் லீக்)

❒ பேராசிரியர் மவ்லவி பீ.எம். ஜியாவுத்தீன் பாகவி அவர்கள்
(நிறுவனர் , இஸ்லாமிய கலாசாரப் பேரவை)

❒ ஹாஜி கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்
(மாநிலப் பொதுச் செயலாளர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்)

❒ ஜனாப் காயல் மகபூப் (செய்தி ஆசிரியர், 'மணிச்சுடர்')

- ஜனாப் எஸ்.ஏ. இபுராஹிம் மக்கீ (பதிப்பக அறக்கட்டளை மேலாளர்)
- ஜனாப் துரை புர்கானுதீன் அவர்கள்
  (தலைவர், ஊராட்சி மன்றம், சக்கராப்பள்ளி)
- ஹாஜி கே.ஏ. ஷபீர் அஹமது அவர்கள்
  (ஷெய்கு அப்துல்கனி சாகிபுல் காதிரி அறக்கட்டளை)
- ஜனாப் எஸ்.பீ. குதுபுதீன் அவர்கள்
  (நிர்வாக இயக்குநர் – ஜம்ஜம் ரியல் எஸ்டேட்)
- ஆலிமான் ஆர்.எம். ஜியாவுதீன்
  (அமைப்பாளர், இ.யூ.முஸ்லிம் லீக் – மாவட்ட இலக்கிய அணி)
- ஆய்வெழுத்தாளர் ஹெச்.எம். ஹபீப் ரஹ்மான்
  மில்லத் நகர், சக்கராப்பள்ளி
- ‘பிஸ்மி’ ஹாஜி ஏ. ஹபீபுர் ரஹ்மான்
  (நிறுவனர் : அல்–மதரஸதுல் காதிரிய்யா அறக்கட்டளை)

## பணிவாக பதினெட்டு வரிகளில்...


எங்கள் சக்திக்குட்பட்ட வகையில், நூல்களின் வாயிலாகவும் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரிடமும் விசாரித்து, சேகரித்த தகவல்களின் அடிப்படையிலேயே இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் குறிக்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் தவறுகள் / விடுதல்கள் இருப்பின் அதனை எங்களது கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுகிறோம். சுட்டிக்காட்டப்படும் தவறுகள் / விடுதல்கள் நூலின் அடுத்த பதிப்பில் சரி செய்யப்படும்.

மேலும், இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள இந்து – முஸ்லிம் வணக்கத்தலங்கள், அடக்கத் தலங்கள், பொதுநல அமைப்புகள் பற்றிய தகவல்களுக்கு எந்தவிதமான சட்டப்பூர்வ அந்தஸ்தும் இல்லை என்றும், அவற்றை அடிப்படையாக் கொண்டு, யாரும் எந்த ஒரு நீதிமன்றத்திலோ அல்லது நீதித்துறை சார்ந்த பிற அமைப்புகளிலோ உரிமை கோரவோ அல்லது அபகீர்த்தி வழக்குத் தாக்கல் செய்யவோ இயலாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**– நூலாசிரியர் / பதிப்பாளர் / வெளியீட்டாளர்**

83 ஆண்டுகளுக்கு முன் (1931) சக்கராப்பள்ளி பிரஜைகள் இருவர்,திருச்சியில் சம்பந்தம் செய்து கொண்ட ‘‘திருமணச் சான்றிதழ்’’ பத்திரங்களின் தோற்றம்.



**“வரலாற்று அடிச்சுவடுகளை மறந்த சமூகம் கால ஓட்டத்தில் மறக்கப்பட்டு விடும்”**

**– இலங்கைக் கலாநிதி (முனைவர்) எம்.ஏ.எம். சுக்ரீ அவர்கள்**

# 1.

# வல்லவன் வரம் வழங்கி வழிகாட்டிட வேண்டும்

கீழக்கரை, காயல்பட்டினம், நீடூர், முத்துப்பேட்டை, குளச்சல், கோட்டாறு, நாகர்கோவில் – என கடந்த சில ஆண்டுகளுக்கிடையில் தங்கத் தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் சில முக்கிய ஊர்களின் வரலாறுகளையும், வளங்களையும் பதித்திட அல்–கலமாகிய எழுதுகோல் எனக்கு அவனது கொடையானது.

இலங்கை எழுத்தாளர் எவருக்கும் கிடைத்திரா பெரும்பேறு.

அல்ஹம்துலில்லாஹ்.

அவ்வாறு நூலுருவில் பதிப்பிக்கப்பட்ட பதிவுகளில் மேலோங்கி தனித்துவமாக அமைந்து போனது அவ்வூர்களின் இலங்கைத் தொன்மைத் தொடர்புகள்.

ஓர் இடைவேளைக்குப் பிறகு.....

‘‘அய்யம்பேட்டை சக்கராப்பள்ளிக்கும் வந்து கள ஆய்வு செய்திடுக’’ என்ற அழைப்பு.

தமிழ்நாடு மாநில இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அனுசரணையில், அந்த ஆலவிருட்சத்தின் வியாபிப்புக்காக, மதிப்பிற்குரிய **‘ஜம்ஜம்’** ஹாஜியும், **காயிதே மில்லத்** விருதாளருமான **எஸ்.எம். பதுருதீன்** பெரியவர் அவர்களால் முழு நேர ஊழியராக அர்ப்பணிக்கப்பட்டுள்ள அவர்தம் செல்வப் புதல்வர்களுள் ஒருவரான முஸ்லிம் லீக் பதிப்பக அறக்கட்டளைச் செயலாளர் **ஹாஜி ‘மில்லத்’ எஸ்.பி. முஹம்மது இஸ்மாயில், எம்.ஏ.,** அவர்களது அன்புக்கரம்!

அவருக்கு செயல் ஊக்கம் அளிக்கவும், எனக்குத் தோன்றாத் துணைகளுள் ஒருவராய் அமையவும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்.

அவர் **ஆலிமான் ஆர்.எம். ஜியாவுதீன்.**

என்னில் ஓர் தீர்மானம்.

■ ‘இது ஓர் ஆய்வு நூலாக அமையக்கூடாது. ஆனால் அமையவும் வேண்டும்’.

■ ‘பேராசிரியர்களும், பேரறிஞர்களும் மட்டும் பக்கங்களைப் புரட்டக்கூடாது. பாமரர்களும் ஆவலாகப் படிக்கப் ‘பல சரக்கு’கள் இருக்க வேண்டும்!

– இப்படியெல்லாம் முடிவு பெற்று, 'வல்லவன் வரம் வழங்கி வழிகாட்டிட வேண்டும்' என வேண்டி நின்றேன்.

அவன் அருளினான்!

அற்புதத் தகவல்களையும் அதிசயப் புதையல்கயைும் அள்ளி வழங்கினான்.

மிக முக்கியமாக – சிறப்பாக –

## அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி இலங்கைத் தொடர்புகள்!

**இன்னும் சில பக்கங்களுக்குப் பின் (05–06 ஆம் அத்தியாயங்களில்) நூற்றாண்டுகால ''இ.தொ'' வெளிச்சமிடப்படும்!**

**இப்பொழுது இங்கே, 'வேறு சில' சங்கதிகளையும் சந்திப்பொன்றையும் (முதல் சந்திப்பு) வழங்க உள்ளேன்.**

* * *

அய்யம்பேட்டை, சக்கராப்பள்ளிக்கு வர தஞ்சைத் தரணி வழியாக வந்ததுமே அங்கே சரசுவதி மஹால் நூலகம் நோக்கி ஒடினேன்.

ஆங்கிலேயரால் பதித்துப் பாதுகாக்கப்பட்டு வரும் 'தஞ்சாவூர் கெஜட்டியர்' வால்யூம்கள் அத்தனையையும் புரட்டிவிடப் பரபரத்தேன்.

என் முன்னே வைக்கப்பட்ட தொகுதியில் 261 – 262ஆம் பக்கங்களில் 83 ஆண்டுகளுக்கு முன் 1931ல் அய்யம்பேட்டையில் 10,163 பேரும், சக்கராப்பள்ளியில் 3,478 பேரும் வாழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிலும், சக்கராப்பள்ளியில் வாழ்ந்த 3,478 பேரில் 3,267 பேர் முஸ்லிம்கள் என்றும், எஞ்சிய 211 பேர் பிறர் என்றும் பதிவு.

சமீபகால தொகை தெரிவதற்கு கடந்த 2011ல் புதிதாகத் தேர்வாகியுள்ள சக்கராப்பள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் **ஜனாப் ஒ.ஆர்.ஜே. ஏ. துரை புர்கானுதீன்** அவர்களை அணுகியபோது எனக்கு உடன் ஒத்துழைப்புத் தந்து குடிசன மதிப்பை வழங்கிய வகையில் – சக்கராப்பள்ளியின் இப்போதைய மக்கள் எண்ணிக்கை 8000 இதேபோல் எனக்குக் கிடைத்த இன்னுமொரு தகவலின்படி அய்யம்பேட்யைில் சுமார் 16,5000.

இத்தகைய ஒருசிறு தொகை மக்களின் மகிமையை, மனித மாமணிகளின் மகத்துவத்தை பிரபல பன்னூலாசிரியர் மர்ஹூம் **எம்.ஆர்.எம். அப்துர் ரஹீம்** அவர்கள் ஆங்காங்கே தம் எழுத்துக்களில் பதித்தும், ஊர்வாசியான மர்ஹூம், **கிரெசென்ட் நூர் முகம்மது** அவர்கள் சிறு சிறு நூல்கள், மலர்கள் வாயிலாகவும் மணம் பரப்பியுள்ளார்கள்.



ஆனால், அனைவரையும் முந்திக் கொண்டு 1400 ஆண்டுகளுக்கு முன்பேயே இருவர் '**சக்கராப்பள்ளி**' என்ற பெயரை சர்க்கரைப் பொங்கலாக்கி வழங்கியுள்ளனர்.

அதுவும் **தேவாரம், திருத்தாண்டகப் பாசுரங்களில்!**

முஸ்லிம் கவிஞர்களும் பாடியுள்ளார்கள்.

முதலில் பாடல்களில் பார்வை, பின் பாடியோர் அறிமுகம்.

**01. படையினார் வெண்மழுப் பாய்ப்புலித் தோலரை**
**உடையினார் உமையொரு கூறனார் ஊர்வதோர்**
**விடையினார் வெண்பொடிப் பூசினார் விரிபுனல்**
**சடையினார் உறைவிடஞ் சக்கரப்பள்ளியே**

**02. தன்வயல் புடையணி சக்கரப்பள்ளியெம்**
**கண்ணுதல் அவனடிக் கழுமல வளநகர்**
**நண்ணிய செந்தமிழ் ஞானசம் பந்தன்சொல்**
**பண்ணிய இவைசொலப் பறையுமெய்ப் பாவமே**

**03. பொருப்பள்ளி வரை வில்லாப் புரம் மூன்று எய்து**
**புலந்து அழியச் சலந்தரனம் பிளந்தான் பொன்சக்**
**கரப்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி கள்ஆர்**
**கமழ் கொல்லி அறைப்பள்ளி கலவம் சாரல்**
**சிரப்பள்ளி, சிவப்பள்ளி, சொம்பொன்பள்ளி**
**செழ நளிபள்ளி, தவப்பள்ளி, சீரான்**
**பரப்பள்ளி என்று என்று பகர்வோர் எல்லாம்**
**பரலோகத்து இனிதாகப் பாலிப்பாரே!**

முதலிரண்டும் தேவாரம்.

கி.பி.600–700களில் (7ஆம் நூற்றாண்டு) வாழ்ந்த **திருஞானசம்பந்தப் பெருமானாரால்** பாடப் பெற்றவை.

மூன்றாவது, **திருத்தாண்டகப் பாசுரம்: திருநாவுக்கரசர்** ஆகிய அப்பர் **சுவாமிகளால்** ஆக்கப் பெற்றது.

சைவ சமயாச்சாரிகளில் மிக உயர்ந்தவர்களாக மதிக்கப்பட்ட இவர்கள், ஒரு குக்கிராமமான சக்கராப்பள்ளி சிவன் கோயில் சிறப்பை 1400 ஆண்டுகளுக்கு முன்பு புகழ்ந்து பாடியுள்ளனர்.

இன்று அந்த ஆலயம், '**சக்கரவாகீஸ்வரர் கோவில்**' எனக் காட்சியளித்து கொண்டிருக்கிறது – பெரும்பாலும் ஒரு முஸ்லிம் கிராமமாகப் பரிணமித்துள்ள சக்கராப்பள்ளியில்!

இக்கோவில் ஒரு பறவையுடனும் சம்பந்தப்படுவது அதிசயம்!

'**சக்கரவாகப்பட்சி**' கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

இப்பறவை தன் இணையைப் பிரிய நேரிட்டால் இராப் பொழுதில் தனிமையில் தவியாய்த் தவித்துப் போகும் தன்மை உடையதாம்!

அது தன் தனிமையைத் தவிர்க்க வழிதேடுமாம்.

இங்கே சிறகடித்து வந்து வழிபாட்டில் ஈடுபட்டு வீடடைந்ததாம்! (ஆதாரம்: அய்யம்பேட்டை மதகடி கோவில் கும்பாபிஷேக வெளியீடு).

எவ்வாறாயினும், அந்த அருமையான பறவையின் பாதிப்பெயர் (அல்லது முழுதும்?) இக்கோவிலுடன் சம்பந்தப்பட்டுத் துலங்குகிறது.

அய்யம்பேட்டை பற்றி சங்ககால முஸ்லிம் புலவர் பாடியுள்ளார்.

**(இடை நடுவில் ஒரு செருகல்: இந்நூலில் ஆழ்ந்திருக்கும் சில முஸ்லிம் வாசகப் பெருமக்கள் (குறிப்பாக இளையோர்), ''ஏன் ஆய்வெழுத்தாளரே, இலங்கையிலிருந்து மெனக்கெட்டு வந்து ஒரு கோவிலில் ஆரம்பித்து அதைப் பற்றியே சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே?'' என வினா தொடுப்பீர்கள்! பொறுங்கள்! விளக்கம் உண்டு.**

அபிமானிகளே,

எந்தவொரு வரலாறாகவும் இருக்கட்டும், வணக்கத்திற்குரிய இடமாகவும் இருக்கட்டும். எவருக்காகவும், எதற்காகவும் எதையும் மறைக்க வேண்டியதில்லை. மறுக்கவும் அவசியமில்லை.

வரலாறு வரலாறே! வணக்கத்தலம் வணக்கத்தலமே! முதன்மைப்படுத்த வேண்டியதை முதன்மைப்படுத்தியே தீர வேண்டும்!

இந்த மனோபாவம் உள்ளோரே மேன்மக்கள். (நான் என்னைக் குறிக்கவில்லை என்பதை அன்பு கொண்டு மனத்தில் கொள்க! மனித சமுதாயத்தையே விளிக்கிறேன்)

**21ஆம் நூற்றாண்டில் (2000–2100) அவசியப்படுவதும் அதுவே.**

இரு கண்களைப் போன்ற அய்யம்பேட்டையும், சக்கராப்பள்ளியும் இதற்கு நல்ல உதாரணங்கள்.

தஞ்சை மாவட்டத்தின் 14 ஒன்றியங்களில் அமைந்துள்ள 22 பேரூராட்சிகளில் ஒன்றான அய்யம் பேட்டையிலும், 568 உள்ளூராட்சிகளுள் ஒன்றான சக்கராப்பள்ளியிலும் ஆய்வுகள் பல செய்து இதனைக் கண்ட நான் கொடுத்து வைத்தவன்.

நன்றிக் கடனும் பட்டவன்!

எதற்கு, எப்படி, என்பீர்கள்!

இந்தப் பக்கத்தில் எல்லாம் சொல்ல மாட்டேன். இடமிருந்தால் சந்தர்ப்பம் வாய்த்தால் இணைக்கிறேன்.

ஏற்கனவே குறித்தது போல் தஞ்சை சரசுவதி மஹாலில் 'தஞ்சாவூர் கெஜட்டியார்' 118–119 ஆம் பக்கங்களைப் பாடமாக்கி விட்டு வந்த காரணத்தால் –

''**நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை**'' என்ற வாழையடி வாழை வாய் மொழிக்கொப்ப, அய்யம்பேட்டையின் ஆரம்ப கால அடையாளம் நெசவும், 'பட்டு நூல்காரர்'களின் பிரபல குத்துணி' (Kuttuni)யும், சக்கராப்பள்ளியின் (கோரைப்) பாய் முடைதலுமே!

இந்த வரலாற்றுப் பின்னணியுடன் –

இப்பொழுது அய்யம்பேட்டை சக்கராப்பள்ளிக்குள் நுழையப் போகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் தமிழகப் பயணங்களில் தொடர்வண்டியே (ரயில்) மிக விருப்பு.

அந்த வகையில், தஞ்சாவூரிலிருந்து அய்யம்பேட்டை நிலையம் வந்தடைந்து ஊருக்குள் நடைப்பயணம் செய்ய வேண்டிய பெருவீதி நான் போட்டிருக்கும் திட்டத்திற்கு ஒத்து வராது எனத் தெரிந்து வேண்டாவெறுப்பாகப் பேருந்துப் பயணம்!

கோவில்களின் நகரம் கும்பகோணம் செல்லும் 40 கிலோ மீட்டர் ராஜபாட்டையில் என்னையும் ஒரு 'குட்டி ராஜா' வாகக் கருதிக் கொண்டு பயணித்தால், 17 ஆம் கி.மீட்டரில் இறங்குவதற்குள் விழி பிதுங்கிப் போனேன்.

பேருந்துப் பயணங்களில் பெண்களே மிகுதி.

தப்பித் தவறி உரசல் ஏற்பட்டு விட்டால் உடம்பில் உராய்ந்து விட்டால், ``செருப்பு, பிஞ்சி போகும்'' எனக் கூச்சல்.

நடக்க இருந்தது!

நல்ல வேளை!

செருப்புப் பறந்து வருவதற்குள் ``அய்யம் பே...ட்.... டேய்!... கோயீலடீய்.....'' எனக் கத்தி நடத்துநர் வெளியே தள்ளினார்! தப்பினேன்!

முதல் கள ஆய்வே அமர்க்களமாக ஆரம்பித்தது!

சக்கராப்பள்ளிக்குள் நுழைய 'நடராஜா'வில் சில நிமிடங்கள் செல்லும். ஏற்கனவே இரு தடவைகள் மர்ஹூம் '**பி.ஏ. ஹாஜியார்**' ஏற்பாட்டிலும், மாமனிதர் '**ஜம் ஜம் ஹாஜியார்**' அழைப்பிலும் வந்தவனே!

அப்பொழுது வாகன வசதிகள் இருந்தன.

இப்பொழுதோ வித்தியாசமான பயணம்! நடந்து, நடந்து, அங்கும் இங்குமாகப் புகுந்து, தகவல்கள் சேகரிக்க வேண்டும். புதையல் தேட

வேண்டும்.

ஆக, எந்த ஊர்தியையும் விரும்பாமல் ஒரு பெரிய கோரைப் பாயைப் போல படர்ந்து நீண்டு போய்க் கொண்டிருந்த கும்பகோணம் நெடுஞ் சாலையில் கொஞ்சம் தூரம் நடந்தே போய் அந்த முதல் சந்திப்பை வைத்துக் கொள்ள விரும்பினேன்.

நான் நடை பயிலத் துவங்கிய பாதை ஒரு காலத்துப் ‘பாய்க்கார வீதி’யாகவும் இன்றைய ‘காயிதே மில்லத் சாலை’யாகவும் பரிணமித்துள்ளது என்பதுடன் –

இங்கே ஒரு காலத்தில் இலுப்பைத் தோப்பாக இருந்த ஒரு பகுதி இன்றைக்கு **‘மில்லத் நகர்’!**

இது சக்கராப்பள்ளி கிராம ஊராட்சிக்கு உட்பட்ட ஒரு ‘நகர்’.

‘நகர்’ என்பதை வைத்து, இலங்கை போன்று வெளி நாடுகளில் இருப்போருக்கு மலைப்புத் தோன்றும்!

வேண்டாம்! இரண்டொரு பெருந்தெருக்களைக் கொண்ட வீட்டு வசதி வாய்ப்புகள் உள்ள ஒரு பகுதியே நகர்!

இதில் ஓர் அதிசயம்! ஓரளவே சனத்தொகையும் (அதிலும் அலைகடலுக் கப்பால், அனேகர்!) ஊராட்சியாகவும் உள்ள கிராமத்தில் **21 நகர்கள்!**

**கனி நகர், தொக்கை கனி நகர், அஹமத் நகர், ஹக்கீம் நகர், ரெஜியா நகர், சாதிக் நகர், ஹக்கீம் நிஜாம் நகர், இபுராஹிம் நகர், காதிரிய்யா நகர், ஹவ்வா நகர், கே.ஜே.ஏ. நகர், ரசூல் நகர், லப்பா ராஜா நகர், ஆஜாத் நகர், நேரு நகர் (1ம், 2ம், 3ம் தெருக்கள்), ஜோதி நகர், திருநகர், காந்தி நகர், ஆர்.எஸ். முத்து நகர், ஏ.ஏ.கே. நகர், யூ.ஏ.ஜே. நகர், ஜமீல் நகர், பாவாஜி நகர், அப்துல் காதர் நகர், மைதீன் நகர், கே.எம்.கே. கமாலியா நகர் மற்றும் மில்லத் நகர் ஆக மொத்தம் 30.**

இந்த மில்லத் நகர் –

**இந்திய யுனியன் முஸ்லிம் லீகின்** தன்னிகரில்லாத் தனிப்பெரும் தலைவர், ஒப்பாரும் மிக்காரும் இல்லா மாமனிதர் மர்ஹூம் **இஸ்மாயில் சாஹிப்** அவர்களது கௌரவப் பெயர் **‘காயிதெ மில்லத்’**திலிருந்து பாதியை இரந்து பெற்று தன் வசப்படுத்தியுள்ளது.

இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் **ஹபீப் ரஹ்மான்** என்கிற எழுத்தாளர் ஒரு நூறு பக்கங்களில் **‘மில்லத் நகர் வரலாற்றுச் சுவடுகள்’** என்னும் சிறு ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார்.

மேலும் ‘அஞ்சுமன்’ மலர், மேலப்பள்ளிவாசல் மலர், கிரெஸண்ட் நூர்முஹம்மது, ஆலிமான் ஆர்.எம். ஜியாவுதீன் போன்றவர்களும் ஊரைப் பற்றிய வரலாற்று குறிப்புகளை பதிவு செய்துள்ளார்கள்.

என்றாலும் ஹபீப் ரஹ்மான் நூலை சாதாரணமாக ஒதுக்கிவிட முடியாது. இங்கு பரம்பரையாக வாழும் மக்களின் விபரங்களையும், வரலாற்றுச் செய்திகளையும் வழங்கியுள்ளார்கள்.

சரி, இந்த அலசலை இத்துடன் நிறுத்தியாக வேண்டியிருக்கிறது.

அதோ.... நான் எதிர்பார்த்த பள்ளிவாசலின் அழகுருவான மினரா பட்டொளி வீசிப் பளிச்சிடுகிறது.



அங்கே எனக்காக ஒருவர் வாயில்படிகளில் நெடு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறார், 85 வயது வாலிபராக!

தஞ்சைத் தரணியிலிருந்து புறப்படுகையிலேயே ‘இதோ வருகிறேன்’ என அலைபேசியில் அலட்டிய நான், எடுத்துக்கொண்ட காலம் பயங்கரம்!

பெரியவர் வெளியிலேயே கால்கடுக்க நின்று கொண்டிருந்தார்.

‘குடம்’ ஒன்றின் தன்மையானது எவ்வாறெனில், வட்ட வடிவில் அழகாக அமர்ந்தே இருப்பது.

ஆனால், இந்த ‘நிறை குடம்’ என் வருகையை எதிர் நோக்கி நின்றவண்ணம்!

நான், இலங்கையிலிருந்து புறப்பட்டு சென்னை வந்தடைந்து, இந்திய யூனியன் முஸ்லிம்லீக் பொதுச் செயலர். தமிழ் மாநிலத் தலைவர் **முனீருல் மில்லத் பேராசிரியர்** அவர்களை உடனே சந்தித்து, கள ஆய்வுகளுக்கு வழிகாட்டுதல்களும் நூலாக்கப் பணிகளுக்கு ஆசிகளும் பெற்ற பொழுது........

‘அங்கே சென்றதும், முதலில் சலாம் சொல்ல வேண்டிய மாமனிதர் எம்.ஏ. குலாம் மொய்தீன் ஹாஜியார் அவர்களே! 1975களில் சக்கராப்பள்ளி மில்லத் நகர் பிரைமரி முஸ்லிம் லீக் தலைவராகி பின்பு 1989லிருந்து சமீப காலம் வரையில் தஞ்சை மாவட்டத்திற்கே தலைவராக சேவையாற்றியவர் கள். அவர்களது வாழ்த்துக்களையும் பெறுவது அவசியம்’ என ஆணையிட்டார்கள்.

அபிமானிகளுக்கு இப்பொழுது புரிந்திருக்கும் நான் வந்தடைந்த வழித்தடம்!

**‘உருவத்திலும் உள்ளத்திலும் சமுதாயத்திற்காக உழைப்பதிலும் உயர்ந்த மனிதர்!’** என மறைந்த கவிஞர் தஞ்சை நபிநேசன் ஒரு பாடலில் பதிவு செய்திருக்கிறார்.

உண்மை. ஆனால் ‘அமைதியும் அடக்கமும் அவருக்கே சொந்தம்’ என்று பாட கவிஞர் ஏனோ தவறினார்.

மற்றொரு கணிப்பை நமக்கு ஏற்கனவே அறிமுகமாகி விட்ட

எழுத்தாளர் ஹபீப் ரஹ்மான் தன் நூலில் 26ம் பக்கத்தில் தந்துள்ளார். அதற்கும் மேலாகவும் ஒரு பதிவு அவசியப்படாது.

அப்பதிவு இப்படி இருக்கிறது!

**'இவர் இஸ்லாமிய காந்தியவாதி.**

***காந்தியம் எவ்வாறு அன்பு உடையோர்களால் அறிவு உடையோர்களால் விமர்சிக்கப்பட்டு, ஆத்திரம் கொண்டோர்களால் தூசிக்கப்பட்டதோ அது இவருக்கும் பொருந்தும். மில்லத் நகரில் இவர் முதல் ஹாஜியார். இவரின்றி இங்கு அரசியல் இல்லை.'***

1998 ஜுன் 20ல் அய்யம்பேட்டையில் தஞ்சை மாவட்ட முஸ்லிம் லீக் பொன்விழாக் கொண்டாட்டத்தில் 'செயல் வீரர்' விருது பெற்று, 'இன்று 85 அகவை ஆகி குழந்தைப் பருவத்திற்கு போய்க் கொண்டிருக்கிற மாமனிதர் முன் நிற்கிறேன்' என்ற பெருமையுடன் –

'அஸ்ஸலாமு அலைக்கும், எனக்காக நெடுநேரம் காத்திருப்பதற்கு மன்னிப்பு வேண்டும். நான் நேரம் காப்பதில் மன்னன். ஆனால், தமிழ்நாட்டில் நடைமுறை சாத்தியமில்லை''!.

''புரியுது! 'புரியுது! மொதல்லே லுஹர் தொழுகை. உடனே எங்கள் ஊர் பிரியாணி, அப்புறமாப் பேச்சு!''

''அம்மாடி! பிரியாணி என்றால் இப்பவே ஓட்டம் பிடித்து விடுகிறேன். எந்த ஊர் பிரியாணியும் எனக்குச் சரிப்பட்டு வராது!''

''சரி, சரி! சைவம்! சைவம்! இதோ, பாங்கு சொல்லப் போகிறார்கள்!''

இப்படியே எங்கள் ஆரம்ப உரையாடல் அமைந்தது.

அங்கே பள்ளிவாயிலின் ஒருபுறத்தில் பதித்துள்ள கல்வெட்டில் என் கண் போனது. தொழுகையின் பின் அதுதான் முதல் கள ஆய்வு.

**பிஸ்மில்லஹி. ஹிஜ்ரி 1294–ம் வருசம். மஜீது சக்கராப்பள்ளி பாய்க்காரத் தெருவு கா முஹையதீன் பிச்சை அவர்களும் ஜமாஅத்துகளும் பொது பணத்தைக் கொண்டு கட்டப்பட்டது.**

– எனக் காணப்படும் வாசகங்களை அப்படியே தந்துள்ளேன். சில தமிழ்ப் பிழைகள் உள்ளன. புள்ளிகள், முற்றுப்புள்ளிகள் இடப்படவில்லை. முக்கியமாக 'மஸ்ஜித்' என்பது 'மஜீது' எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

'ஹி..... 1294' என்பதை வைத்து கி.பி. ஆண்டைக் கணக்கிடும் பொழுது '1873' கிடைக்கும். அந்த வகையில் இப்பொழுது 140 ஆண்டுகள் பூர்த்தி.

''ஆனா பள்ளிவாசலின் ஆரம்ப வரலாறுங்கிறது இதற்கும் முந்தியது. மறவர் குடியைச் சார்ந்திருந்து இஸ்லாத்தைத் தழுவி, பின்பு, 1711களில் திப்பு சுல்தான் தஞ்சை திருச்சி பகுதிகளை ஆண்ட சமயத்தில் குதிரைச் சேவகர்களாக சேவகம் புரிந்த சாம்பா ராவுத்தர் பரம்பரையார்கள் சிறு பள்ளியாக முஹ்யித்தீன் ஆண்டவர்கள் பெயரில் கட்டி இருக்கிறார்கள்'' எனப் பேச ஆரம்பித்தார்கள் ஹாஜியார் அவர்கள்.

''நான் இந்தப் பள்ளிவாசல் முத்தவல்லி என்கிறதுக்காகவோ, தஞ்சாவூர் மாவட்ட முஸ்லிம் லீக் மேனாள் தலைவரா இருந்தேங்கிறதுக்காகவோ அய்யம்பேட்டை சக்கராப்பள்ளியில இதுதான் முதல் பள்ளின்னு தவறான தகவல் தர மாட்டேன்.

''ஒலகத்திற்கு நான்கு திசைகளை அல்லாஹ் படைச்சது போல, ஒரு காலத்தில் இந்த அய்யம்பேட்டை சக்கராப் பள்ளிக்கும் நாலு'' தான்.

''மேலத் தெரு, கீழத்தெரு, தெற்குத் தெரு, வடக்குத் தெருன்னுதான் அமைஞ்சிருந்தது. அப்புறமா பத்து! இப்போ நூறைக் கடந்த மாதிரி இருக்குது!

''மேற்கே மேலப்பள்ளி வாசல்''னு ஒன்னும், கெழக்கே பூப்பள்ளி வாசல்னு. இப்போ மேலப்பள்ளிவாசலை ஜாமியா மஸ்ஜித் என்று அழைக்கிறோம். பூப்பள்ளிவாசல் சுமார் 350 ஆண்டு கால வரலாற்றை உடையது. இன்னமும் அதன் பழைமை மாறாது இருக்கிறது. இங்கு இஸ்லாமிய கலாசார பேரவை இயங்குகிறது. இதன் மூலம் காலை – மாலை மக்தபு மதரஸா, வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் குர்ஆன் தப்சீர் அறிவுரை. ரமலான் மாதத்தில் பெண்களுக்கான தராவீஹ் தொழுகை, ஹஜ்ஜுக்குச் செல்பவர்களுக்கு ஹஜ்ஜுப் பயிற்சி முகாம், பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் பொது நூலகம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. முதலாவதுக்கு 400–500 வருச சரித்திரமும் ரெண்டாவதுக்கு 300–350 வருட சரித்திரமும் இருக்கு.

''ஆனா, இன்றையத் தேதியில பதினாறு, பதினேழு பள்ளிவாசல்கள்! தவ்ஹீது பள்ளிகள் தனியா ரெண்டு. இறைநேசர்கள் நினைவிடங்கள் ஏழு! ஆனா மக்கள் தொகையோ பத்தாயிரத்துக்கும், பதினோராயிரத்துக்கும் இடைப்பட்டது தான். அதிலேயும் ஆம்பிளைகள் அனேகம் வெளிநாட்டில் தான்! ஊருக்குள்ள போகும் போது இன்னும் செல முக்கியமானவங்களை சந்தியுங்க கட்டாயமா! உங்களப் பாத்தா பெரிய துருவல் ஆசாமியாத் தெரியுது'.

நான் வெடிச் சிரிப்பு சிரிக்க வேண்டி ஏற்பட்டது!

''உண்மை! துருவல் ஆசாமிதான்! ஆனால், தேங்காயை அல்ல! தேடலில் துருவுவது மட்டுமல்ல, தோண்டி எடுக்கவும் இயலும்! சகோதரர் ஆலிமான் ஆர்.எம். ஜியாவுதீன் ஏற்கனவே சில நூல்களையும் சிறப்பு மலர்களையும் கிடைக்கச் செய்திருந்தார். தேடல் போட்டேன். துருவி ஆராயவும் செய்தேன்' என்றேன்.

‘‘பிரயோஜனப்பட்டதா?’’

‘‘ஓரளவுக்குத்தான்! இதுவரை வெளியானவற்றில் போதுமான அளவுக்கு பள்ளிவாசல்கள் வரலாறும், இறை நேசர்கள் புகழும், முஸ்லிம் லீக் வளர்ச்சிகளும், நிகழ்வுகளும் பதிவாகி உள்ளன. நானும் ஈயடிச்சான் காப்பி பண்ணுவதா என்று பெரும் யோசனையாக இருக்கிறது!’’

இப்பொழுது ஹாஜியாருக்குப் பெரும் சிரிப்பு!

‘‘உண்மை தான். காப்பி குடிச்சிக்கிட்டு, காப்பி அடிக்கக்கூடாது. அய்யம்பேட்டை சக்கராப்பள்ளியில் இன்னும் வெளிச்சத்திற்கு வரவேண்டியது இருந்தா நிச்சயமாக அவன் உதவி கிடைக்கும்’’

‘‘யார்? படைச்சவனைத் தானே சொல்றீங்க?’’

‘‘வேற யாரச் சொல்லுவேன். எல்லாம் அவன் எண்ணப் படியும் திட்டப்படியும்’.

கடிகாரத்தைப் பார்த்த பொழுது தற்காலிகமாக ஹாஜியாரிடமிருந்து விடைபெறும் வேளை ஏற்பட, ஊருக்குள் நுழைய இலேசான வழி கேட்டேன்.

‘‘இதோ..... பள்ளிவாசலுக்கு நேர் எதிர் தெரியுற பாதைக்குள்ள நுழைஞ்சா சில அடிகளிலேயே ஒரு பழைய சிவன் கோவில். அதுக்கு எதிரா உள்ளது கண்டியன் தெருவுங்கிற பாரூக் தெரு. உள்ளூராட்சி மன்றம் அங்கேதான். புதிய தலைவர் துரை புர்ஹானுத்தீன் நல்லபடியா வரவேற்பார். அவரைப் பாருங்க, அப்படியே புரோகிராம் போட்டுக்குங்க!’’

எழும்பி முஸாபாஹா செய்து இரண்டு அடிகள் எடுத்து வைத்த நேரத்தில் –

‘‘உங்களுக்கு எல்லா வசதிகளையும் ‘ஜம் ஜம் ஹாஜியார்’ மகனார் மில்லத் இஸ்மாயில், அவர்களுடைய ரஹ்மானியாத் தெருவு வீட்டில் செய்திருப்பதாக ஆலிமான் ஆர்.எம். ஜியாவுதீன் சொன்னதாலே நான் எதையும் செய்யல்லே. ஊராட்சித் தலைவர் தம்பியைப் பின்னாலே பார்க்கலாம்னா ஆட்டோ ரெடி பண்றேன். ஜம் ஜம் ஹாஜி வீட்டுக்கே போயிடுங்க!’’

‘‘இல்லே! உங்களைப் பார்த்தாச்சு! பள்ளிவாசல்லே தொழுதாச்சு! இனி, நான் சிவன் கோவிலப் பார்க்கணும்!

ஹாஜியார் வியப்புடன் என்னைப் பார்க்கத் தொடங்கி விட்டார்கள்!

நான் ஒரு விசித்திரமான ஆய்வெழுத்தாளன் என்பதைப் புரிய சில நாட்கள் எடுத்தன.

**ஜாமியா மஸ்ஜித் அன்றும் இன்றும்**
**(சுமார் 400-500 ஆண்டுகள்)**





மனித மனதுக்கு இதமளிக்கும் இறைவழிபாட்டின் தலங்கள் பள்ளிவாசல்களாகும். மனிதகுலம் பள்ளிவாசல்களுடன் தன்னைப் பிணைத்துக்கொள்ளும் காலமெல்லாம் வாழ்க்கைப் பாதையில் வெற்றி நிச்சயம்.

'பள்ளியுடன் தொடர்பு கொண்டவர் இவ்வுலகில் அமைதியான வாழ்க்கையைப் பெறுவதோடு மட்டுமல்லாது; மறுஉலகில் அனைத்து மாந்தரும் அலைமோதிக் கொண்டிருக்கும் வேளையில், அல்லாஹ்வின் அர்ஷென்னும் அருள் நிழலில் வீற்றிருக்கும் ஏழு வகையான மக்களில் ஒரு வகையினராக நிம்மதியாக இருப்பர்' என நபிமொழி குறிப்பு உணர்த்துகிறது.

அமைதி தவழும் இறையில்லங்களுடன் தொடர்பு கொள்வோம்.

– மௌலானா மௌலவி, மர்ஹூம் அல்ஹாஜ் எஸ்.ஆர். ஷம்ஷுல் ஹுதா ஆலிம்

**– நீடூர் நெய்வாசல் அரபுக் கலாசாலை முதல்வர்**

# உ.

# தஞ்சைத் தரணியின் தனிப் பெரும் பள்ளிவாசல்

பெரியவர் குலாம் மைதீன் அவர்களிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டதைப் போல நான் கோவிலை நோக்கிச் சென்றாலும் –

எனக்கு வேலை அங்கில்லை!

அதைக் கடந்து அதிவேகமாகச் சென்றேன். 'சித்தீக் பஜா'ரை நோக்கி'

இலங்கைக்குப் பொருட்கள் வாங்கிச் செல்ல அல்ல'!

நானூறு ஆண்டுகளுக்கு மேலான வரலாறு வைத்துள்ள மேலப்பள்ளி வாசலில் தொழுதிட!

'ஹிஜ்ரி 1423 ஷவ்வால் பிறை 29க்குச் சரியான 03.09.2003 வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப் பிறகு 'ஜாமிஆ மஸ்ஜித்' எனப் பெயர் சூடி, தஞ்சைத் தரணியின் தனிப்பெரும் பள்ளிவாசலாக, இறை இல்லமாக இலங்கிக் கொண்டிருக்கும் இனிய வணக்கத்தலம்

அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி மக்களால் 'தாய்ப் பள்ளி'யாக வரிக்கப்படுவது.

திறப்பு விழா கண்ட ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு மிகச் சாமான்ய னான நான் இங்கே வந்து தலை வணங்கும் சந்தர்ப்பம் பெற்றிருக்கிறேன். அல்ஹம்துலில்லாஹ்

ஒரு வெள்ளிக்கிழமை, பசூர் (பசுபதி கோவில்) பள்ளிவாசல் திறப்பு விழாவில் எனக்கு வழங்கவிருந்த கௌரவத்தையும் பெறச் செல்லாமல் இங்கு ஜும்ஆவில் சிரம் தாழ்த்தினேன்.

– இன்னொரு வெள்ளிக்கிழமை காத்திருக்கும் கால அவகாசம் இல்லாததால்.

ஏற்கனவே, நீடூர் – நெய்வாசல் ஆய்வு நூலின் பொழுது எனக்குத் தெரிந்த உலமாப்பெருந்தகையான **மர்ஹூம் ஷம்ஷுல் ஹுதா ஹஜ்ரத்** அவர்களது மணிமொழியில் (முன்பக்கம் உள்ளது) 'மன அமைதியை இழந்த மனிதனுக்கு மருந்து எங்கே (நிம்மதி) கிடைக்கும்' என அறிவுறுத்தப்படுகிறது.

இறையில்லங்களுக்கு உரிய அந்தத் தனித்துவத்திற்கு ஓர் இலக்கணமாக வரலாற்றுப் புகழ்மிகு இந்த ஜாமிஆ மஸ்ஜித் இப்பகுதி மக்களது முதன்மைப் பள்ளிவாசல்.

சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்னர் கி.பி. 1500 மத்தியில் இக்கிராமத்திற்கு வருகைபுரிந்து தீனை பரப்பிய **ஷைகுல் மஷாயக் ஹழரத் சேக் மீரான் ஆலிம் வலியுல்லாஹ் (ரஹ்)** அவர்கள் மேலப்பள்ளிவாசலுக்கு எதிரே (தற்சமயம் அலுவலகமாக இயங்கி வரும்) **'நகரா மேடை'** என்றழைக்கப்படும் இடத்தில் அமர்ந்துதான் மார்க்கப் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள் என்று வரலாறுகளில் காணக் கிடைக்கிறது.

இம்மாமனிதர் குறித்த ஓர் அற்புதமான பாடலை ஷாகுல் ஹமீது புலவர் அவர்கள் யாத்துள்ளார்கள்.

அதைப் படித்தால் அன்னாரைப் பற்றி மட்டுமல்ல; அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி புகழ் மணத்தையும் ரம்மியமாக நுகர்ந்து பார்த்திடலாம்.

சில விநாடிகளில் நுகர்வதில் செலவழித்து மேலே மேலே செல்வோமே! என்ன குறைந்து விடும்?

**எல்லா படைப்பினுக்கு மேகப்பொருளாய் நிறைந்த**
**அல்லாவைப் போற்றி ஐந்தாரையுட் கருதிச்**
**சொல்லும் அய்யம்பேட்டை வளர் தூய ஒலமீரால**
**முல்லரசர் புகழ்பாட உண்மை நபி காப்போமே**
**.... ஆசானைத் தேடி ஏகும்போதே – வெள்ள**
**மடங்கா திருகரைத் தடங்களின் மீதே**
**கூசாமல் நடனமஞ்சாதே**
**நேசமுடனேகிய வாசப் பிரகாசறிந்த**
**நேரம் வரவே ஷைகு மீரானொலி மீதில்**
**நஞ்சவரம் புலி கரடி நாடா தொடுங்கியே பணிய**
**நாகரீகமான தயவாரிய வாகுரை புரிந்தோரே**
**மிஞ்சு புகழ் சிறந்த செஞ்சனருள் திருப்பொன் சரணருள்**
**வெற்றியருள் பெற்ற ஷைகு மீரானால மொலியே**
**ஈராறு வருடங்கானில் நின்று**
**போகான புனலீராறும் நேருறப் பயின்று**
**ஓரார் பதியினிலே சென்று – முகம்மதொலி**
**யோதுஞ் சுழி நிலை நின்று.**

**– (ஷாகுல் ஹமீது புலவர் பாடலிலிருந்து...)**

ஓலைச்சுவடிகளில் இடம் பெற்ற இப்பாடல் மூலம் ஹலரத் ஷைகு மீரா ஆலம் வலியுல்லாஹ் அவர்களின் புகழ் அக்காலத்தில் தென்னக மனைத்திலும் பரவியிருந்ததை அறிய முடிகிறது.



அவ்வாறாயின், அவர்கள் வருகை தர முன்னமேயே ஒரு சிறிய இடத்திலாவது இறையில்லமொன்று இங்கு இருந்திருக்க வேண்டுமென்பது ஆய்வாளர்களுக்குப் புலனாகும்.

அது, பள்ளிவாசலின் காலம் 450 ஆண்டுகளையும் தாண்டியே செல்லும்.

என்றாலும், அல்லாஹ்வே பூரணமாக அறிந்தவன்.

அது அன்று சக்கராப்பள்ளியின் ஒரேயொரு பள்ளிவாசல்.

அப்பொழுது நிர்வாகச் செலவினங்களை ஊர் மக்களே பார்த்துக் கொண்டார்கள்.

இப்பொழுதும் அப்படியே!

1910ல் கல்யாணக் கூடத்தின் கீழ்வாசல் பள்ளமாக இருந்ததை உயர்த்திக் கட்டியிருக்கிறார்கள்.

1925ம் ஆண்டில் பூதூரரான் கனம் **ஜெய்னுலாபுதீன் சாஹிப்** அவர்களால் வெளிப்புற மண்டபத்தை உடைத்து மாடியாகக் கட்டப்பட்டுள்ளது.

1937ல் பேஷ் இமாம், முஅத்தீன் ஆகியோர் ஊதியங்கள் கனம் மீ. **ஜெய்னுலாப்தீன் சாஹிப்** அவர்களால் ஏற்கப்பட்டு பன்னிரண்டு மா நஞ்சை நிலம் வக்ஃப் செய்யப்பட்டுள்ளது.

1952–ல் எஸ். காதர் பாட்சா சன்ஸ் சார்பாக குடிதண்ணீர் தாங்கியும் மோட்டாரும் அமைந்தன.

1943ஆம் ஆண்டில் மாங்குடி **கனம் கமால்தீன் சாஹிப்** அவர்களால் மஸ்ஜித் மேல்பகுதி இருபுறங்களிலும் தொழுகை அழைப்பு (பாங்கு) மேடைகள் அமைக்கப்பட்டன.

1952–ல் எஸ். காதர் பாட்ஷா சன்ஸ் சார்பாக குடிதண்ணீர் தாங்கியும் மோட்டாரும் அமைந்தன.

இக் கால கட்டத்தில், சுமார் இருபத்திரண்டு ஆண்டுகள் முத்தவல்லியாக **மர்ஹூம் பி.மு. முஹம்மது கனி சாஹிப்** அவர்கள் சேவையாற்றியுள்ளார்கள்.

பின்னர், **கனம் அ.தா. ஆதம் சாகிப்** அவர்களால் நிர்வாகம் மாமா ராவுத்த **எம்.ஏ. மதார்ஸா** அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1952ஆம் ஆண்டிற்குப் பிறகு **ஜனாப் ஹாஜி எஸ்.கே. அப்துல் ரஹ்மான்** சாகிப் அவர்களால் குளக்கரைச் சுவர்கள் சீரமைப்பும், முன்பகுதியிலும், உட்பகுதியிலும் கருங்கல் தளமும், மின்விசிறிகள் பதின் மூன்றும், ஹவுளை உயர்த்திக் கட்டுதலும், ரமழானில் தராவீஹ் தொழ வைத்த ஹாஃபிழ்களுக்குப் பொருளாதார உதவிகள் புரிந்தும், மவ்லீது மஜ்லிஸ் (மீலாது)கள் நடத்திச் சிறப்பித்து பற்பல நல்லேற்பாடுகள் நடந்தேறியுள்ளன.

இதே ஆண்டில் வீசிய புயலின் கோரத்தால் மஸ்ஜிதின் உள்வாசல் கம்பிகள் நாசமடைந்ததால், அதன் நாற்புறங்களிலும் சுவர் எழுப்பி பெரும் பெரும் ஜன்னல்களைப் பொருத்தி, கல்யாணக் கூடம் போல் கட்டியதும் –

மஸ்ஜிதின் உட்புறச்சுவர்களில் சலவைக் கற்களைப்பொருத்தி, தளவார்சு செய்ததும், எட்டு ஜன்னல்களை தென்புற சுவர்களில் பொருத்தியதும், தென்புற திண்ணையில் சிமெண்ட் கிராதிகளைப் பொருத்தி அழகுற செய்ததும் **அல்ஹாஜ் உச்சி அப்துல் காதர் சாஹிப்** அவர்களாகும்.

குளத்தில் தண்ணீர் வசதிக்காக போர் போடப்பட்டு தண்ணீர் மோட்டாரும் அன்னவர்களாலேயே அமைக்கப்பட்டது.

1965களில் ஹவுலுக்கு முன்புறம் அழகிய கட்டடம் அமைந்தது. இதற்குத் தூண்டுகோலாயிருந்ததோடு, 1972ம் ஆண்டில் பெருத்த பிரயாசையுடன் நிதி திரட்டி, மஸ்ஜிதை ஒட்டியிருந்த தென்னந்தோப்பை கிரயத்துக்கு வாங்கி, மஸ்ஜிதின் சொத்தாக்கி, பள்ளிவாசல் பணிகளிலே துள்ளிக்குதித்து செயல்பட்ட செயல் மறவர் கனம் காதியா **ஏ. அமீர் பாட்சா** அவர்களாவர்.

1994–ல் ஹாஜி மர்ஹபா பஷீர் அஹமது அவர்களால் ஹாஜி தொக்கை முஹம்மது கனி மர்ஹூம் அவர்களின் நினைவாக மின்சங்கு வக்ப் செய்யப்பட்டது. ஜமாத் தலைவர் ஹாஜி எம்.பி. முஹம்மது காசிம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மற்றும், மஸ்ஜித் விஸ்தரிப்பு பணிகளில் முனைப்புடன் ஈடுபாடு கொண்டு செயலாற்றியவர்கள் :

**மர்ஹூம் மாமா ராவுத்த மதார்ஸா சாஹிப், காதியா முஹம்மது, சுல்தான் சாஹிப், எஸ்.பி. ஜமால் முஹம்மது சோனி, மு. முகையதீன் பாட்சா சாஹிப், ஜே.எச்.சி. அப்துல் ஸமது, ஜே.எச்.சி. அப்துல் ஹமீது, வாலன், இ.அப்துல் காதர் சாஹிப், அல்ஹாஜ் எம்.ஏ. ரஹீம், பி.ஏ., கான், அப்துல் வஹாப் சாஹிப், வாலன் ஜமால் முஹம்மது சாஹிப், கான் முஹம்மது இப்ராஹீம், கான்முஹம்மது பாட்சா**

மற்றும் குடத்திலிட்ட விளக்காக பணியாற்றிய நல்லோர்கள் யாவரும் அல்லாஹ்வின் அருளுக்கும், அன்புக்கும் உரியவர்களே.

இன்று, ஜாமிஆ மஸ்ஜிதுக்கும், அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி முஸ்லிம் பரிபாலன ஜமாஅத் சபைக்கும் உள்ள உறவும், நெருக்கமும் நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

சபையின் நிர்வாக அலுவலகமே அங்குதான்!

அல்லாஹ்வின் அருள்மழை அது!



அதன் தலைவருக்கும் எனக்கும் ஏற்பட்ட சந்திப்பை 6ஆம் அத்தியாயத்தில் அளிக்கவுள்ளேன்.

இந்த இடத்தில் ஊராரின் ‘உழைப்பு’களை வெளிச்சமிட உத்தேசம்.

பற்பல சூழ்நிலைகளில் பழைய பள்ளிவாசல் கூட்டமைப்பில் ஏற்பட்டு வருகிற நிலையையும், பள்ளிவாசல் தரை மட்டமும், பாதையின்போக்குவரத்து மட்டமும் ஒன்றாகி விடும் அளவுக்கு தெரு மாற்றமும் ஏற்படுவதையும் உடனடி கவனத்தில் கொண்டு, ஊர்க்கூட்டம் உடனடியாக கூட்டப்பட்டது. பெரியவர்களிடமும் பொற்கிழி உள்ளவர்களிடமும் ஆலோசிக்கப்பட்டது.

முதல் ‘பொற்கிழி’, முஸ்லிம் லீக் பிரபல சமூக ஊழியர், நான் கற்ற இலங்கை ஸாஹிராக் கல்லூரியில் எனக்கு ரொம்ப சீனியர், **டாக்டர் ஏ.எம். ஜியாவுதீன்** அவர்கள் வழங்கிட, **மர்ஹபா பஷீர், நாட்டக்கார ஹாஜி ‘அப்துல் ரசீது**’ எனப் பலராலும் பள்ளிக்கொடைகள் அறிவிக்கப்பட்டு, பணிகள் துவங்கின.

முதல் பணியாக மஸ்ஜித் புனர் நிர்மாண செயலவையினர் (கட்டுமானக் கமிட்டி) நியமிக்கப்பட்டனர்.

**டாக்டர் ஹாஜி ஏ.எம். ஜியாவுதீன் சாகிப் (பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் சீப் எக்ஸிகியூடிவ்), நாட்டக்காரர் ஹாஜி அப்துல் கரீம் (தலைவர்), கொட்டப் பாக்கி ஹாஜி ஏ. அப்துல் கபூர் (துணைத்தலைவர்) சிம்லா ஹாஜி பி.ப. முஹம்மது நஜீப் (செயலாளர்), மஷாயக் ஹாஜி என்.எம். ஆரிஃப் பாட்சா (பொருளாளர்), மஷாயக் ஏ.சையது அஹமது தாஜுதீன் (முத்தவல்லி).**

மேற்படி செயலவையினர் புதிய நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல ஃபத்வா ஒன்றையும் பெற வேண்டியிருந்தது.

இது எனக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது.

ஆனால், அதுதான் மார்க்கம் என்பது!

நான், ‘‘**நீடூர் நெய்வாசல்**’’ நூல் எழுதும் போதே ஒத்துழைப்பு நல்கியிருக்கிற உன்னதமான பேராசிரியர், ஊரின் இஸ்லாமியக் கலாசாரப் பேரவைத் தலைவர், **மௌலவி பீ.எம். ஜியாவுத்தீன்** சகிதம், தலைவரும், செயலாளரும் வேலூர் மத்ரஸா பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் சென்று ஃபத்வா பெற்றார்கள்.

எதற்கெனில், இறைவனது இல்லத்தில் சிறிதளவைப் போக்குவரத்துப் பாதைக்கு விட்டு விடலாமா என்பதில் மார்க்கத் தீர்ப்பை எதிர்பார்த்து!

மிகக் குறுகிய சாலை, போக்குவரத்து இடையூறு, வரும் வாகனங்கள் பள்ளிவாசல் மீதே மோதுவது போன்ற அசௌகரியம் எனப் பல கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஃபத்வா அனுமதி பெறப்பட்டது.

புனர் நிர்மாணப் பணிகள் துவங்கிய நாளிலிருந்து புதுத் திறப்பு விழா காணும் வரையில் இரவென்றும், பகலென்றும் பாராமல், நாளெல்லாம் பொழுதெல்லாம் ஒரு 'தேனீ'யின் நிலையில் செயல்பட்டிருக்கிறார் ஒருவர். அன்னார் **சிம்லா ஹாஜி பி.ப. முஹம்மது நஜீப்** அவர்கள். (துற்சமயம் நகர இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர்)

ஜமாஅத் சபையின் தலைவர், **ஹாஜி அப்துல் கரீம்** அவர்களுடன் அலைகடலுக்கும் அப்பால் பல நாடுகள், தேசங்களுக்கும் பறந்து திரிந்து, 'பொற்கிழி'களைக் குவித்து வந்தார்.

தமது பயணத்தின் அழகிய அனுபவங்களை அவர் சொல்லச் சொல்ல கேட்டுக் கொண்டிருக்கலாம். அருமையான பயணக் கட்டுரையாகவும் வடித்திருக்கிறார்கள்.

ஓரிடத்தில் அவர்கள் பதித்திருப்பது இதயத்தை நெருடுகிறது.

***'தான் ஆடா விட்டாலும் தன் சதை ஆடும் என்பார்களே அதுபோன்று சகோதரர்கள் யாவரும் தங்கள் பங்களிப்பை தாங்கள் உழைக்கும் நாடுகளில் குறைவின்றிச் செய்தார்கள். அல்லாஹ்விற்காக அல்லாஹ்வின் ஏவலால் இறையில்லம் உருவாக்கப் பணியாளர்களாக நியமிக்கப்பட்ட எங்கள் மீது பாசமும் நேசமும் கொண்ட பிள்ளைகளாக உதவினார்கள். அந்த உணர்வில் கலந்த நமது பந்தங்கள் என்றென்றும் நீடித் திருக்க அவனே துணை!***

இப்போதைய ஜாமிஆ மஸ்ஜித் வளாகத்தில் விருந்துக் கூடம், கணினி மயமாக்கப்பட்ட அலுவலகம், முதலுதவி மருத்துவ மையம், சுகாதாரப் பணிக்கென டிராக்டர் வாகனம் என்றெல்லாம் வசதிகளும், சேவைகளும் உள்ளன.

2013ல், எனது பார்வையில், 'ஊருக்கு அல்லாஹ்வின் ஒரு பாதுகாப்பு அரண்'' போன்று அத்தனை அழகிய உயர்ந்த மினராவுடன் காட்சி அளிக்கிறது.

அல்ஹம்துலில்லாஹ்....




## ஒரே பார்வையில்...

# அய்யம்பேட்டை - சக்கராப்பள்ளி இறையில்லங்கள்

### கீழப்பள்ளிவாசல்



ஹஸ்ரத் முஹையத்தீன் அப்துல் காதிர் ஜிலானி (ரலி) 1944 மார்ச் 24ந் தேதி (ஹிஜ்ரி 1363) மீரட் மௌலானா அல்ஹாஜ் ஷாஹ் முஹம்மது, அப்துல் அலீம் சித்தீக் சாஹிப் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.
1947 பிப்ரவரி 28ந் தேதி (ஹிஜ்ரி 1366) வெள்ளிக் கிழமை அன்றைய சென்னை மாகாண முஸ்லிம் லீக் தலைவர் காயிதெ மில்லத் எம். முஹம்மது இஸ்மாயில் சாஹிப் தலைமையில் ஷெய்குல் இஸ்லாம் ஷம்சுல் உலமா மௌலானா அல்ஹாஜ் ஷபீர் அஹ்மத் சாஹிப் உதுமான் அவர்கள் முன்னிலையில் மௌலவி முப்தி முஹம்மது ஷபீஉ சாஹிப் அவர்கள் திறந்து வைத்தார்கள்.



### ஹஸன்ஷா மஸ்ஜித்

16வது நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னரான துளசி மஹாராஜாவினால் மானியமாக வழங்கப்பட்ட இம் மஸ்ஜிதை விஸ்தரித்துக் கட்டிட முயற்சி செய்து வெற்றி கண்டு 29.1.1995 அன்று திறக்கப்பட்டது.



## மில்லத் நகர் மஸ்ஜித்

1874ஆம் ஆண்டு மில்லத் நகர் மெயின் ரோட்டில் கா. முஹையத்தீன் பிச்சை இராவுத்தர் மற்றும் ஜமாஅத்தார்கள் சேர்ந்து நிர்மாணிக்கப்பட்ட இந்த மஸ்ஜித் ஒட்டு கருங்கற்கள் பாறைகளால் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.
அன்பு எம்.எம். ஹனீபா அவர்களால் இம் மஸ்ஜித் முழுவதும் இடிக்கப்பட்டு ஜமாஅத்தார்கள் ஒத்துழைப்புடன் புதிய வடிவமைப்பில் கட்டப்பட்டு 7.8.2009 அன்று திறக்கப்பட்டது. பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் மற்றும் மார்க்க அறிஞர்களும், அரசியல் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## ஹைரோடு முஹையத்தீன்

ஆண்டகைப் பள்ளிவாசல்
ஈயக்கார அ. முஹம்மது காஸிம் கம்பெனியினரால் 1935ம் ஆண்டு முதல் மஸ்ஜிதாக தொடங்கப்பட்டது.
இம் மஸ்ஜித் வளாகத்தில் மாங்குடி முஹம்மதுஅலி பாபுஜி அவர்கள் தங்களது தாயார் பெயரில் சற்று விரிவாக்கப்பட்டது. கப்ருஸ்தானமும் இணைந்துள்ளது. தற்போது அதிக அளவில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்படுவதால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.





## மஸ்ஜித் ஹலீமா

1905ஆம் ஆண்டு ஹக்கீம் ந.அப்துல் ரஹ்மான் சாஹிப் அவர்களின் அரிய முயற்சியால் நிர்மாணிக்கப் பட்ட மணக்காட்டுப் பள்ளிவாசல் காலப்போக்கில் இப் பள்ளிவாசலை உச்சி ஏ. முஹம்மது அலி அவர்களால் புதிதாக வடிவமைத்து மஸ்ஜித் ஹலீமாக திறக்கப்பட்டது.

## ரயிலடி பள்ளிவாசல்

கனியார் ஹாஜி இ. முஹம்மது இப்றாஹீம் சாஹிப் அவர்கள் நிலம் வழங்கினார். பொது மக்களின் நிதியில் பள்ளிவாசல் உருவாக்கப்பட்டு 6101961ல் திறக்கப் பட்டது.
மத்ரஹயே தஃலீமுல் இஸ்லாம் என்ற பெயரில் பள்ளிவாசல் முன்பு புதியதாக கட்டிடம் கட்டி 12121993ல் திறக்கப்பட்டது. மேலும், இப்பள்ளிவாசல் இக்காலத்திற்கு ஏற்றாற்போல் முழுமையாக இடிக்கப் பட்டு புதிய வடிவமைப்பில் அமைத்து திறக்கப்பட்டது.



## மதகடி பஜார் முகையதீன் ஆண்டவர்கள் மஸ்ஜித்

1962 ஆம் ஆண்டு ஹாஜி கணியார் ஈ. தாவூத் சாஹிப் அவர்களால் நிலம் வழங்கப்பட்டு வக்பு செய்யப்பட்ட மதகடி பஜார் முகையதீன் ஆண்டவர்கள் மஸ்ஜித் 1979 ஆம் ஆண்டு புதிதாக மஸ்ஜித் நிர்மாணிக்கப்பட்டு பின்பு கட்டி முடிக்கப்பட்டது.



## மஸ்ஜித் ஃபாத்திமா பத்ர்

பழைமை வாய்ந்த பங்களாப் பள்ளிவாசலை அல்ஹாஜ் உச்சி அப்துல் காதர் சாஹிப் அவர்களால் புதுப்பிக்கப் பட்டு மஸ்ஜித் ஃபாத்திமா பத்ர் என புதிய பெயரில் 1051985ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. அல்ஹாஜ் தைக்கா ஷுஐபு ஆலிம் பி.ஏ., அமீரே ஷரீஅத் அபூஸ்ஸுஆத் அஹமது ஹஜ்ரத், பி. அப்துல் அஜீஸ் காதிரி மௌலானா, எஸ்.ஆர். ஷம்சுல் ஹுதா ஹஜ்ரத் சிந்தனைச் செம்மல் சிராஜுல் மில்லத் ஏ.கே.எஸ். அப்துல் ஸமத் சாஹிப் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## அல்மதீனா மஸ்ஜித்

மர்ஹூம் கருப்பூர் பக்கீர் மைதீன் அவர்களின் குடும்பத்தினரால் மஸ்ஜிதிற்காக நிலம் ஒதுக்கப்பட்டு, பொது நிதி வசூல் செய்து மஸ்ஜிதை பூர்த்தி செய்து 1971 – 996ம் ஆண்டு ஹிஜ்ரி 1417 ரபியுல் அவ்வல் பிறை 2ல் திறக்கப்பட்டது.






## ஆமீனா மஸ்ஜித்

சக்கராப்பள்ளி கீழ் மெயின் ரோடு ஹஜரத் ஷேம் சாஹிப் ஷெய்கு முஹம்மது ஷரீஃப் வலியுல்லாஹ் வளாகத்திலுள்ள ஆமீனா மஸ்ஜித்




## தாஜ் மஸ்ஜித்

காதியா கே.ஏ. அப்துஸ் ஸலாம் அவர்கள் தனது தாயாரின் நினைவாக 05.07.2002 அன்று தாஜ் மஸ்ஜித் திறக்கப்பட்டது.



## சபுரா மஸ்ஜித்

சக்கராப்பள்ளி ஏ.ஏ.கே. சபுரா கார்டனில் அமைந்துள்ள இப்பள்ளிவாசலுக்கு
ஆவூர் ஹாஜி ஏ. முஹம்மது பாரூக் குடும்பத்தார்கள்
இடம் வழங்கி 29.6. 2012 அன்று திறப்பு விழா கண்டார்கள்.



அய்யம்பேட்டை கே.எம்.கே. கமாலியா நகரில்

**மஸ்ஜித் நூர் அத் தவ்ஹித்**



சக்கராப்பள்ளி சாதிக் நகரில் டி.என்.ஜே.யின் மர்கஸ்

‘இஸ்லாமிய முன்னோர்கள் பிற மதத்தவரோடு ஒன்றிணைந்து சகிப்புத் தன்மையுடனும், மகிழ்வுடனும் வாழ்ந்து வந்துள்ளனர்.

உலகில் பற்பல இனத்தவர்கள் அவர்களின் நம்பிக்கையுடன் வாழ்ந்து வருவதை ஏற்றுக் கொள்ள இஸ்லாம் கூறுகிறது.

பிற மதத்தவரை விமர்சிக்கக் கூடாது. இழித்துப் பேசக் கூடாது; அவர்களின் கொள்கைகளை, மதத்தை, வணக்க வழிபாடுகளைப் பற்றி தேவையற்றுப் பேசக்கூடாது’

**– முனைவர் நஃபீசாள் பீவி**

**(‘ஆய்வுக் கோவை’ (2007) நூலின் கட்டுரையில் பக்.98)**

## 3.

## புதுப்பிக்க வேண்டிய பள்ளிவாசல்

சித்தீக் பஜார், மேலப்பள்ளிவாசல் ஜாமிஆ மஸ்ஜிதில் சிரம் தாழ்த்தி அதன் வரலாற்றுச் சிறப்பை அறிந்துணர்ந்த பின், நான் இப்பொழுது நிற்பது சக்கரவாகீஸ்வரர் கோவில் வாயிலில்.

ஒரு நடுநிலை கள ஆய்வாளன் அய்யம்பேட்டை சக்கராப்பள்ளியை ஆய்வுக்குட்படுத்தும் பொழுது திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற சக்கரவாகீஸ்வரர் கோவிலையும் தவிர்த்திட முடியாது.

அதனால் தான், ஊரின் ஒரு முஸ்லிம் அமைப்பு தங்கள் சிறப்பு மலரில் **‘இங்கு உள்ள சக்கரவாகீஸ்வரர் திருக்கோவில் காரணமாகவே இவ்வூருக்கு இப்பெயர் வந்திருக்கலாம்’ எனப் பதித்திருக்கின்றனர்.**

அதேபோல அய்யம்பேட்டைப் பகுதியில் இன்று வாழும் முஸ்லிம்கள்கூட சக்கராப்பள்ளியிலிருந்து குடிபெயர்ந்துள்ளார்கள் எனவும் குறித்துள்ளனர்.

மேலும், அய்யம்பேட்டை என்பதும் சற்று மருவியே வழக்கத்தில் உள்ளது என்பதைப் புரிய வைக்கிறது ஒரு குறிப்பு!

**‘‘நாயக்க மன்னர்கள் மூவரிடம் அமைச்சராக இருந்த, கோவிந்த தீட்சிதரை ‘கோவிந்த அய்யன்’ என்பர். அவரைக் கௌரவிக்கத் தீர்மானித்த செவ்வப்பநாயக்க மன்னன், சூலமங்கலம் இராமச்சந்திரபுரத்தின் கிழக்குப் பகுதிக்கு ‘அய்யன்பேட்டை’ எனப் பெயரிட்டான். பின்னாளில் இராமச்சந்திரபுரமும் இதனுடன் இணைந்து அய்யம்பேட்டையாக வழங்கி வருகிறது’.**

– இது அய்யம்பேட்டை விநாயகர் கோவில் கும்பாபிஷேக இதழிலும் காணப்படுகிறது.

பளிச்சென்று இருக்கும் என எதிர்பார்த்த கோவில் பழைமைத் தோற்றம் தந்தது.

ஒரு பெரிய பூட்டு தொங்கியது. அதுவும் பழம்பெருமை பேசியது. அவ்வப்போது மட்டும் பூசைகள் நடப்பது போலத் தோன்றியது.

ஏற்கனவே, வரலாற்றுக் குறிப்புக்களை வைத்திருப்பதால் எந்த அறங்காவலரையும், பூசகரையும் தேட வேண்டியதிருக்கவில்லை.

எனினும், கோவிலைச் சுற்றி வந்து ஆராய்ந்தபடி நின்றிருந்தேன்.

``அஸ்ஸலாமு அலைக்கும்''

பின்னால் குரல்.

``வ அலைக்குமுஸ்ஸலாம்''

வாலிபன் ஒருவன்!

``தம்பி யாரு?''

``ஒன்னும் கேக்கப்படாது. உங்களத்தான் நான் கேக்கணும்! போட்டிருக்கிற தொப்பியப் பார்த்தா, உருவத்தை கவனிச்சா, ஈமான் கொண்டவரா வயசானவரா இருக்கிறீங்க. கோவிலில் என்ன வேலை?''

போச்சுடா!

``என்னைக் கேக்குறதுக்கு நீ யாரு?'' என்று எதிர்க் கேள்வி போடாமல், அந்த துறுதுறுத்த இளைய தலைமுறையிடம் என் அறிமுக அட்டையை (விசிட்டிங் கார்ட்) அமைதியாக நீட்டினேன்.

''அட! நீங்க சிறிலங்காவா! இலங்கைப் பன்னூலாசிரியரா? ஆய்வாளரா? கோவில் ஆராய்ச்சிக்கா வந்திருக்கிறீங்க? வேண்டாம் பெரியவரே! வீண் வேலை! வேணுமின்னா இங்கே ஒரு பாழடைஞ்ச பள்ளிவாசல் இருக்குது. அத செலபேரு தக்கியால்னும் சொல்லுராங்க அத ஆராய்ச்சி பண்ணுங்களேன்! பக்கம்தான், வாங்க கூட்டிக்கிட்டுப் போறேன்.''

என்ன அதிசயம்! பதினைந்துக்கு மேற்பட்ட மஸ்ஜிதுகள் இருக்கிற இடத்தில் பாழடைந்ததும் ஒன்றா? ஏன் அப்படி?

எல்லா வல்லவன் அவன் திட்டப்படியும் எண்ணப்படியும் என்னை வழி நடத்த இந்த இளைஞனை அனுப்பியிருக்கிறானோ?

வியர்த்துப் போயிற்று. அவனை அரவணைத்துக் கொண்டேன்.

'பக்கம்னு சொல்லுறியேப்பா, நடந்தே போயிடலாமா?''

''ஆமா ரெண்டு மூணு நிமிடத்தில.....!''

வந்த வழியிலேயே திரும்பி நடை!

மீண்டும் தஞ்சாவூர் கும்பகோணம் நெடுஞ்சாலையைக் குறுக்கே கடந்து மில்லத் நகர் முஹியித்தீன் ஆண்டவர் பள்ளிவாசலைத் தாண்டினால், சில அடி தூரத்தில் பாதையிலிருந்து உள் வாங்கிய வளாகத்தில் ஒரு குடியிருப்பு. அமைதி தவழ்கிறது. அழகான சிறு சிறு வீடுகள் தென்படுகின்றன. தூரத்தில் ஒரு தர்காவும், சில அடக்கத்தலங்களும் கூடப் புலப்படுகின்றன.



நான் விவரத்தைக் கேட்பதற்குள் இளைய தலைமுறை விவரங்களை விரிவாகச் சொல்லி விடுகிறது!

''தஞ்சாவூரை 1798 – 1832 காலத்தில் சரபோஜி மன்னர் ஆண்டார். பொதுவாக மராட்டிய மன்னர்கள் இந்து, முஸ்லிம் கிறிஸ்துவ மதங்களை மதித்து நடந்தவர்கள். அவர்களது முன்னோர் பீஜப்பூர் சுல்தானின் படைத் தளபதிகளாக இருந்தவர்கள். அதனால் இஸ்லாத்தின் மீது பற்று கொண்டவர்களாக விளங்கினர். முஸ்லிம் சூஃபி ஞானிகளைப் போற்றினர். காவலுக்கும், படை அணிக்கும், யூனானி மருத்துவத்திற்கும் முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். முஸ்லிம்கள் பலர் அரசின் உயர் அலுவலர்களாக இருந்தனர். ஆவணங்களில் இஸ்லாமிய ஆண்டு பின்பற்றப்பட்டுள்ளது. முஹர்ரம் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. அரபி, பார்சி, உருது மொழிகள் அவர்கள் ஆதரவு பெற்றிருந்தன.

''அந்த வகையில் பீஜப்பூரிலிருந்து தஞ்சாவூருக்கு மார்க்கப் பிரசாரங்களுக்கு வந்த ஹஸரத் முஹம்மது நூர் இஸ்மாயில் அலிஷா சுல்தான் அவர்கள் தமது தவ வலிமையாலும், மருத்துவ சிகிச்சைகளாலும் தஞ்சைப் பகுதி முழுவதிலும் பிரபல்யமுற்றார்கள். அவர்கள் மன்னர் மானியமாக வழங்கிய இந்த இடத்தில் அடக்கமாகி உள்ளார்கள்.

''அத்தோடு அவர்கள் துணைவியார் மக்கதும்மா பீவி, பிரதம சிஷ்யர் ஹலரத் ஜமால் அலிஷா, அவர்களுடைய மகனார் ஷையத் முஹம்மத் தர்வேஷ் அலிசா ஆகியோரின் அடக்கத் தலங்களும் இந்த வளாகத்தில் உள்ளன. ஆனால், 'தர்வேஷ் தைக்கால்' என்றே பெயர் வழங்கி வருகிறது''

என உரைத்த வாலிபன் –

''சரி! அந்தத் தகவல்களை இவ்வளவுடன் நிறுத்திக் கொள்கிறேன். நான் உங்களுக்குக் காட்ட வந்தது ஒரு பாழடைந்த பள்ளிவாசலை! இப்படி வலது பக்கமாகத் திரும்புங்கள்!''

சொன்னபடியே திரும்பினேன்.

ஆனால், நல்ல நிலையில் இருக்கும் ஒரு பள்ளிவாசலையே பார்த்தேன்.

''அவசரப்பட்டு விடாதீர்கள் பெரியவரே! அது நல்ல நெலமையில் இருக்கும் பள்ளிவாசல்தான்! எங்கள் ஊர் தௌஹீது சகோதரர்களுடைய இறையில்லம்! விருப்பமிருந்தா நுழைங்க. தடுக்க மாட்டேன்! ஆனா பாழடைந்த பள்ளியைப் பாத்துட்டுத்தான் மத்த காரியம்!''

அது எங்கே எங்கே என்று கண்கள் நாலாபக்கமும் சுழல, தௌஹீது

பள்ளிக்கு எதிரே!

சப்பாத்தி கள்ளிச் செடிகள் மண்டி, தூண்கள் இடிந்து சுவர்கள் காரை பெயர்ந்து பாம்பும், பூரானும், தேளும் நடமாடும் அதி பழைய கட்டடமொன்றின் காட்சியைக் கண்டேன். மர விழுதுகள் நன்றாகவே பற்றிப் படர்ந்திருந்தன. துர்நாற்றமும் வீசியது.

'யா அல்லாஹ், உனது இல்லமா இந்தக் கோலத்தில்?' என அவனிடமே குரல் எழுப்ப வேண்டியிருந்தது.

''இத தைக்கால்னு தட்டிக் கழிக்கிறவங்க இருக்கிறாங்க. ஆனால், உள்ளே நுழைஞ்சு பாத்தா மிம்பர் தெரியும். தொழுகை பண்ணினது புரியும். வர்றீங்களா, பாப்போம்?''

தயக்கமாக இருந்தது. விஷ ஜந்துக்களுக்காகப் பயந்தேன். என்றாலும் ஓர் இறையில்லம்! அவனே காப்பு என நிய்யத்துடன் நுழைந்து விட்டேன்.

நிழற்படக் கருவிக்கும் நிறைய வேலை கொடுத்தேன்.

பக்கத்திலேயே காணப்பட்ட ஒரு கபரஸ்தானையும் (முஸ்லிம் அடக்கத்தலம்) கண்ணோட்டம் விட்ட பிறகு சிந்திப்பதற்குப் பேசுவதற்குப் பல இருந்தும் கனத்த நெஞ்சுடன் மௌனமாகிப் போய் வந்த வழியே திரும்ப வேண்டியதாயிற்று.

காரணம் ஓர் 'இளங்குரு'த்துடன் ஆய்வரங்கம் அவசியமில்லை என்ற உடனடி முடிவு.

இதற்குப் பிறகு எங்கே?

நெடுஞ்சாலைக்கு வந்ததும் ஏற்பட்ட கேள்வி.

வாலிபனே பதிலும் சொல்லி வழியும் காட்டினான்.

''அல்லாஹ்வின் நாட்டம். நீங்க கோவிலையே பார்த்துக் கிட்டு நிக்கிறதைக் கண்டு அதிசயப்பட்டு உங்ககிட்ட நெருங்கினேன்! வாங்க அந்த எடத்துலேயே விட்டுறேன். இல்லைன்னா நீங்க போற விரும்புற எடத்துல விட்டுட்டு என் வழியில் நான் போயிடுறேன்!''

இளைஞர்களில் இப்படியும் ஒரு விசித்திரப் பிறவியா? இந்தக் காலத்திலும்?

இவனைக் கூடவே வைத்துக் கொண்டால் என்ன?

ஆனால், அது சரிப்பட்டு வரக்கூடியதல்ல என்று அடுத்த விநாடியே தோன்றி விட்டது!



அப்படியானால் அவரவர் வழிதான்!

''தம்பிய எப்படியோ நெனைச்சேன்! என் கள ஆய்வில் எடுத்த எடுப்பிலேயே ஒரு தாக்கத்தை உண்டு பண்ணி வீட்டீர்கள். நான் எங்கே போக வேண்டும் என்று முடிவு செய்து விட்டேன். கண்டியன் தெரு! ஊராட்சி மன்றத் தலைவர் சந்திப்பு!''

''அல்லாஹ்வும் ரசூலும் உங்களுக்கும் உங்கள் முயற்சிகளுக்கும் துணை. அஸ்ஸலாமு அலைக்கும்'.

அதோ... அதோ.....

அவன் போய்க் கொண்டிருக்கிறான். என்னை நெஞ்சார நெகிழச் செய்தவனாக........!

வாலிபத் தம்பி ஊரைச் சொன்னாலும் பெயரைச் சொல்லாமல் வசிக்கும் தெருவையும் தெரிவிக்காமல் பறந்தான்.

என்னை நம்புங்கள் அபிமானிகளே!

அவன் எனக்கு, எந்தச் சொந்த விவரமும் தராமலேயே விடை பெற்றுக் கொண்டான்.

இருப்பினும், எனது அறிமுக அட்டை அவனிடம் உள்ளது. அலைபேசி, தொலைபேசி எண்கள் உள்ளன. எந்த வெளிநாட்டிலிருந்தாவது இந்நூலை விரும்பிக் கேட்பான் என எதிர்பார்ப்பு. 'முண்டாசுக் கவிஞன்' மகாகவி பாரதி நெஞ்சு துடிக்கப் பாடினானே 'எங்கிருந்தோ வந்தான், இடைச்சாதி நானென்றான்' என்று!

அதற்கு இவன் எடுத்துக்காட்டோ?

எழுபது ஆண்டுகளுக்கு முன் திருச்சி பன்னூலாசிரியர் குலாம் ரசூல் அவர்கள் படைத்திட்ட 'பாழடைந்த பள்ளிவாசல்' சிறுகதையை நினைவுபடுத்தும் காட்சிகள் :











''தஞ்சையை ஆண்ட துளஜாஜி (துக்கோசி) மகாராஜா பதினைந்து கிராமங்களை நாகூர் தர்காவுக்கு மான்யமாக கொடுத்துள்ளான்'' என, 'திக்கா' என்ற மராட்டி மொழி செப்புப் பட்டயத்தின் பதிவு.

தகவல்: முனைவர் இரா. காமராசு ('இஸ்லாமிய இலக்கியக் கழக ஆய்வுக் கோவை' (2007) கட்டுரையில்.

'வரலாறுகளை நினைவு கூராமலும் நினைத்துப் பார்க்க நேரமில்லாமலும் இன்றைய இயந்திர ஓட்ட காலத்தில் சமுதாய மக்கள் இருக்கிறார்கள்!

**– அய்யம்பேட்டை வாலன் ஜெ. சுலைமான் பாட்சா**
**(துபை நிகழ்வொன்றில் ஆற்றிய உரையிலிருந்து – 22.10.2002.)**

# 4.
# மராட்டிய மன்னர்களின் மத நல்லிணக்கம்

இப்பொழுது நுழைந்து கொண்டிருப்பது கண்டியன் தெருவில்.....

அதன் புதுப் பெயராக 'ஃபாரூக் தெரு' வந்திருக்கிறது.

இருந்தாலும் யாருக்கும் நாவில் உலாவருவது 'கண்டியன்'!

என்னைப் போன்றவர்களுக்கு இலங்கையில் இரண்டாம் பெருநகரான கண்டி (மலையகம்) நினைவில் வந்து கிளுகிளுப்பை உண்டு பண்ணுவது இயல்பு.

இந்த ஊர்களின் முன்னோர்களுக்கு இலங்கை கண்டித் தொடர்புகள் இல்லாமல் போகாதென்று மனம் சொல்கிறது.

என்றாலும், 'கண்டியன்' என்றால் மறவர் சமுதாயத்தைச் சுட்டுமாம்.

ஆனால், ஆதிகால மறவர் குலம் முழுக்கவும் முஸ்லிமானதென்று அடித்துப் பேச ஆட்கள் இருக்கிறார்கள், கவிஞர்கள் இருக்கிறார்கள்!

இருக்கட்டும், `நான் 'வில்லேஜ் பிரசிடெண்'டை முதலில் பார்த்து விடுகிறேன். அதாங்க, சக்கராப்பள்ளி ஊராட்சி மன்றத் தலைவர்!

ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்தால் எப்படி வரும் என்று ஒரு குசும்பு!

இன்னும் சில நிமிடங்கள் நடைபயின்றால் அவர் அலுவலகம் அடைந்து விடுவேன் என எதிர்பார்ப்பு.

இருக்கிற இடைப்பட்ட நேரத்தில் கொஞ்சமாக **மராட்டிய சரித்திரம்** சொல்லி வைக்கலாம் என்று பார்க்கிறேன்.

பாழடைந்த பள்ளிவாசல் காட்டிய அந்த மறக்கவே முடியாத தம்பி மராட்டிய மன்னர்கள் மகிமையையும் சொன்னான் அல்லவா! அந்த வரலாறு ஏற்கனவே அச்சொட்டாக எனது நெருங்கிய நண்பரும், பிரபல புதுக்கோட்டை ஆய்வு எழுத்தாளருமான **டாக்டர் ஜெ. ராஜா முகம்மது** அவர்கள் பதித்துள்ள '**தஞ்சை மன்னர் ஆட்சியில் மராட்டியர்கள்**' என்ற ஆய்வுக் கட்டுரையில் உள்ளது.

அவர் தமது ஆய்வில், *``மராட்டிய மன்னர்கள் கற்றறிந்த முஸ்லிம் பெரியோரையும், சூஃபி ஞானியரையும் பெரிதும் மதித்து நடந்தனர். பல சந்தர்ப்பங்களில் மன்னர்கள் அவர்களது அருள்வேண்டி நின்ற செய்திகள் தெரிய வருகின்றன. மராட்டிய மன்னர் ஸஹாஜி (1684–1712) ஷஹா ஷரீப் என்ற சூஃபி ஞானியின் அருளாகப் பிறந்தவர் என்றும் அவரது தந்தைக்கு இந்த ஞானியார் நெய்கினி, பதுமணி என்ற இரண்டு வாட்களையும், பஞ்சா ஒன்றிணையும் அளித்தார் என்றும், இவை அவர்களது சந்ததியினரால் பாதுகாத்து வரப்பட்டதென்றும், ஆவணக் குறிப்புகள் தெரிவிக்கின்றன'' என்கிறார். இந்த வாட்கள் இரண்டும் சென்னை அருங்காட்சியகத்திலும், தஞ்சை மராட்டிய மன்னன் அரண்மனை அருங்காட்சியகத்திலும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. மராட்டிய சிவாஜியும் ஒரு முஸ்லிம் சூஃபி ஞானியின் அருளினால் பிறந்தவர் என்பது வரலாறு''* எனவும் பதித்துள்ளார்.

அத்தோடு, அவர் தனது ஆய்வுப் பதிவில், *``மராட்டிய மன்னர்கள் கொண்டிருந்த இத்தகைய அடிப்படை நம்பிக்கையின் காரணத்தினால், முஸ்லிம்களையும் அவர்களது கலாசாரத்தினையும் நன்கு பேணி வந்தனர். பள்ளிவாசல்களுக்கும், தர்காக்களுக்கும் தாராளமாக கொடை அளித்தனர். நாகூர் மராட்டிய மன்னர்களுக்கு முக்கியமான வழிபாட்டிடமாக திகழ்ந்தது''* என்கிறார்.

**டாக்டர் ஜெ.ராஜா** முஹம்மது இன்னொரு இடத்தில் இப்படியும் ஒரு முக்கியப் பதிவு செய்துள்ளார் :

*''1675 ஆம் ஆண்டு வாக்கில், தஞ்சாவூரை ஆண்டு வந்த நாயக்க மன்னர்களிடையே ஏற்பட்ட அரசுரிமை குறித்த சர்ச்சையை தீர்த்து வைக்க அனுப்பி வைக்கப்பட்ட, பீஜப்பூர் சுல்தானின் தளபதி* ***எக்கோஜி*** *தஞ்சை அரசில் நிலவிய அரசியல் சூழ்நிலையை சாதகமாக்கிக் கொண்டு 1676–ல் தன்னை தஞ்சையி மன்னராக பிரகடனப்படுத்திக் கொண்டார். இவருக்கு உதவியாக* ***காதர்யெகலாஸ்கான், அப்துல் ஆலிம்*** *போன்ற படைத் தலைவர்களுடன் ஏராளமான முஸ்லிம் வீரர்களும் வந்திருந்தனர்.* ***மராட்டிய மன்னர்களுள் முதலாவது மன்னர்*** *இவரே ஆவார். இவருக்குப் பின் மராட்டியரின் ஆட்சி 1855–ம் ஆண்டு வரை தொடர்ந்தது. பின்னர் ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிக்குட்பட்டது''* என்கிறார்.

இந்த **எக்கோஜி** (கி.பி. 1676 – 1683) ''**வெங்காஜி,** எனவும் அழைக்கப்பட்டானாம். அத்துடன், சத்ரபதி சிவாஜியின் சிற்றன்னை மகனாம். **அய்யம்பேட்டையைப் போர்க்களமாகக்** கொண்டு ஒரு

யுத்தத்தையே செய்து தோல்வியுற்றானாம்.

மில்லத் நகர் ஹபீப் ரஹ்மானும் தனது நூலில், அமா சிம்மனின் சுவடி தொகுப்புப் பதிவை ஆதாரம் காட்டி இவற்றை குறிப்பிட்டுள்ளார்.

நான் பார்வையிட்ட தஞ்சை கெஜட்டியர்கூட இதைப் பெரும்பாலும் ஊர்ஜிதப்படுத்துகிறது.

ஆனால், 'அய்யம்பேட்டையைத் தளமாகக் கொண்டு நடந்த போரில் மதுரை நாயக்க மன்னனின் தஞ்சை தளபதி அழகிரியை அவன் தோற்கடித்து தஞ்சை அரசனானான்' என்கிறது.

எவ்வாறாயினும், எக்கோஜியை முதல் மராட்டிய அரசனாகக் கொண்டு ஆரம்பித்த தஞ்சாவூர் ஆட்சி 1855 வரை நீடித்தது.

இந்தக் காலகட்டத்தில் மராட்டிய மன்னர்களால் வடபகுதி (குறிப்பாக பீஜபூர்) சூஃபிகளும், ஞானிகளும் தஞ்சையில் பெரிதும் வரவேற்கப்பட்டனர்; கவுரவிக்கப்பட்டனர்.

அவர்கள் அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளியை அமைதி, நிம்மதிக்குரிய இடமாகவும், சாந்தி சமாதானம் போதிக்கும் தலமாகவும் இறுதியில் தங்கள் ஓய்வுறக்க இடமாகவும் மாற்றிக் கொண்டனர். ''பசூர்' எனச் சுருக்கமாக அழைக்கப்படுகின்ற பசுபதிக் கோவிலும் உள்ளடங்குகிறது.

இந்த வகையில் சக்கராப்பள்ளியில் இறைநேசர் நினைவிடங்கள் ஏழு(7). அய்யம்பேட்டை எல்லையில் ஒன்று. பசுபதி கோவில் (பசூர்) சாலையில் ஒன்று. உள்ளே ஒன்று. மானாங்கோரையில் ஒன்று என மொத்தம் பதினொன்று (11) (விபரமான பட்டியல் இந்த அத்தியாயத்தின் முடிவில்.)

இஸ்லாத்தை எத்திசைக்கும் எத்தி வைத்த ஆன்மிகச் சுடர்கள் அடங்கியிருக்கும் இடமாக அய்யம்பேட்டையும், மகத்துவமிக்க மகான்களை தன் மண்ணில் கொண்டு விளங்குவதாக சக்கராப்பள்ளியின் வரலாறுகளும் பேசுகின்றன.

180 ஆண்டுகள் தமிழ்த் தரணி தஞ்சை நஞ்சையை பரிபாலித்த மராட்டிய மன்னர்கள் மத நல்லிணக்கம், மத சகிப்புத்தன்மை காட்டி,'மரகதப் பச்சை கற்கள்' தூவி வெளிச்சமிட்டிருக்கிறார்கள்.

அவர்களே மனம் உவந்து மானியமாக நிலங்களை வழங்கி, அந்த ஆத்மஞானிகள், இறைநேசர்கள் அமைதி நிம்மதியாக, ஆனந்தமாக உறங்கி ஓய்வெடுக்க வழி செய்திருக்கிறார்கள்.

துளஜாஜி (துக்கோசி) மன்னனால் நாகூருக்கு 15 கிராமங்கள் மான்யமாகக் கிடைத்தது போல, அய்யம் பேட்டை அரசு உயர்நிலைப்பள்ளியின் கீழ்த்திசையில் அமைந்திருக்கும் ஹலரத் ஹஸன்ஷாஹ் (வலி) அவர்களது அடக்கத் தலத்தை சுற்றிலும் உள்ள அரசு மருத்துவமனை, அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் சின்ன தைக்கால் தெரு, பெரிய தைக்கால் தெரு ஆகிய அனைத்தும் தர்காவின் நிலத்திலே அமைந்துள்ளன.

``இந்திய நாட்டில் இஸ்லாம் பரவியதற்கும், வேரூன்றியதற்கும் சூஃபியாக்களும், ஞான மாமேதைகளும், அவுலியாக்கள் என்னும் இறைநேச செல்வர்களுமே காரணமாவார்கள்.'' என, இங்குள்ள `இஸ்லாமிய கலாசாரப் பேரவை'யின் நிறுவனர், பேராசிரியர், **அல்ஹாஜ் பி.எம். ஜியாவுத்தீன் பாகவி** ஒரு நூலின் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

''நாமெல்லாம் இன்று இஸ்லாமியர்களாக இலங்கி, தலைநிமிர்ந்து வாழ்வதற்கு மிகப்பெரும் தியாகத்தை செய்தவர்களே இந்த அவுலியாப் பெருமக்களாவர். எனவே, அவர்களை நன்றியுணர்வோடு நினைத்துப் பார்க்க கடமைப்பட்டுள்ளோம்'' எனவும் அதில் பதிந்துள்ளார்கள்.

ஆக, 'ஆனந்தமாக, இலை மறைத்த கனிகளாக, துயில் கொண்டிருக்கும் அந்த இறைநேசச் செல்வர்களை நமது தலைமுறைகள் ஏன் தொந்தரவு செய்ய வேண்டும்' அவர்கள் ஓய்விடங்களை அழித்தொழிக்க அடம் பிடிக்க வேண்டும்' என்ற சிந்தனைகளோடு, ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் அலுவலகம் நெருங்கினேன்.

'வாருங்கள், வாருங்கள்' என சலாத்துடன் கூடிய வரவேற்பு எனக்கு பலமாக இருந்தது.

ஒரு சிறந்த தொழிலதிபராகவும், சதா சிரித்த முகத்தினராயும் உள்ள புதிய ஊராட்சி மன்றத் தலைவர் **துரை புர்ஹானுதீன்** அவர்களின் பெயர் மத நல்லிணக்கத்திற்கு இலக்கணம் சொல்லும் போலிருந்தது.

**'துரை'** – **'முத்து'** – **'ராஜா'** என்பவையெல்லாம் தமிழக முஸ்லிம் பெயர்களுடன் இணைந்திருப்பது ஒன்றும் புதுமையல்ல. ஆனால், மலேசியா, இந்தோனேசியா, புருணை நாடுகளில் புழங்குகிற புர்ஹானுதீனுடன் 'துரை' இணைந்திருப்பது நல்ல ஆச்சரியந்தான். வரவேற்க வேண்டியதே!

''நீங்கள் இங்கே வந்ததும் நானே சந்திக்க வர இருந்தேன். ஏற்கனவே ஆலிமான் தகவல் தந்திருந்தார்' என்றார் தலைவர்.

''அது சரியாகாது! ஊர்த் தலைவர்களைத் தேடி எங்களைப் போன்றவர்கள் செல்வது தான் முறை! அதுவும் நேரம் குறிக்காமல் வந்தும்,

வரவேற்கிறீர்கள்'' என என் பாராட்டைத் தெரிவித்து விட்டு உடனே டாலர்களையும் விடப் பெறுமதியான கேள்வியைப் போட்டு விட்டேன்!

''அதெப்படி, சக்கராப்பள்ளியில் ஒரு பாழடைந்த பள்ளிவாசல்? நேற்று முந்தாநாள் கூட ஒரு புதுப்பள்ளி திறக்கப்பட்டிருப்பதாக 'தினமலர்' தஞ்சை மாவட்டப் பதிப்பில் பார்த்தேனே!''

''ஓ! அதற்குள்ளாகவே தகவல் கிடைத்து விட்டதா? போய்ப் பார்த்தீர்களா?''

''மிகவும் தற்செயலாகக் கிடைத்தது. அது அல்லாஹ்வின் ஏற்பாடு! பார்த்து விட்டுத்தான் நேராக உங்களிடம் வருகிறேன். முகலாயர் கால கட்டுமான அமைப்பில் கட்டப்பட்ட ஒரு சிறு பள்ளியாக ஒரு காலத்தில் சிறப்பாக இருந்திருக்க வேண்டும். இந்த நிலைமையில் இப்பொழுது பார்ப்பது மனக் கவலையைத் தருகிறது''.

''எனக்கும் அப்படித்தான். நான் பதவியேற்ற பிறகு இதைப் பற்றிக் கடுமையாகச் சிந்தித்துக் கொண்டிருந்த நேரத்தில் தான் தாங்களும் ஆய்வுக்கு வந்திருக்கிறீர்கள். உங்கள் சிந்தனையில் என்ன தோன்றுகிறது?''

''நிறையவே பல தோன்றுகின்றன. இந்தப் பாழடைந்த பள்ளிவாசலை 'தைக்கால்' என்று சாதிப்பவர்களின் நினைப்பை மாற்றி பள்ளிவாசல்தான் என்று நிரூபிக்க வேண்டும். அதேசமயத்தில், ''தைக்கால் தானே இன்னும் நல்லாகவே பாழடையட்டும்'' என்று எதிர்பார்ப்பவர்களின் எண்ணங்களையும் தவிடுபொடியாக்க வேண்டும். முடியுமா உங்களால்?''

''நன்றாகவே முடியும், எங்களூர் ஜமாஅத்தார் எதிலும் ஒன்றிணைந்து இருப்பவர்கள். எத்தி வைத்தால் ஏற்ற நடவடிக்கைகளைச் செய்யத் துடிப்பார்கள்''

''அதைச் செய்யப் பாருங்க. எனது நூலில் 'அது ஒரு பாழடைந்த பள்ளிவாசல்தான்' என்பதை நிழற்படங்களின் மூலம் வெளிச்சமிடத் திட்டம். அதற்குப் பிறகு என்ன செய்யலாம் என்று யோசியுங்கள். செய்யத் தாமதிப்பது அல்லது அசட்டையாக விட்டு விடுவது பள்ளிவாசல் இடமே யார் யாருக்கோ அல்லது ஏதாவது ஒரு அமைப்புக்குப் போய்விடும் அபாயத்தை ஏற்படுத்தும்.''

''வேடிக்கை என்னவென்றால் எங்களூரில் பல பேருக்கு இப்படியொரு பள்ளிவாசல் பாழடைந்திருப்பது தெரியவே தெரியாது''

''அதற்கு ஒரு காரணம் அது கும்பகோணம் நெடுஞ்சாலையில், மில்லத் நகர் தர்வேஷ் தைக்கால் வளாகத்தில் உள்ளங்கி விட்டதாய் இருக்கலாம். பரவாயில்லை. இனியாவது தெரியட்டும்''

இவ்வாறு எங்கள் கருத்துச் சிதறல்கள் இருந்தன.

அபிமானிகளும்கூட அப்பள்ளிவாசலின் இன்றைய நிலையைக் காட்டும் நிழற்படங்கள் சிலவற்றை முன் அத்தியாயத்தின் இறுதியில் பார்த்திருப்பீர்கள்.

ஊராட்சித் தலைவருடன் மேலும் கருத்துக்களைப் பரிமாற நேரமின்றி, எனக்கு அந்தத் தெருவில் மற்றொரு மூத்த பிரஜையையும் அப்பொழுதே சந்திக்கும் திட்டம் இருந்தது. அவர் பகலுறக்கம் கொண்டு விட்டால் இயலாமல் போகுமே என்பதால் விடைபெற வேண்டியிருந்தது.

இந்த இடத்தில் இன்னொன்றையும் அபிமானிகளுக்குப் பதிக்கிறேன்.

இன்னும் சில காலத்திற்கு அய்யம்பேட்டை சக்கராப்பள்ளியில் மேலும் புதுப்பள்ளி வாசல்கள் நிர்மாணம் பற்றி (அப்படியொரு திட்டம் யாருக்காவது இருந்தால்) சிந்திப்பதைத் தாமதித்துவிட்டு, பாழடைந்த பள்ளிவாசல் இடத்தைப் பற்றிச் சிந்தித்தால் என்ன?

இதைத் தவறு எனக் கருதுவீர்களா?

அந்தப் பாழடைந்த இடத்தில், இலங்கையிலும், வேறு பல நாடுகளிலும் உள்ளது போன்று, ''**இஸ்லாமியக் கலாபீடங்கள்**'' மாதிரியில் ஒன்றை உருவாக்கினால் அது, தஞ்சை மாவட்டத்திற்கே பெருமை ஆகாதா?

மூளைக்கு 'ஓவர்டைம்' வேலை கொடுப்போம்!

ஆமாம்! ஓவர்டைம்!

மேலும், இவையெல்லாம் தனிப்பட்ட என் சுயக் கருத்துக்கள். சொல்வது என் சுதந்திரம். வேறு யாரையும் சம்பந்தப்படுத்தி மன அழுத்தங்களுக்கு உள்ளாக வேண்டாம்.

நன்றி அபிமானிகளே!

கண்டியன் தெரு (பாரூக் தெரு) முதிய மூத்த பெருமகனார் இல்லத்திற்கு வாருங்கள் செல்லலாம்.

''நான் இலங்கையிலிருந்து வந்திருக்கிறேன்.''

அந்தப் பங்களா வாசலுக்குப் போய், அழைப்பு மணிக்கு ''யார் நீங்கள்?'' என்று கேட்டவரிடம் பதில் சொன்னதும் தான் தாமதம்....!

அடுத்த வினாடி அது உள்ளே இருந்தவர்களுக்கு கேட்டு அங்கிருந்த வர்களிடம் ஒரு பரபரப்பை உண்டு பண்ணியதை உணர முடிந்தது!

அரபிகளின் சாயலில் நல்ல வெந்நிறமான, சீதேவித் தனமான முகப்பாங்கு கொண்ட 'ஒரு நடுத்தர வயது வாலிபர்' என்னை வரவேற்க ஓடிவந்து உள்ளே அழைத்துச் சென்றபொழுது,

அங்கே ஒரு வசதியான இருக்கையில் ஒரு பெரியவரைக் கண்டேன்.

மேலே நான் வர்ணித்தபடியே அவரும் இருந்தார்.

இவர்கள் எல்லாம் அய்யம்பேட்டை சக்கராப்பள்ளிக் காரர்கள் தானா என்ற சிறிய ஐயம்!

ஆனால், நான் இலங்கையிலேயே பெற்று வந்த தகவல்கள் சக்கராப்பள்ளி மைந்தர்கள் தான் என்று அடித்துச் சொல்லியது!

''வாப்பு, லுஹர் முடிந்ததும் உடனே உணவு எடுத்து விட்டு உறங்கி விடுவார்கள். வாங்க, அவுங்களோட நீங்களும் சாப்பிடலாம்''

அந்த வாலிபத்தம்பி புருணை என்ற செல்வச் சீமையில் சிறந்த தொழில் வித்தகர். நான் `இலங்கை' என்பதற்காகக் கொடுத்த முதல் மரியாதை இது!

அவர் அப் பெரியாரின் மகனார், 'குண்டு' ஹாஜி கே ஏ. ஷபீர் அஹமது! (ஆனால் குண்டானவர் அல்லர்! குண்டை வைத்திருப்பவரும் அல்லர். குடும்பப் பட்டப் பெயர்)

என் பகலுணவு எப்பொழுதுமே இரண்டரை மணிக்கே என்பதால் தாழ்மையுடன் மறுதலித்து, ''நான் சேகரித்து வந்துள்ள தகவல்களைக் கொஞ்சம் பெரியவர் அவர்களிடம் சரிபார்த்து விட்டுப் புறப்பட்டு விடுகிறேன்! அனுமதிக்க வேண்டும்' என்றேன்.

பெரியவர் குண்டு **அப்துல் வஹ்ஹாப் ஹாஜி காதிரி** அவர்களுக்கு அகவை 98.

நான் சொல்வதைப் புரிந்து தலை அசைக்க விடுவிடுவென அவர்களது இலங்கைத் தொடர்புகளின் 'மூட்டை'யை அவிழ்த்தேன்.

அதன் விபரம் அறிய அபிமானிகள் அடுத்த அத்தியாயத்தில் நுழைய வேண்டும்.



# இறைநேசர் நினைவிடங்கள்

**(அய்யம்பேட்டைக்கு அருகிலும் சக்கராப்பள்ளியிலும் இருப்பவை)**

1. ஹஜ்ரத் 'ஷேம் சாஹிப்' என்னும் ஷெய்கு முஹம்மது ஷரீப் வலியுல்லாஹ் தர்கா.

(அய்யம்பேட்டை வழுத்தூர் நெடுஞ்சாலை, சக்கராப்பள்ளி)

2. ஹஜ்ரத் முஹம்மது லெப்பை வலியுல்லாஹ் தர்கா (நோன்பு சாஹிப் தைக்கால்) கருப்பட்டிக்குளம்.

3. ஹஜ்ரத் ஜிந்தா ஷாஹ் மதார்சா வலியுல்லாஹ் தர்கா (மஸ்ஜித் ஃபாத்திமா பத்ர் வளாகம்), அய்யம்பேட்டை.

4. ஹஜ்ரத் ஹஸன் ஷாஹ் வலியுல்லாஹ் தர்கா (அரசு உயர்நிலைப் பள்ளி எதிரில்)

5. ஹஜ்ரத் ஷெய்கு மஷாயிக் மீரா ஆலம் வலியுல்லாஹ் தர்கா (கீழத் தெரு) (கி.பி. 1670 – 1750)

6. சையது முஹம்மது தர்வேஷ் வலியுல்லாஹ் தர்கா, மில்லத் நகர், சக்கராப்பள்ளி.

7. ஹஜ்ரத் நிஜாமுத்தீன் வலியுல்லாஹ் தர்கா மதரஸயே தஃலீமுல் இஸ்லாம் கட்டடம் (சாவடி பள்ளிவாசல்)

8. காஷ்மீர் பாவா (அஜீஸ் தைக்கால்) அய்யம்பேட்டை எல்லை

9. ஸைய்யத் ரஜா ஷா காதிரி பீஜப்பூரி (ஜப்பார் தைக்கால்) தஞ்சை நெடுஞ்சாலை.

10. ஹலரத் உமர் வலியுல்லாஹ் – பசுபதி கோவில்

11. ஸையத் சுல்தான் லுக்மானுல் – ஹக்கானி – மானாங்கோரை :

**''ஐம்புலனாசைகளை மண்ணாசை / பெண்ணாசை ஆகியவைகளை வெறுத்து, பற்றற்றோரின் பற்றினைப் பற்றிக்கொண்டு, அப்பேரானந்தப் பேற்றிலே இன்பத்தை நுகர்ந்த இறை நேசர்கள் மீது அன்பு காட்டுவது, மதிப்பு கொள்வது ஒரு நல்லடியாருக்கு அவசியமான இயல்புகளாகும்''**

**('பாப்ஜான்' மர்ஹூம் கிரசென்ட் நூர் முஹம்மது தமது நூலொன்றில்...)**

# 5.
# இலங்கையில் அய்யம்பேட்டை ஆன்மிக சீலர்கள் இருவர்!

பதின்மூன்று (2001) ஆண்டுகளுக்கு முன் வெளியான ஒரு நூல் ''**வரலாற்றில் இலங்கையும் காயல்பட்டினமும்**''

உருவாக்கியவரை சற்று தாமதித்துத் தெரியலாம்.

இந்நூலின் முப்பத்திரண்டாம் பக்கத்தில் இந்தப் படம் இருக்கிறது. படத்தின் கீழ், '**புதிய சோனகர் தெரு ஸாலிஹ் தைக்கா**' என போடப்பட்டுள்ளது.




கொழும்பு நியூமோர் ஸ்ட்ரீட்
**ஸாலிஹ் தைக்கா**வின் புராதனமான முகப்புத்தோற்றம்

*அடுத்த பக்கமாகிய 33ல் இப்படி:*

❐ ***இலங்கை காயல்பட்டினம் தைக்கா ஸாஹிபு (ஒலி) அவர்கள் ஆரம்பித்து வைத்த அறநெறி வழிவகைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்ற பெருமை அவர்கள்தம் மைந்தர் ஷெய்குல் ஆஷிகீன் செய்யிது முஹம்மது தைக்கா ஸாலிஹ் (ஒலி) அவர்களுக்கு உரியதாகும்.***

***அன்னாரது அரும் முயற்சியிலேயே இரண்டாம் குறுக்குத் தெரு 163 ஆம் இலக்கத்தில் உள்ள பல்லாக்குக் கட்டடத்தில் தைக்காக் கிட்டங்கியும், புதிய சோனகர் தெருவில் ஸாலிஹ் தைக்காவும் நிறுவப்பட்டன. இந்தத் தைக்காவில் அன்னாரது கலீஃபாக்களுள் ஒருவரான அய்யம்பேட்டை அப்துல் கனி பாவா அவர்களது அடக்கத்தலம் உள்ளது.***

– மேற்கண்ட தகவல்களில் கடைசி வரியில் உள்ள தகவல், அன்று, எந்த நூலாசிரியரால் பதியப்பட்டதோ, அவரே அதே அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளி வந்து மென்மேலும் புதுப் புதுத் தகவல்களை வெளிச்சமிட கள ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்!

வேறு யார், நானே!

அப்பொழுது வெளியான அந்த ஆய்வு நூலோ, '**இலங்கையும் காயல்பட்டினமும்**' இதுவோ, '**அய்யம்பேட்டை சக்கராப்பள்ளிப் புது வெளிச்சங்கள்**'. இதில்தான் முழுமையாக அப்துல் கனி அப்பா அவர்கள் (''காவன்னா ஆனா'') வெளிச்சமிட வேண்டும். அதுவே அனைத்தும் வல்லவனது எண்ணமும் திட்டமும்.

பன்னாடுகளிலிருந்தும் வடபுலத்திலிருந்தும் தஞ்சைப்பகுதி வந்து தங்கி இறைத் தொண்டாற்றி இஸ்லாமியத் தூய நெறி பரப்பிய இறை நேசர்களுடன் –

இவ்வூரிலேயே பிறந்து இளமையிலேயே இலங்கைத் தீவு சென்று அங்கே நெடுங்காலம் இருந்து நிறை ஞானமிக்க மணிகளாய் மாறிப் போன மாணிக்க மனிதர்கள் இருவரில் ஒருவர் **ஷெய்கு கா. அப்துல் கனி அப்பா சாகிபுல் காதிரி** அவர்கள். மற்றவர் **ஆரிபுபில்லாஹ் அப்துல் கபூர் மஸ்தான்** சாஹிபு அவர்கள்.

இவர்கள் இருவரும் இளமையிலேயே இலங்கை மண்ணை மிதித்தது. பொன்னும் பொருளும் பெற்றிட....!

பெற்றார்களா?

ஆம்! அல்லாஹ்வின் அருட்கொடையால் அதிகம் அதிகமாக!

ஆனால், பொன் இருந்தென்ன, பொருள் இருந்தென்ன, பெறற்கரிய பேரருள் வழங்கும் ஞானத்துறையில் ஆர்வம் மேலோங்கி, உலக வாழ்வில் பற்றற்று, வெறுப்புற்று, பசித்திருந்து, விழித்திருந்து, தனித்திருந்து, தயாபரனை (இறைவனை) தேடுகின்றவர்களானார்கள்.

## ஷெய்கு 'காவன்னா ஆனா' கனி அப்பா சாகிபுல் காதிரி

இவர்கள்தம் இலங்கைத் தொடர்புகளின் ஆரம்பம், இறுதி நிலைகளைப் பார்க்கலாம்.

அய்யம்பேட்டை **காதிறு சாஹிப்** அவர்களின் செல்வக் குமரரான அப்துல் கனி முதன்முதல் இலங்கையில் தடம் பதிந்து கொடியேற்றிய இடம் **பொல்கஹவெல.**

இது கொழும்பு – கண்டி தொடர் வண்டி (ரயில்) வழித் தடத்தில் கொழும்பிலிருந்து ஒன்றரை மணியில் போய்ச் சேரக்கூடிய ஒரு சிறு சிங்கள நகரம். சிங்களப் பெயரையே கொண்டிருக்கிறது. இதற்கு அழகான தமிழ் மொழி பெயர்ப்பு ''**தென்னம் வயல்**'' (ஆனால் அழைக்க யாருமில்லை).

இவ்வூர் மண்ணின் மைந்தரும், எனது நீண்ட நாள் கலை இலக்கிய நண்பரும், ஒய்வு நிலைப் பாடசாலை அதிபரும், இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளராகவும், வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு உறுப்பின ராகவும் சேவைபுரிந்த **அ.லெ.மு. ராசீக்** அவர்கள் கைவண்ணத்தில் '**கனி அப்பா**' அவர்கள் தொழில் தொடங்கிய நகரப் பின்னணியையும், அவர்களது அருஞ்சேவையையும் இங்கே வெளிச்சமிடு கிறேன்.

❒ *ஆங்கிலேயர் இலங்கையையும் ஆண்ட காலத்தில் மலையகப் பகுதித் தேயிலை உற்பத்திக்கு தமிழ்த் தொழிலாளர்களை இந்தியாவிலிருந்து கொண்டு வர கப்பலையும், புகையிரதத்தையும் பயன்படுத்தியது வரலாறு. அப்பொழுது பிரதான இடமாக இருந்த ரயில் நிலையமே (ஜங்சன்) பொல்கஹவெல.*

*ராமேஸ்வரத்திற்கு எதிர்க்கரையிலிருந்த தலைமன்னாருக்கு கப்பலில் கொண்டு வரப்பட்டவர்களை, வடதிசை வரை (யாழ்ப்பாணம்) போடப்பட்ட புகையிரத கிளைப்பாதையில் பயணிக்கச் செய்து இந்த ஜங்சனில் இறக்கி, கொழும்பிலிருந்து புறப்பட்டு வந்த மற்றொரு ரயிலில் மற்றொரு பாதையில் மலையகம் அனுப்பினர்.*

*அதற்கு நிறையக் காலமும் நேரமும் எடுத்தது. அவ்வாறு வருவோரையும், போவோரையும் தங்க வைத்தனுப்ப ஒரு தொழிலாளர் முகாம் (லேபர் கேம்ப்) இங்கு அமைந்திருந்தது.*

*ஆக, புகையிரத நிலையத்தைச் சூழ ஒரு சிறு நகரம் நிறைய கடைகளுடன் உருவாயிற்று.*

*ஆரம்பத்தில் இந்திய வர்த்தகர்களே செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர். திருநெல்வேலி, இராமநாதபுர மாவட்டத்தவரே பெரும்பான்மையாகக் காணப்பட்டனர். குறைந்தளவில் அதிராம் பட்டினம், பரங்கிப்பேட்டை, கோட்டார் (நாகர்கோவில்) வணிகர்களும் இருந்தனர்.*

*அபூர்வமாக அய்யம்பேட்டையிலிருந்து அப்துல் கனி சாகிபு என்ற இளவயதுக்காரரும் இருந்தார்.*

*இவர் ஊரைச் சேர்ந்த பலர் கண்டி, ஹட்டன் டிக்கோயா என மலைப் பிரதேச ஊர்களில் வணிகம் செய்ய, இவர் மட்டும், இப் பகுதி சிங்கள மக்களின் பிரதான உழைப்பு விவசாயமாக இருப்பதை மனத்தில் கொண்டு அரிசி வியாபாரம் தொடங்கினார். எப்பகுதிக்கும் இலேசாக ஏற்றி அனுப்ப ரயில் வசதிகள் இருப்பதையும் கவனத்தில் எடுத்து தொழிலில் தைரியமாக இறங்கினார்.*

*பல பகுதிகளிலும் இருந்து சேகரிக்கப்பட்ட அரிசி மூடைகள் மலைநாட்டுக் கம்பளை, நாவலப்பிட்டி, ஹட்டன், மஸ்கெலியா, டிக்கோயா, பண்டாரவளை, பதுளைப் பகுதிகளுக்கு ரயில் மூலம் சென்றன.*

*இவ்வாறு அரிசி மற்றும் நவதானிய வியாபாரியாக வாழ்க்கையைத் தொடங்கிய ஒருவர் இலங்கையில் பிரபல வர்த்தகப் பெருந்தகையாகி பல ஊர்களிலும் சுமார் இருபது வணிகக் கிளைகளை ஏற்படுத்திய அதிசயம் நிகழ்ந்தது !*

*அதைத் தொடர்ந்து செல்வம் கொழிக்கும் ஆசை அற்றுப் போய் மெஞ்ஞானத் துறையில் ஆர்வம் மேலிட்டு, உலக ஆசாபாசங்களில் பற்றற்று அகமியத் துறையில் வழிகாட்டும் காமிலான ஒரு ஷெய்கைத் தேடும் அற்புதமும் நேர்ந்தது.*

*ஆரம்பத்தில் கல்வத்து ஹஜரத் காஜா ஜவ்ஹர்ஷா வலி அவர்களுக்குத் தொண்டு புரிந்து முரீதும் பெற்று காதிரிய்யா, கிஷ்தியா தரீக்காவில் இணைந்தார்கள்.*

*பின்னர், ஷெய்கு முஹம்மது ஹக்கீம் சாஹிபு (வலி) அவர்களை அணுகி ஆன்மிக ஞானம் அடைந்தனர்.*

*இதற்குச் சில காலங்களுக்குப் பிறகு ஒரு மகானின் அபூர்வ சந்திப்பு கொழும்பில் ஏற்பட வாழ்க்கை மாபெரும் திருப்புமுனைக்குள்ளானது.*

*அச்சமயம், இலங்கையில் மிகப் பிரபலமாகத் திகழ்ந்த காயல் பட்டினம் தைக்கா சாஹிபு (வலி) அவர்கள் புத்திரர் செய்யிது முஹம்மது சாலிஹ் (வலி) அவர்களுடனான நேர்முகம் அய்யம்பேட்டை அப்பா அவர்களை அடியோடு திசை திருப்பி விட்டு விட்டது.*

*கொழும்புக்கு வந்து அடிக்கடி சந்திப்பதும் பணி விடைகள் புரிவதுமாக வாணிபத்தையே மறந்தார்கள். அன்னாரின் நிறை*

*அன்புக்குப் பாத்திரமானார்கள்.*

*அன்னவர்களிடமே முழுத் தீட்சையும், கிலாபத்தையும் அனைத்து ‘இஸ்மு’களையும் ஓதிவரக்கூடிய ‘இஜாஸத்’ என்னும் அனுமதியையும் பெற்றனர்.*

*ஆதம் (அலை) கால் பதித்த பாவா ஆதம் மலையிலும் (ஹட்டன் – சிவனொளிபாத மலைப்பகுதி) மெய்நிலை கண்ட ஞானி முஹைய்யதீன் அப்துல் காதிர் ஜீலானி தங்கித் தவமிருந்த ‘தஃப்தர் ஜீலானி’ – (இரத்தினபுரி பலாங்கொடைப் பகுதி)யிலும் தானும் தனித்திருந்து தவம் செய்து தவசீலராயினர்.*

*இலங்கையில் இவர்கள் சென்ற இடமெல்லாம் இவரது கரம் பற்றிப் பலர் தீட்சை பெற்றனர்.*

*பொல்கஹவெலையில் வாழ்ந்த முஸ்லிம்கள் பெரும்பாலானோர் முரீதுகள் ஆகினர். அதனால், அவர்களது சன்மார்க்க நடவடிக்கைகளுக்காக ஒரு தைக்காலின் தேவை உணரப்பட்டது.*

*ஆத்ம ஞானியான ஷெய்குகாவன்னா ஆனா அப்பா அவர்களுக்கும் தன்னை உருவாக்கிய இடத்தில் உள்ள தேவை புரிந்து நகர மத்தியில் ஒரு தைக்காலை நிறுவினார்கள்.*

*ஆரம்பத்தில் அது ‘சம்மங்காரப்பள்ளி’ என்றே தமிழ்நாட்டு முஸ்லிம்களைச் சுட்டி அழைக்கப்பட்டு நாளடைவில் டவுன் பள்ளி என்றும் ‘நூருல்ஜன் தக்கியா’ என இன்றும் பெயர் பெற்றுள்ளது.*

*இங்கு காணப்படும் ஒரு விசேடம் ஷெய்கு ‘காவன்னா ஆனா அப்பா’ அவர்கள் தமிழ்நாட்டுக் கேணிகளின் பாணியில் அமைந்த பிரம்மாண்டக் கிணறு! உட்புறச் சுவரைச் சுற்றி வட்டமாகப் படிகள் அமைந்து கீழ் மட்டம் வரை செல்கின்றன. நீர் குறையும் பொழுது படிகளில் இறங்கிப் போய் நீரை அள்ளிக் கொள்ளலாம்.*

*இன்று தக்கியாவும், கிணறும் அய்யம்பேட்டை ஷெய்கு அப்பா பெயர் சொல்லி பொல்கஹவெல மக்களை மெய்மறக்கச்செய்கின்றன.*

– இவ்வாறு அன்பர் அ.லெ.மு. ராசீக் அவர்கள் அழகிய தகவல் குறிப்புகள் அளித்து என் வேலைப்பளுவை மிகவும் குறைத்து விட்டார்கள்.

அன்னாருக்கு நன்றி தெரிவித்து, அப்பா அவர்கள் அங்கு கட்டுவித்த ‘தைக்கால்’ படத்தை மிக மகிழ்வுடன் எதிர்ப் பக்கத்தில் வழங்குகிறேன்.

மேலும் சில முக்கிய தகவல்கள் :

இலங்கைப் பொல்கஹவெலையில் மட்டுமல்ல; கண்டிமா நகருக்கு சில கி.மீ. தூரமுள்ள அடுத்த நகரமான கம்பளையிலும் ஒரு தைக்கால் நிறுவப்பட்டதாக ஒருதகவல்.



அவர்கள் பெரும் வாணிபம் செய்தபோதிலும், மனம் ஞான வழியிலேயே சென்றதை நாகூர் தர்ஹா வித்துவான், மலேசியா, இலங்கைப் புகழ் **குலாம் காதிறு** நாவலர் ஓர் அற்புதமான உவமானத்தின் மூலம் விளக்கியுள் ளார்கள்.

உவர் நீரில் வாழும் மீன் எவ்வாறு அந்த உவர்ப்புச் சுவை கலவாதிருக்கிறதோ அதுபோன்று அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தும் வாழாதது போன்று வாழ்ந்தார்களாம்!

**பெரும் பொருளில் பெருந்தொழிலில் பெருங்குடியில்**
**பெரும் வாழ்வில் பிரியா னேனும்**
**கருங்கடலின் உவர்நீரில் பிரியாத**
**மீனுவர்ப்புக் கலவா வாறு**
**மருங்கிருந்தும் இல்லையென மனத்திருக்கும்**
**இயற்கையதே வழமை யாக்கி**
**ஒருங்குலகப் பற்றுவிட்டு ஒரு பொருளில்**
**பற்றுவைத்துள்ள சீரான்**

– இவ்வாறு அவர்கள் உலகில் இருந்தும் இல்லாதவர்கள் போன்று வாழ்ந்து வந்ததனால் இல்லையென்றிரப் போர்க்கு இல்லையென்றுரையா அருளிதயம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

இதனை இன்னொரு பெரும்புலவர் **கோட்டார் சதாவதானி செய்குத்தம்பிப் பாவலரும்** குறிப்பிட்டுள்ளார்கள்.

**‘‘இலையென்று மொழியினுக் கிலையென மொழியா**
**துலைவற வருளத் தலையுறு குணத்தன்**
**வானோ? காம தேனோ? வுளகை**
**யானோ? பைந்தருத்தானோ? என்னப்**
**போற்றிட நின்றோன்; போற்றிட நின்றோன்;**
**வேற்றிடத் துள்ளும் போற்றிட நின்றோன்’’**

– எனப் பாராட்டு மழை பொழிகின்றார்.

புலவர் பெரும் மக்களுக்கு வாரி வழங்கிய வள்ளலான அவர்களே ஒரு நல்ல கவிஞர்!

ஒரு நல்ல கவிதையை மாதிரிக்குத் தரவேண்டுமே என்பதில் தடுமாற்றம் ஏற்பட்டபொழுது, பன்னூலாசிரியர், முன்னோடி எழுத்தாளர், மர்ஹூம், தொண்டி **எம்.ஆர்.எம். அப்துர் ரஹீம்** அவர்கள் தொகுத்த '**முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்**' பேருதவி புரிந்தது.

சுவனப் பெருவாழ்வை நாடி தமக்கு முன்னமேயே பயணித்து விட்ட தம்முடைய ஆசான் முஹம்மது ஸாலிஹ் (வலி) அவர்களை சதா சர்வகாலமும் நினைத்தவர்களாக தம்மை அங்கு அழைக்க அவர்களிடமிருந்து தூது ஒன்று வருவது போன்று உணர்கின்றார்கள். உடன் உருவாகி விடுகிறது எளிய இனிய பாடல்! ('காவடிச் சிந்து?)

**என்னைக் கூப்பிடச் சொன்ன மன்னவரிடத்தில் போய்**
**சொன்னதை மறையாமல் சொல்லடி**
**என்னைப் போலவர் தொண்டர் கோடி கோடியானாலும்**
**என்னைக் கைவிட நீதியாமோடி**
**காஹிர்ப் பதிபிறந்து காலமூன்று முணர்ந்து**
**காமிலாய் வந்த குருவாமடி**
**மாஹிர் ஷைகு முகம்மது ஸாலிகு வலியுல்லாஹ்**
**மாதவர் அனுப்ப வந்தயோடி**

(நன்றி: யுனிவர்சல் பப்ளிஷர்ஸ்)

ஆன்மிக ஒளி வீசும் ஞானத் தீபங்களாக அன்னாரது இரு கவிதைத் தொகுதிகள் ''**ஞானாந்த ரத்தினம்**'' – ''**ஐனுல் ஆரிஃபீன்**'' என்பன மிளிர்கின்றன.

நீண்ட காலம், கண்டிமாநகர் தர்ஹாவித்துவான் **அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர்** அவர்கள் உற்ற தோழராக விளங்கிய உவகையான வரலாறும் உண்டு.

பதின்மூன்று, ஆண்டுகளுக்கு முன் வேறொரு நூலில் நான் பதித்திட்ட தகவலின்படி, (அதனை இவ்வத்தியாயத் துவக்கத்திலும் அளித்தேன்). அன்னாரது அடக்கத்தலம் கொழும்பு மத்தியில் பன்னிரண்டாம் வட்டாரம், இலக்கம் 132, புதிய சோனகர் வீதியில் (நியூ மூர் ஸ்ட்ரீட்) உள்ள ''**சாலிஹ் தைக்கால்**'' கட்டடத்தில் அமைந்துள்ளது.

அவர்களது ஒய்வுறக்கம் இந்தப் பன்னூலாசிரியர் பிறக்க ஓராண்டு இருக்கு முன் 1936ல் இலங்கையிலேயே ஏற்பட்டது.

அவர்களை நினைந்துருக வேண்டிய நாள் ஒவ்வொரு ஆண்டும் துல்கஃதா பிறை 15ல் வருகிறது. மேற்படி தைக்காவில் சிறப்பாக நினைவு கூருகிறார்கள்.

அங்கே அவர்களது கபுரடி மீஸானில் சுருக்கமான வரலாற்றுக் குறிப்பும் காணப்படுகிறது.

அத்துடன், அங்குள்ள கல்வெட்டு ஒன்றில் காணப்படும் வாசகங்கள் இவை:

***ஜமாஅத்துஸ் ஸாலிஹிய்யா ஃபீ தரீக்கத்தில் காதிரிய்யாவின் தலைமையகம். சங்கைக்குரிய ஷைகுஷ் ஷரீஅத் ஷெய்கு அப்துல் கனி ஸாஹிபுல் காதிரி ரிஃபா(வலி) அவர்களால், அன்னவர்களின் நேசமிகு ஷெய்கும், அஷ்ஷைகு அப்துல் காதர் தைக்கா ஸாஹிப் வலிய்யுல்லா' (வலி) (ஹிஜ்ரி 1191 – 1271 / கி.பி. 1777 – 1854) அவர்களது மைந்தர் ஷெய்குல் ஆஷிகீன் செய்யது முஹம்மது சாலிஹ் (வலி) அவர்களுக்கு (ஹிஜ்ரி 1242 1323/ கி.பி 1826 – 1905) கௌரவமாகவும் நினைவாகவும் ஹிஜ்ரி / 1346 கி.பி. 1925ல் இந்தத் தைக்கா ஸ்தாபிக்கப்பட்டது.***

இதன்படி அவர்களது மறைவுக்கு பதினொரு ஆண்டுகளுக்கு முன்பே அன்னவர்களின் 'நேசமிகு ஷெய்கு' அவர்களுக்கு அழகிய நினைவிடம் கொழும்பின் இதயப் பகுதியில் நிறுவப்பட்டு விட்டது.

இன்றையப் பொழுதில் இப்படியொரு மாமனிதரைப் பார்ப்பதரிது.

நீங்கள் எப்படி?

எனக்குள்ள வேதனை எல்லாம் இப்படியான தகவல்களை வரலாறுகளை இளைய தலைமுறையினர் ஒருபொருட்டாகக் கருதாதிருப்பது.

அதனால் சமூகத்திற்கு சரித்திரங்களே அற்றுப் போகும் அவலம்.

இருக்கட்டும். நாம் நமது தேடலில் குறியாக இருப்போம். அவற்றைப் பதிவு செய்வதில் அல்லும் பகலும் உழைப்போம். இன்ஷா அல்லாஹ்.

கடந்த 01.01.2010ல் (ஹிஜ்ரி 1431 – முஹர்ரம்) ஷெய்கு 'காவன்னா ஆனா அப்பா' அவர்களது குடும்பத்தார் ஒரு பழைய ''**ராத்தீபு கிதா**'' பை மறுபதிப்புச் செய்துள்ளார்கள். அதன் ஐந்தாம் ஆறாம் பக்கங்களில் பின் காணப்படும் பதிவுகள் உள்ளன:

**** 'அந்தத் தைக்காலுக்கு பிற்காலத்தில் எனது பேரப் பிள்ளைகளில் ஒருவர் உதவி செய்வார்' என்று அப்பா அவர்கள் கூறிச் சென்றதற்கிணங்க கடந்த 2005 செப்டம்பர் 17 சனிக்கிழமை ஹிஜ்ரீ 1426 ஷஃபான் பிறை 12 அன்று அத்தகைய அறப்பணி நடந்தேறியது. அல்ஹம்துலில்லாஹ்!***

***இன்று வரை அப்பாவுடைய பேரப்பிள்ளைகளும், மகன் வழி வாரிசுகளும் தைக்காலுடைய தொடர்புடனேயே இருந்து வருகிறார்கள்.***

***அப்பா நாயகத்தின் மகள் ஜமீலா பீவியை நமதூரில் 'குண்டு மவ்லிசா' என்றழைக்கப்பட்ட மவ்லானா மவ்லவி அப்துல் காதர் பாகவி அவர்கள் மண முடித்ததன் மூலம் ஷைகுனாவுடைய மருமகனாக அறியப்பட்டார்கள். இந்தத் தம்பதியருக்குப் பிறந்து தற்போது நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிற அல்ஹாஜ் குண்டு அப்துல் வஹாபு காதிரி, மவ்லவி அப்துல் அலீம் சித்தீக்***

*மன்பஃ போன்றோராகும். அதாவது, நாயகத்தின் பேரப்பிள்ளைகளாகும். இன்று வரை அந்தத் தைக்காலின் பரம்பரை டிரஸ்டியாகவும் இவர்களே இருந்து வருகிறார்கள்.*

***இங்கு 1985 அக்டோபர் 16ம் தேதியிலிருந்து ''அல்மத்ரசத்துஸ் ஸாலிஹிய்யா ஃபீ தரீக்கத்தில் காதிரிய்யா' என்கிற பெயரில் ஒரு மத்ரஸாவும் இயங்கி வருகிறது. அப்பா அவர்களது காலத்திலேயே இந்த தைக்காலைப் பராமரிப்பதற்கு ஏற்ற வகையில் ஒரு டிரஸ்ட் அமைக்கப்பட்டு அந்த அறக்கட்டளை யின் மூலமே நிர்வாகப் பணிகள் நடைபெற்று வருவது என்பது குறிப்பிடத்தக்கது!***

அபிமானிகளே!

அய்யம்பேட்டை சக்கராப்பள்ளிக்கும் இலங்கைக்கும் உள்ள தொன்மைத் தொடர்புகளின் காலம் சுமார் 150 ஆண்டுகள் என்பது என் கணிப்பு.

அத் தொடர்புகளுக்கு முதன் முதல் அஸ்திவாரமிட்டவர்கள் ஒரு பெரும் வணிகராக, ஆன்மிக ஞானியாக, தைக்கால்கள் நிறுவியவர்களாக குருநாதருக்கு நினைவிடம் அமைத்தவராக, கொடை வள்ளலாக, கவிஞராகத் திகழ்ந்துள்ளார்கள்.

தாம் பிறந்த மண்ணுக்குப் பெரும் பெருமையைத் தேடிக் கொடுத்து விட்டு அமைதியாக ஆனந்தமாகக் கொழும்பில் ஒய்வுறக்கம் கொண்டுள்ளார்கள்.

ஆகவே, அவர்களைப் பற்றி விரிவாகப் பதித்திட பக்கங்கள் சில அதிகமாகி விட்டன.

காலத்தின் கட்டாயம்.

விருப்பக் குறைவு ஏற்பட்டுள்ளவர்கள் பொறுத்திடுக.

இப்பொழுது உடனடியாக மற்றொரு மாமனிதரை நினைவு கூர்ந்திடலாம்.

அன்னாரின் விவரங்கள் சுருக்கமாகவே அமைய முயற்சிகள் எடுத்துக்கொள்கிறேன்.

## ஆத்ம ஞானி அப்துல் கபூர் மஸ்தான்

அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி சமூகம் பல பெரிய குடும்ப வம்சத்தினர்களை அடைந்துள்ள ஒன்று.

அந்த வகையில் '**மாமா ராவுத்த**' என அழைக்கப்பட்ட குடும்பத்தாரில் ஓர் ஆத்ம ஞானி உருவானது!

அபூர்வமாக அவர்கள் பரம்பரையில் ஓர் ஆன்மிகத் தவசீலர் உருவானது, அதுவும் இலங்கையில், அவனது எண்ணப்படியும் திட்டப்படியும் என, எனக்குப் பழகிப்போன வார்த்தைகளையே பதிக்க வேண்டியதாகிறது.

அத்தகைய ஒருவர் உருவாக ஒரு பின்னணியும் அமைந்துள்ளது.

'மாமா ராவுத்த' குடும்ப முன்னோடியான மர்ஹூம், **கனம் மீரா மொகிதீன்** அவர்கள், ஹலரத் ஷேம் சாகிப் (வலி) (தர்கா சக்கராப்பள்ளி வழுத்தூர் நெடுஞ்சாலையில்) அவர்களது பேத்தியார் சாந்த் பீபியை மணம் செய்கிறார்.

இல்லத்தரசியால் இல்லமெங்கும் ஆன்மிக மணம் அபரிமிதமாக வீசத் தொடங்கி விடுகிறது.

அன்னாரது இரண்டாம் மகன் **ரஹ்மத்துல்லா சாஹிபு**க்கு இலங்கை வணிகத் தொடர்புகள். அவரது பெயரிலேயே '**ரஹ்மத்துல்லா அன்கோ**' நிறுவப்படுகிறது.

அவருக்கும் **ஆயிஷா பீபி** அம்மையாருக்கும் பிறந்தவர் களில் ஐந்தாவது குமாரரான **அப்துல் கபூர்** தந்தையாரின் நிறுவனத்தில் ஓர் அங்கத்தவராக இலங்கை புறப்பட்டு விடுகிறார்.

இருப்பினும், பற்றற்ற வாழ்க்கையில் உற்றவராகி 1948களில் ஊர்வந்து, ஒரு தென்னந்தோட்டத்தில் தனித்திருந்து தவஞானியாகிப் போகிறார்.

வடக்கே அஜ்மீருக்கும் போய் சில காலம் தங்கினாலும் தனக்கு இலங்கையே இரண்டாவது தாயகம் எனக்கருதி ஒரே ஆண்டிலேயே மீண்டும் கடலைக் கடந்து விடுகிறார் (1949).

இப்பொழுது அவர் தேர்ந்தெடுத்த இடமோ, இரத்தினக் கற்கள் அகழப்படும் **இரத்தினபுரிக்கு** அடுத்ததான **பலாங்கொடை** என்னும் பிரதேசத்தில் பல்லாண்டு பல்லாண்டு ஆன்மிக வரலாறு கொண்டிருக்கும் **தப்தர் ஜீலானி.**

ஒரு பெரும் சரணாலயமான இந்த இடத்தில், மெய்நிலை கண்ட பாக்தாத் ஞானி **மஹ்பூப் சுபுஹானி, முஹையத்தீன் அப்துல் காதிர் ஜிலானி** அவர்கள் சமூகமளித்து தவக்கோலம் பூண்டிருந்தனர் என்பது வாழையடி வாழையான வரலாறு.

அத்துடன், இங்குள்ள மலைக் குகையில் நாகூர் ஹலரத் ஷாஹுல் ஹமீது பாதுஷா மஹல்லத்தீவிலிருந்து (MALDIVES) வந்து தவநிலை மேற்கொண்டார்கள் எனவும் சொல்வர்.

இக்குகையிலேயே மாமா ராவுத்த அப்துல் கபூர் மஸ்தான் அவர்கள் பெற்றோரையும் மற்றோரையும் அறவே மறந்து முற்றும் துறந்த மெய்ஞான சொரூபராகி '**மஸ்தானுல் வலி**'யாக மகிமை பெறுகிறார்கள்.

இதன்படி –

1949லிருந்து 1965 வரையில் சுமார் 16 ஆண்டுகள் ஒரு சக்கராப்பள்ளித் தவசீலரை இலங்கை தப்தர் ஜீலானி தனதாக்கிக் கொள்கிறது.

அன்னாரது ஆத்மசீடர் (கலீஃபா) **இஸ்மாயில்** என்பாரிடம் 1965ன் ஒரு பொழுதில் தமது தஸ்பீஹ் மணிமாலையைக் கைகளித்து விட்டு அனைத்தும் வல்லவனின் அன்பான அழைப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

அம்மலையின் அடிவாரத்தில் நல்லடக்கம் செய்யப்பட்ட ஆரிபுல்லாஹ் அப்துல் கபூர் ('மாமா ராவுத்த') மஸ்தான் அவர்களுக்கு நாளடைவில் **'கேத்தல் பாவா'** என்ற மற்றொரு மகானால் திருப்பாலைக்குடி (முகவை மாவட்டம்) காஜா என்பவரின் அனுசரணையில் அழகிய மக்பரா அமைக்கப்பட்டுள்ளதாக ஒரு தகவல்.

ஆக –

கொழும்பின் இதய பாகத்தில் (புதிய சோனகர் தெரு) அப்துல் கனி அப்பா (வலி) அவர்களும், சில நூறு கி.மீ. தூரத்தில் இரத்தினப் புதையல்கள் கிடைத்திடும் மண்ணில் அப்துல் கபூர் மஸ்தான்அவர்களும் அய்யம் பேட்டை – சக்கராப்பள்ளி ஆன்மிகப் பெருமைக்கு தங்கள் பங்களிப்பை வழங்கிய வண்ணம் உள்ளனர்.

இவர்கள் போல் இன்னும் ஓரிருவர் ஆத்ம ஞானிகளாக ஆகாத போதிலும் அல்குர் – ஆன் புகழ் பரப்புபவர்களாகவும் இங்கும் அங்கும் பிரபலமடைந்துள்ளார்களாவர்.

அவர்களையும் மற்றும் மண்ணின் மைந்தர்கள் பலரது தொடர்புகளையும் ஆறாம் அத்தியாயத்தில் வெளிச்ச மிட்டுள்ளேன். அபிமானிகள் அறிந்து ஆனந்தப்படலாம்.

## சிந்திக்க ஒரு செய்யுள்!

**என்னைப் போன்ற மிகப்பலர்**
**ஏற்கனவே கபுரிலே (அடக்கத்தலம்) தூங்குகின்றனர்**
**எனினும், இன்றுள்ளோர் அவர்களை மறந்தனர்**
**எனது இளம் குஞ்சே, என்னைப் பற்றி நினைத்துப்பார்!**

*– பாரசீகக் கவிஞர் நிஜாமி*

இலங்கையில் ஆங்கிலேயர் ஆதிக்கக் காலத்தில் காயல்பட்டினத்தையும் கீழக்கரையையும் சேர்ந்த முஸ்லிம்கள் மலையகப் பெருந்தோட்டங்களுக்குப் பக்கத்தில் சிறு சிறு கடைகளை வைத்து வியாபாரம் செய்யத் தொடங்கி, தோட்டத் தொழிலாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தொடங்கினர்.

அவர்களுடன் ஏர்வாடி, தேவிப்பட்டினம், அம்மாபட்டினம், அதிராம்பட்டினம், அய்யம்பேட்டை போன்ற ஊர்வாசிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இவர்கள் அனைவருக்கும் கண்டி, கம்பளை, மாத்தளை போன்ற நகரங்கள் தங்கள் சொந்த ஊர் போலாகின.

17 ஆண்டுகளுக்கு முன் இலங்கை **`கீழக்கரை இனிய தொடர்புகள்'** (1998) நூலின் பக்கங்கள் 92–93ல் இந்நூலாய்வாரால் பதிவு செய்யப்பட்டுள்ள வரிகள்.

# 6.

# இனிய இலங்கைத் தொடர்புகள்....

அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளி மைந்தர்கள் இருவர் இலங்கையில் ஆத்ம ஞானிகளாய் திகழ்ந்து அடக்கம் பெற்றிருப்பதுடன் இலங்கைத் தொடர்புகள் முடிந்து விடவில்லை.

மூன்றாவது மனிதராக நான் அடையாளமிடப்படுபவரும் ஒரு வகையில் ஆத்மஞானிதான்.

ஆனால், ஒருபொழுதும் மஸ்தானாகவோ மகானாகவோ மாறி விடாமல் அருள்மறையாம் அல்குர்ஆனை மென்மேலும் மேன்மைப்படுத்த முன்னின்ற ஆன்மிகத் தொண்டர்.

அன்னார் இருபத்து நான்காண்டுகள் (24) அருள்சேவை புரிந்தவர்.

ஆரம்பத்தில் தேசியவாதி.

அப்புறம் முஸ்லிம் லீக் தொண்டர்.

பின்னர் இறக்கும் வரையில் அல்குர்ஆனின் தாசானு தாசர்!


அப்பொழுதெல்லாம் இலங்கை மார்க்க அறிஞர்களை, இலக்கியவாதிகளை, ஊடகவியலாளர்களை அணைத்து இணைத்து அருள்மறைப் பேருரைகளும், இறைஞ்சுதல்களும் (துஆ) – விருதும் பொற்கிழிகளும் என அய்யம் பேட்டை சக்கராப்பள்ளி மண்ணையே கமகமக்க செய்தார்!

'அல்குர்ஆன் மாநாட்டில் சர்வதேச மணம் வீசுமாறு பார்த்துக் கொண்டார். ஆண்டுதோறும் இலங்கைப் பிரமுகர்கள் அய்யம்பேட்டைக்கு வந்து குழுமத் தொடங்கினார்கள். சங்கைக்குரிய 'கண்டி மௌலானா' என்ற சலாஹுத்தீன் பாரிமௌலானா அவர்களை இந்தியாவுக்கு அழைத்து வந்து பரவலாக அறிமுகம் செய்வித்தவர் அவர்கள்தான். திருக்குர்ஆன் மாநாட்டில் கலந்து கொண்ட எங்களைப் போன்ற இலக்கியவாதிகள், சமூக சேவகர்கள், வரும் பிரமுகர்களுக்கு அறிமுகமாகி பரஸ்பரப் புரிந்துணர்வுடன் பரவலாகக் களப் பணியாற்றுவதற்கு அய்யம்பேட்டைச் சங்கமம் உதவியாயிற்று. இன்று என்னுடன் அதிக நட்புக் கொண்டுள்ள இலங்கை அன்பர்கள் பலரும் அய்யம்பேட்டைத் தொடர்பு வழியில் கிடைத்தவர்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டும்.'

– எனக் குறிப்பிட்டுள்ளார் பிரபல படைப்பிலக்கியவாதி. பன்னூலாசிரியர், சித்தார்க்கோட்டை மருத்துவர் **அல்ஹாஜ் 'ஹிமானா செய்யித்'** (செய்யித் இப்ராஹிம்) ('வான்மறை வழியில்....' சிறப்பு மலர் 2004, பக்.10)

இலங்கையில் இன்று பிரபல முஸ்லிம் ஊடகவியலாளராகத் திகழும் சிரேஷ்ட 'தினகரன்' நிருபர் **அல்ஹாஜ் எஃப். எம். ஃபைரூஸ்** தனது முதிய வயதிலும் இவர் அனுப்பிய மடல் ஒன்றைப் பொன்னெனப் போற்றிப் பாதுகாத்து வருகிறார்!

என்னை நம்பிப் 'பெட்டக'த்திலிருந்து எடுத்துத் தந்த கடிதம் ஆங்கிலத்தில் தான் உள்ளது. அதனால் என்ன, பார்வையிடுங்கள். அப்பொழுது புரியும் ஓர் அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி, ஜின்னா தெருக்காரரது ஆங்கிலப் புலமையையும், இலங்கைத் தொடர்புகளையும்!



IN THE NAME OF ALLAH

GRAND 15TH YEAR

**Holy Quran Conference**

( at Ayyampet - Tanjore Dist - Tamil Nadn )

Organising Committee :
Chairman :
HAJI, M.A. RAHIM B.A.
( Founder B. A. Trust Ayyampet )

Vice Chairman :
ALHAJ MOULANA
H. SALAHUDEEN BARI
( Kandy, Sri Lanka )

Secretary :
HAJI. A. JAFFAR ALI B.A.
Correspondant
Al-Mubeen Matric School
Ayyampet.

To be held Insha Allah
on 19th & 20th March 94

RECEPTION COMMITTEE :
Alhaj. A. Abdul Razak
A. M. Sulaiman B.A.,
Alhaj. N.P. Mohd Hussain
A. Mohd Ibrahim Johny
M. Shajahan

EXECUTIVE COMMITTEE :
Hafiz. Alhaj. S. Liaquat Ali
A. Abdul Guthoos
A. Abdul Aleem B.Sc.,
M. Sikkandar Ali
S. Rizwan Basha

Date : 14.2.94

To

Haji F.M.Fairoos, J.P.
Press Reporter,
B-U-G-2, Gunasinghapura,
COLOMBO - 12.
Sri Lanka.

Dear Brother - in - Islam,

Assalamu Alaikum,

The Holy Quran Conference will be taking place Insha Allah on 19th and 20th March, 1994.

You did an excellent job last year in reporting the conference events and we are happy to extend you an invitation this year as well, as a Special Invitee.

Please make it convenient to attend the conference and we will take care of all your expenses including your up and down air passage½ Wassalam.

Kindly be in touch with Haji Muslim Salahudeen or Janab Mana Mackeen for further details and travel arrangements.

Affectionately,
Yours - in - Islam.

(HAJI M.A.RAHIM)
Chairman.

P.S: We enclose an Invitation (in Tamil) in which we have already printed your name as special Invitee, which please note.

Correspondence to : 78, Jinnah Street, Ayyampet-Chakkarapalli-614 211. ( Tamil Nadu )
Phone : 42296, 42216, 42572 TEL-'BANUCOM'

**இம் மடலில் உள்ள முக்கியத் தகவலும் வேண்டுகோளும்:**

**‘‘இலங்கை ஊடகவியலாளரான நீங்கள் எங்கள் மண்ணின் வாசனை முகர வேண்டும். புனிதக் குர்ஆன் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும். விமானப் பயணச் சீட்டு அனுப்புவேன்.’’**

இவ்வாறான அபூர்வ அழைப்பு அவருக்குப் போக வேண்டிய காரணம் என்னவெனில் –

இலங்கை மீது அவர் கொண்டிருந்த பேரன்பும், நன்றியுணர்வும் தனக்கு வசதி வாய்ப்பு ஏற்படும் பொழுது இலங்கையரைப் பெருமைப்படுத்திட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணமும்.

இம்மாமணியைக் குறித்து, கும்பகோணத்தின் ‘**ஆசிகா தங்க மாளிகை**’ உரிமையாளர் **அல்–ஹாஜ் வி.ஏ. ஜகஃபர் ஸாதிக்** யாத்த கவிதை ஒன்றில் –

‘இலங்கைதான் இஸ்லாமியச் சிறுத்தை! உங்களுக்கும் இடம் தந்திருக்கிறது’ என்கிறார்! யாரை நோக்கி?

இனியும் பெயரைக் குறிக்காமல் ‘சஸ்பென்’சில் வைத்தல் எழுத்துக்கே மதிப்பில்லை’

அன்னார் புகழ் பெற்ற **ஹக்கீம் ‘கானா ஆனா மூனா**’ அவர்களது எட்டாவது மகனார் அப்துல் ரஹீம் ‘**பீ.ஏ. ஹாஜியார்**’

அவர்கள் தமது இருப்பத்து மூன்றாம் இளம் வயதில் இலங்கை நோக்கிப் புலம் பெயர்ந்து விட்டதை வரலாற்றுப் பதிவாகப் பாடி விட்டார் ஹாஜி ஜகஃபர் ஸாதிக்.

அவர்கள் ஏன் அப்படிப் பதித்தார்கள் என்பதற்கு ஒரு வரலாற்றுப் பதிவிருக்கிறது.

இளம் இரத்தம் துடிதுடிக்கும் இளைஞர் அப்துர் ரஹீம் பாகிஸ்தானின் தந்தை ஜின்னா சாஹிப் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட ‘நேரடி நடவடிக்கை’ எனும் அறப் போராட்டத்தின் தொடர்ச்சியாக 1947ம் ஆண்டு ஜனவரி 20ம் தேதி அய்யம்பேட்டையில் நடைபெற்ற எழுச்சி ஊர்வலத்திற்கு தலைமை ஏற்றார். ஊர்வலத்தின் பின் தலைவர் என்ற முறையில் தம்மை ஆங்கிலேய அரசு கைது செய்யக்கூடும் என்ற செய்தியறிந்த அவர்கள் உடனடியாக தலைமறைவானார்.

அதே வேகத்தில் தனுஷ்கோடியில் (ராமேஸ்வரம் அல்ல) ‘ராமானுஜம்’ கப்பலேறினார். இலங்கையில் மஸ்கெலியா என்ற ஊரில் வெகு சிறப்பாக நடந்து கொண்டிருந்த **அ. நத்தர்ஷா** நிறுவனத்தில் தலைமை லிகிதராக (கிளார்க்கர்), நூறே ரூபா சம்பளத்தில் பணியாற்றத் தொடங்கினார். அவரது ஆங்கிலம் அவருக்குக் கை கொடுத்தது.

இவ்வாறு நான்காண்டுகள் இலங்கை மலையகத்தின் கடுங்குளிருக்குப் பழகிப் போனார்.



அவர் கடமை புரிந்த மஸ்கேலியா சிறு நகரம், ஹட்டன் டிக்கோயா இடங்களுக்குப் பக்கம். அங்கு பல அய்யம்பேட்டை வாசிகள் சிறுசிறு தொழில்களில் இருந்ததும் ஒரு முக்கியத் தகவல்.

எனினும், சில ஆண்டுகளுக்குள்ளேயே **பி.ஏ. ஹாஜியார்** அவர்களுக்கு மற்றொரு நல்ல வாய்ப்பு மலேசியாவிலிருந்து வந்ததால் அங்கு செல்ல வேண்டியதாயிற்று. பின்னர் சிங்கப்பூரும் சிக்கெனப் பிடித்துக் கொண்டது.

ஆக, ஆரம்பத்தில் தனக்கு நல்ல புகலிடமளித்துத் தொழிலும் வழங்கிய இலங்கை மண்ணை மறந்தாரில்லை.

பிரதியுபகாரம் புரிய அல்குர்ஆன் மாநாடுகளின் வாயிலாக அனைத்தும் வல்லவன் வழிகாட்டினான்.

தமிழக உலமாப் பெருமக்களின் பேருரைகள் கௌரவங்கள், விருதுகள், பொற்கிழிகளின் முடிவில் எங்கள் கண்டிமாநகர் ஒப்பாரும் மிக்காரும் இல்லா மார்க்கப் பேறிஞர் **மௌலானா எச். சலாகுதீன் பாரி** அவர்களது ‘துஆ’ இறைஞ்சுதலை மாநாட்டிற்குக் கிரீடம் சூட்டுவது போலாக்கினார்! கடந்த ஆண்டு (2013) ரமளான் சமயத்தில் அன்னார் அல்லாஹ்வின் அழைப்பில் பயணமாகியது சபூர் செய்யப்பட வேண்டும்.

மர்ஹூம் – ‘**கண்டி மௌலானா**’ அவர்களது ‘துஆ’ இறைஞ் சுதலை ஓராண்டு ஈராண்டுமல்ல, பல்லாண்டுகள், 2003 ஜனவரி 27–ல் தம்மைவிட்டுப் பிரியும் வரை ‘பீ.ஏ. ஹாஜி தொடர்ந்தார்கள், தொடர்ந்து கொண்டேயிருந்தார்கள்.

அந்த ஜனவரி இறுதி நாட்களில் ஒருபொழுதில், தமது உலகத் தரிப்பு ஊரில் முடியப் போகிறது எனப் புரிந்ததோ என்னவோ, இருபத்து நான்காவது அல்குர்ஆன் மாநாட்டை வழமைக்கு முன்னதாகவே நடத்தி முடித்தார்கள்.

அடுத்து இருபத்தைந்தாவது வெள்ளி விழா மாநாட்டை ஆவலாய் எதிர்பார்த்துக்கொண்டிருந்த தமிழகத்தாரோடு இலங்கையரையும் ஏங்க வைக்கத் திட்டமிட்ட இறையோன் அவர்தம் இளகிய நெஞ்சுக் கூட்டிலே ‘அடைப்பை’ உண்டு பண்ணி அழைத்துக் கொண்டான்.

அனைத்தும் வல்லவன் அவர்களுக்கு மாண்புயர் மகிமைகளையும் அள்ளி வழங்கிடுவானாக!

இந்த இடத்தில் எனது தனிப்பட்ட தகவலொன்றும் பதியப்பட வேண்டிய அவசியத்தை உணர்கிறேன்.

அபிமானிகள் யாரும் ‘சுய அளப்பு’ என அவதூறு பேசிடலாகாது என அன்புடன் வேண்டுகின்றேன். அனுமதியுங்கள்.

‘ஆலிம்களின் அன்பர்’ (முஹிப்புல் உலமா) ‘**பீ,எ. ஹாஜியார்**’ அவர்கள் ஒருமுறை இலங்கை வழியாக எங்கள் தேசிய விமான சேவையில் ஸ்ரீலங்கா

ஏர்லைன்ஸ்) சிங்கப்பூர் நோக்கிப் பறந்து கொண்டிருந்தபோது, நேரம் போக்க விமானத்தில் வழங்கப்பட்ட **எங்கள் நாட்டுத் தேசிய தினசரியின் வார இதழ் 'தினகரன்' வார மஞ்சரி** படிக்க, அதில் ஆறாம் பக்கம் பார்க்க, ஒரு '**லைட் ரீடிங்**' பகுதியும் மானாமக்கீன் கைவண்ணமும்!

'ஆஹா! எத்தகைய இந்திய – இலங்கை இணைப்புப் பாலமான எழுத்துக்கள்' என சகப் பயணி ஒருவரிடம் வாய்விட்டுப் புகழ, ஒரு சில மாத இடைவெளியில் சக்கராப்பள்ளி அல்குர்ஆன் மாநாட்டு மேடையில் அடியேன்!

'ஆலிம்களின் அன்பராகத் திகழ்ந்தவர் ஓர் இதழாளனை, இலக்கியக் காரனை பதினான்காம் அல்குர்ஆன் மாநாட்டு மேடையில் ஏற்றி கௌரவித்து விருதினையும், பொற்கிழியையும் வழங்கியதற்கு இப்பொழுது வயது இருபத்தொன்று (1993).

அதுவே, தமிழகத்தில் நான் அடைந்த அருமை அருமையான முதல் **விருது! பெற்ற பொற்கிழி!**

– எப்படி அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி மண்ணின் மனத்தையும் மைந்தரையும் மறந்திட இயலும்? ('நன்றிக் கடன்பட்டவன்' என முதல் அத்தியாயம் 17 ஆம் பக்கத்தில் பதித்திருப்பதற்கு காரணம் இப்பொழுது புரிந்திருக்கும்.)

இப்போதைய இந்த ஆய்வு எழுத்துக்கள் அனைத்தும் அன்னாருக்கும் ஊர் மக்களனைவருக்கும் என் நன்றிக் கடனே!

தகவலை வழங்க அனுமதித்ததற்கு ஆழிய நன்றிகள் அபிமானிகளே!

தொடர்ந்து செல்கின்றேன் என் பணியில்...

இப்பொழுது நான் சந்திக்கக் காத்திருப்பது ஊரின் முஸ்லிம் பரிபாலன ஜமாஅத் சபைத் தலைவர் ஹாஜி **ஓ.ஆர்.ஜே. முஹம்மது பஷீர்** அவர்களை!

'சந்திக்க காத்திருப்பதாக, குறிக்கக் காரணம்: ''என்னைச் சந்திக்க நீங்கள் வரக் கூடாது நானே உங்களைத் தேடி வருவேன்'' என அன்புக் கட்டளையிட்டு விட்டு, நான் தங்கியிருந்த ஜம்ஜம் ஹாஜியார் அவர்களது ரஹ்மானியாத் தெரு இல்லம் வந்துவிட்டார்கள்.

ஊராட்சி மன்றத் தலைவர் துரை புர்ஹான்தீன் அவர்களும் இப்படியே செய்தார்.

இந்த இருவருமே உறவினர்கள் என்பதைக் கால தாமதமாக அறிந்து வியந்தேன்.

''ஜமாஅத் சபைத் தலைவர் ஒரு கறார் ஆசாமி! ஒன்றையுமே அறிய முடியாது. தட்டிக் கழிப்பார்!'' என்று சிலர் பயம் காட்டி இருந்தார்கள்.

ஆனால், நிலைமையோ எதிர்மாறாக இருந்தது.



ஹாஜி ஓ.ஆர்.ஜே. முஹம்மது பஷீர் அவர்கள், ஊரின் அன்றைய இன்றைய முஸ்லிம் பரிபாலன ஜமாஅத் சபை வரலாற்றை அறியத் தந்தார்கள் சிறப்பாக!

அதிலும் 30.09.2011ல் சபை வெளியிட்ட '**வழிமுறை விளக்கக்குறிப்பு**' என்ற துண்டுப் பிரசுரத்தை வழங்கி சபையின் 'எதிர்நீச்சல்'களைப் பார்க்க வைத்தார்கள். உங்களில் பலரும் பார்த்திருப்பீர்கள். அதனால், மறுபிரசுரம் இல்லை.

### 'கே. முஹம்மது கனி அன்கோ'

கடந்த ஐந்தாம் அத்தியாயத்தில் 'மாமா ராவுத்தர்' வம்சத்தில் (மஸ்தான் சாகிப்) ஒருவர் இலங்கையில் உருவான கதை சொல்லியிருப்பதை அபிமானிகள் மறந்திருக்க மாட்டீர்கள்.

இந்த 'மாரா' குடும்பத்தில் மற்றும் இருவர் மாபெரும் வணிகச் செல்வர்களாக இலங்கையில் ஜொலித்திருக்கிறார்கள் என்பதுடன், ஒருவர் ஜமாஅத் சபைத் தலைவரது தாயார் ஸெய்தூன் பீவி அவர்களது தந்தையாராகவும் திகழ்வது தித்திப்புச் செய்தி!

இலங்கை மலைநாட்டில் ஹட்டன் (அட்டன்) என்ற பெருநகருக்கு அடுத்த நகரமாக தலவாக்கலை காட்சியளிக்கிறது. அங்கு 1917களில் பல சரக்குக் கடையுடன் ஆரம்பித்த **கே.முகம்மது கனி ராவுத்தர் சாகிபின்** வணிகம் கண்டி கம்பளை ஹட்டன் நுவரெலியா ஆகிய இடங்களிலும் ஆல விருட்சங்களாகப் படர்ந்தன. மளிகைக் கடை, நகைக்கடை, பேக்கரி எனப் பல்கிப் பெருகின.

அனைத்து நிறுவனங்களையும் மூத்த மகனார் **கே. அகமது சாகிபு** வழிநடத்தலில் மொத்தம் ஒன்பது சகோதரர்கள் நிர்வகித்ததாக தலைவர் **பஷீர் ஹாஜி** தகவல் தருகிறார்.

கண்டி மாநகரில் ஒரு பள்ளிவாசல் கட்டமைப்பிலும் கனி சாஹிபு அன்னார் குடும்பத்தினரும் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

அத்துடன் மாமா ராவுத்தர் குடும்பத்து **அ. தாவூத் பாட்சா சாஹிபும்** அவர்களும் இலங்கை அரசியல்வாதிகளுடன் நட்புப் பேணி வந்ததாகவும் தெரிவிப்பு. **(இந்தத் தகவல் வாலன் ஜே. சுலைமான் பாட்சா)**

### நத்தர் சாகிபு கம்பெனி

மஸ்கேலியா நகரில் பல பெரிய வாகனங்களைச் சொந்தமாக வைத்துக் கொண்டு வெள்ளைக்காரர்கள் நிர்வகித்த பல தேயிலைத் தோட்டங்களுக்கு அனைத்துப் பொருட்களையும் சுமந்து போய் அவர்கள் காலடிக்குச் சமர்ப்பித்த ஒரு போக்குவரத்து நிறுவனமே **அய்யம் பேட்டை சக்கராப்பள்ளி நத்தர் சாகிபு கம்பெனி.**

பெரும்பாலும் ஆங்கிலமே ஊடாடிய அவர்கள் அலுவலகத்தில் நமது பட்டதாரி '**பீ.ஏ. ஹாஜியார்**' நான்காண்டுகள் அருஞ்சேவையாற்றினார். (பிற்காலத்தில் பெண் எடுத்து சம்பந்தியுமானார்).

நத்தர் சாகிபு புத்திரர்கள் **அமீர்பாட்சா, காதர் பாட்சா** இருவரும் நிறுவனத்தின் தூண்களாக நின்றார்கள்.

## முஹம்மது காசிம் அன் கோ

ஜமாஅத் பேரவைத் தலைவர் ஒ.ஆர்.ஜே.யின் தந்தையார் **ஜமால் முஹம்மது** அவர்களது தங்கை **மும்தாஜ் பேகம்** மேற்படி அமீர் பாட்சாவின் மகனுக்கு மனைவியானார் என்பதையும் அபிமானிகள் ஒருதகவலாகத் தெரிந்து கொள்க.

மேற்கண்ட பிரபல நிறுவனங்களைப்போல, பெரிய அளவில் கொடி கட்டிப் பறந்த மற்றொரு நிறுவனம் '**முஹம்மது காசிம்** அன் கோ'வாம்!

இதுவும் தலைவர் அவர்கள் தந்த தங்கமான தகவலே!

## ஈயக்கார சகோதரர்கள்

அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளியில் யாருக்கும் தெரிந்த பெயரும் இடமும் ''**ஈயக்கார வீடு**''!

நான்கு சகோதரர்கள்: மர்ஹூம்களான ஈயக்கார **அ. முஹம்மது காசிம்** ராவுத்தர் ஈயக்கார ஜானா என்கிற **அ. ஜெய்னுலாப்தீன் ராவுத்தர் ஈயக்கார அ. முஹம்மது லெப்பை, ஈயக்கார அ. அப்துல் காதர் காதர் ராவுத்தர்.**

இந்த நான்கு சகோதரர்களும் இலங்கை மலையகப் பிரதேசங்களை வணிகத்தில் ஒரு கலக்கு கலக்கினார்களாம்!''

இன்றைக்கும் ஊரில் இவர்கள் குடும்பப் பெயர் நிலைக்க, அனைவர் சார்பிலும் 1935ல் '**ஜானா**' **ஜெய்னுலாப்தீன் ராவுத்தர்.** நெடுஞ்சாலை (வாணிபத் தெரு), முஹையத்தீன் ஆண்டகைப் பள்ளிக்கு அடி நிலம் வழங்கி கட்டடப் பணிகள் முழுவதையும் நிறைவேற்றியுள்ளார்கள்.

அருகே அடக்கஸ்தல இடத்தையும் அவர்களே வழங்கினார்கள் என்பதும் வரலாறு.

இம் மஸ்ஜிதின் நிர்வாகங்களை ஈயக்கார குடும்ப வழியினரான **அல்ஹாஜ் ஜே. ராஜ் முஹம்மது சாஹிப், ஜனாப்களான இ.ஜே. முஹம்மது பாட்சா சாஹிப், ஏ. அப்துல் அஜீஸ்** (அஜ்ஜீ) **சாஹிப்** ஆகியவர்கள் கவனித்து வருவதாகவும் ஒரு தகவல் 2003 'ஜாமிஆ மஸ்ஜித் திறப்பு விழா' சிறப்பு மலரில் உள்ளது.

இவர்களைப் போல் **ஈயக்கார ஏ. சாதிக் பாட்சா.**

மண வெளித் தெரு மஸ்ஜித் ஹலீமா நிர்வாகிகளுள் ஒருவராக இருப்பதையும் புரிய முடிகிறது.

இவை ஒன்பது ஆண்டுகளுக்கு முன் உள்ள தகவல்கள். இப்பொழுது மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

**மற்றும் முஹம்மது காசிம், முஹம்மது சித்தீக், அப்துல் லத்தீப், கமால் பாட்சா, எஸ். ராஜ் முஹம்மது, அ. நிஜார்அஹமது, சுலைமான் பாட்சா, அக்பர் பாட்சா, முஹம்மது தாஜுதீன், தீன் முஹம்மது, அப்துல் மாலிக், ஜெய்னுலாப்தீன், அஹமது பாட்சா, இ.இஸட் சாதிக் பாட்சா, டீ.இ.இ.** ஆகிய பலருடன் திருமதிகள் இருவர். ஜமீல் நகர் **ஸஃபியாகனி,** சபுரா தெரு, **ரமீஜா பீவி** ஆகியோரும் ஈயக்காரக் கிளையார்களாய் சேவை உள்ளம் கொண்டவர்களாய் திகழ்வதை என் ஆய்வுத் தேடலில் அறிந்து மகிழ்ந்தேன்.

மேலும், இங்குள்ள சபுராத் தெருவை (நகரை) 'ஈயக்கார சபுராத் தெரு' (நகர்?) என்பதிலிருந்து 'சபுரா' அம்மையார் குடும்பத்தின் முக்கிய ஒருவர் போலும்!

''அங்கே போய் பெரியவர்கள் யாரையாவது சந்திக்க முடியுமா? இன்னும் நிறைய இலங்கைத் தகவல் பெற்று விடலாமே!''

தலைவர் 'ஒ.ஆர்.ஜே.' பஷீர் அவர்களிடம் என் விருப்பை வைத்தேன்.

''எனக்கும் ஆசைதான். ஆனால் மிகவும் உடல் நலம் குன்றி பேசும் சக்தியும் இல்லாமல் ஒரு பெரியவர் மட்டும் இருக்கிறார். எந்தத் தகவலுக்கும் வசதி ஏற்படாது. பெண்களும் உதவ முடியாது'' என்ற போது என் விருப்பம் இன்னொரு திக்குக்குத் திரும்பியது.

''கனியார் குடும்பம் எப்படி? அவர்களும் கொடி கட்டிப் பறந்திருக்கிறார் களே!''

''ஆமா! ஆமா! அங்கேயும் நெலமை இப்படித்தான்! ஆசைக்கு ஒரேயொரு பெரியவரைத் தான் பார்க்கலாம். செவிப்புலன் குறைவு. வயது 93 எப்படி வசதிப்படுமா?''

''தேடலில், நேர்க்காணல்களில் நிறைய வசதிக் குறைவுகள் ஏற்படத்தான் செய்யும். அதப்பார்த்தால் காரியம் ஆகாது. தலைவர் அவர்களே!''

'அப்போ ஒன்னு செய்யுங்க. இப்ப நீங்க தங்கியிருக்கிற இந்த ரஹ்மானியாத் தெருவிலிருந்து புறப்பட்டு இடது பக்கமா ஜின்னா தெருவில உங்க நன்றிக்குரிய 'பீ'.ஏ. ஹாஜியார் வீட்டைத் தாண்டி போனீங்கன்னா ஒரு சின்ன முச்சந்தி. ரவுண்டானா ! அதுல ரயில்வே ஸ்டேஷன் பாதையை யாரும் அடையாளம் காட்டுவாங்க. அங்கே கனியார் ராஜ் முஹம்மது பெரியவர் வீட்டையும் சொல்லுவாங்க!''

''அப்படீன்னா, என்னோட வர உங்களுக்கு வசதிப் படாது போலிருக்கே!''

''ஆமா! ஆமா! உங்களப் பாத்துட்டு வெளியூர் போறத் திட்டம்! மொபைல் நம்பரத் தர்றேன். தொடர்பு வச்சுக்குவோம்''

முஸ்லிம் ஜமாஅத் சபைத் தலைவருக்கு விடை கொடுத்தேன்.

சில நிமிடங்களில் நானும் புறப்பட்டு, சொன்னது போலவே முச்சந்தியை அடைந்து விட்டேன்.

அச்சமயம் தான் அந்த அற்புதம்! எனக்காகவே அங்கே ஒருவரை இறைவன் நிற்கச் செய்திருந்தான்!

அவரும் அச்சொட்டாக என்னை நெருங்கினார்.

நெருங்கியதும் ஒரே நேரத்தில் சலாம் பகிர்ந்து கொண்டோம்.

''நீங்க எங்க ஊருக்குப் புதுசுங்கிறது புரியுது! எதுவும் நெனைக்காம இருந்தா, ஊர் எதுன்னு தெரிஞ்சிக்கிறேன்!'

நான் என் இயல்புப்படி அறிமுக அட்டையை வழங்கினேன்.

''அட! நம்ம இலங்கை! எங்க தகப்பனார் தொழில் செய்த தேசம். நீங்க வீட்டுக்கு வந்து தேத்தண்ணி குடிச்சிட்டுத்தான் போகணும்! பன்னூலாசிரியராக பல பட்டங்களோட வேற இருக்குறீங்க! என் புத்தகக் கடையையும் பார்க்கணும்!''

என் மீது மிகவும் கிருபையுள்ள எல்லா வல்லவன் இப்படியொரு ஏற்பாட்டைச் செய்து தந்தால் தட்டிக் கழிப்பது எப்படி?

இவ்வாறு –

அய்யம்பேட்டை நெடுஞ்சாலை மேல வாணிபத் தெரு **முஹம்மது அலி** அவர்களுடன் தெருவில் ஆரம்பித்த நட்பு தேநீர் பருகலுடன் நிற்காமல் அவர் வீட்டுக்குள் வைத்திருக்கும் கடையில் புத்தகங்கள் வாங்கி **நேருநகர் அல்மத்ரஸதுல் காதிரிய்யா மகளிர்** நூலகத்திற்கு வழங்குவது வரை முடிவு பெறாமல் –

நான் அந்த மண்ணுக்கு விடை கொடுக்கும் வரையில் அவரும் ஒரு தோன்றாத் துணையானார்!

அதையும் விட வர்ணிக்க வேறு வார்த்தை இல்லை.

''அலி சாகிப், உங்கள் தொடர்பு எனக்கேற்பட்டது. பெரிய கராமத்! அற்புத நிகழ்வு!'' என வியந்தபொழுது அவர் முகம் சுருங்கியது.

''அது மட்டும் என்கிட்ட பேசப்படாது. நான் கொள்கைவாதி. உங்க மாதிரி கராமத் அற்புதம் எல்லாம் பேச மாட்டேன். ஏதோ தெருவுல நின்னேன். உங்களைப் பார்த்தேன். பின்னால வர்றேன். பேச வராது. சொல்ற எடத்துக்கு கூட்டிக்கிட்டுப்போறேன். போதும்கிற வரைக்கும் சேவை செய்யுறேன்! என்ன, ஒகேயா?''

சொன்னபடி, அந்தத் திடீர் சந்திப்புக்குப் பின், அவர் என் சகல தேடல்களிலும் கடுமையாக கஷ்டப்பட்டார். சொல்லும் இடங்களையும், நபர்களையும் அடையாளம் காட்டினார். தமது இரு சக்கர வண்டியில், சில சமயங்களில் மற்றவர்களிடம் இரவல் வாங்கி ஏற்றிக் கொண்டு அலைந்தார்.

''நீங்க கொள்கைவாதி இல்லை! ஒத்துழைக்கமாட்டேன்'' எனச் சொல்லவில்லை.

நேருநகர் பக்கம் இருந்த தவ்ஹீது பள்ளிக்கு கட்டாயப்படுத்தி கூட்டிச் செல்லவுமில்லை.

''எங்க வாப்பு அரியலூர் ஹாஜா முகையத்தீன் எங்களுக்காக ஓடாய் உழைத்தது இலங்கை அப்புத்தளை பேக்கரியில! அந்தத் தீவிலயிலிருந்து இந்த வயசில நீங்க வந்து இங்க காஞ்சி கருவாடாகி தகவல் சேகரிக்கிற உங்கள அம்போன்னு விட்டா எப்படி?''

நான் முஹம்மதலி பேச்சில் நெகிழ்ந்தே போனேன்.

ஆக – 93 அகவையுடன் செவிப்புலன் குறைந்தவராக வாழ்ந்து கொண்டிருக்கும் **கனியார் ராஜ் முஹம்மது** இல்லத்திற்கு அவரது இரு சக்கரவண்டியில் அழைத்துச் சென்றார்.

## ஏ.டி. தாவூத் ஷா கம்பெனி

**மர்ஹூம் ஈ தாவுத்ஷா சாஹிப்** அவர்களுக்கு நால்வர் சகோதரர்கள் **(ஈ ஜெய்னுலாப்தீன், ஈ முஹம்மது இபுராஹீம், ஈ. ஹாஜா முகையதீன், ஈ. முஹம்மது சுல்தான்)**

**மூத்தவர் தாவூத்ஷா சாகிபின் வாரிசுகள் எட்டுப் பேர். (டீ. அப்துல் காதர், டீ. ராஜ் முஹம்மது, டீ. ஜமால் முஹம்மது, டீ. நூர் முஹம்மது, டீ. இபுராஹிம்ஷா, ஆயிஷா கனி, ஜம்ருத் கனி, சிராஜுனிஸ்ஸா)**

இவர்களில் இலங்கைத் தொன்மைத் தொடர்பு கொண்டிருந்து தொழில் புரிந்தவர்கள் :

தாவூத் ஷா சாகிபும், அன்னாரின் நான்கு புத்திரர்களும் (கடைசி இளையவர் இபுராஹிம்ஷா இலங்கை செல்ல வில்லை)

மலையகத்தில் ''**ஏ.டீ.தாவூத்ஷா கம்பனி**'' ஒப்பாரும் மிக்காருமில்லாது உயர்ந்து விளங்கியது.

இந்நிறுவனத்திற்கு கண்டிமா நகரையடுத்த கம்பளையில் பெரிய அலுவலகம் இருந்தது.

இந்தக் கம்பளையிலிருந்து சில கி.மீ. தூரம் இருந்த கினிகத்தேனை என்ற மலைப்பிரதேசத்தில் பல ஏக்கர் பரப்பில் தேயிலை ரப்பர் எஸ்டேட்டுகளும், உற்பத்திச் சாலையும் இருந்தன.

பின்னர் இலங்கை அரசின் சட்ட திட்டங்களினால் தொழில்துறைகளைக் குறைத்துக் கொண்டு பல இந்திய வணிகர்கள் தாயகம் திரும்பிய பொழுது அல்ஹாஜ் கனியார் இ. தாவூத் சாஹிப் அவர்களும் (1955–56களில்) சென்னையில் தோல் தொழிலில் ஈடுபட்டார். '**ஸ்டார் தேயிலை**'யை

அறிமுகப்படுத்தி பலருக்கு வேலை வாய்ப்பை வழங்கினார்.

அவரது மறைவுக்குப் பின் மக்களுள் ஒருவரான கனியார் ஹாஜி நூர் முஹம்மது இதனைப் பொறுப்பெடுத்தார்.

இன்றைக்குக் கனியார் குடும்பத்து மூத்தவராக பழம் பெருமை பேச 93 அகவை ஹாஜி ராஜ் முஹம்மது அவர்கள் மட்டுமே உள்ளார். அன்னாரது துணைவியார் கதீஜா கனி (69) கண்ணின் இமையாகக் கவனித்துக் கொள்கிறார்.

சற்று சிரமத்துடனேயே பழைய தகவல்கள் அவர்களிடமிருந்து சேகரிக்க முடிந்தது. இவர்கள் அனைவரும் இலங்கையில் கொடி கட்டிப் பறந்ததால் ஊருக்குச் சிறப்பான பணிகள் நடந்துள்ளன.

மூத்தவர், ஹாஜி **தாவூத்ஷா சாகிப்,** மதகடி பஜார் **முகையதீன் ஆண்டகை மஸ்ஜிது** நிர்மாணிப்புக்கு நிலம் வாங்கிக் கொடுத்து முன்மாதிரி காட்டியுள்ளார்கள்.

தம்பிமார்களில் ஒருவரான முஹம்மது இப்ராஹீம் சாகிப் அவர்களும் தனது பங்குக்கு 'ரயிலடி பள்ளிவாசல்' என அழைக்கப்பட்ட '**மஸ்ஜிதே மஹ்பூபே சுப்ஹானி**' க்கு நிலம் கிரயத்திற்குப் பெற்று வக்ஃபு செய்துள்ளார்கள்.

அத்துடன், அன்னார் ஊர் ஜமாஅத் சபைத் தலைவராகவும் கடமை புரிந்திருக்கிறார்கள்.

மற்றொரு தம்பியார், ஜெய்னுலாப்தீன் சாகிப், மணவெளித் தெரு '**மஸ்ஜித் ஹலீமா**' இறையில்லத்துடன் சம்பந்தப்பட்டு சில பணிகள் செய்துள்ளார்கள்.

இந்தப் பரம்பரையில் இப்போதுள்ள இளைய தலை முறைகளும் சளைத்தவர்களல்லர் எனும்படியாக பல தகவல்கள் எனது தேடலில் கிடைத்தன.

விலாவாரியாக விவரிக்காமல் அந்த 'இளையது'களின் பெயர்ப் பட்டியலை இதன் கீழ் வழங்கி, முன்னோர்கள் வழியில் வாழ்ந்து காட்டிக் கொண்டிருப்பதற்காகப் பாராட்டுகிறேன்.

'டீ என்' என்கிற சென்னை **ஹாஜி நூர் முஹம்மது**வின் வாரிசுகளான **என். அப்துல் ரஹ்மான், என். முஹம்மது இப்ராஹிம் பாவாஜி**

டீ.ராஜ் முஹம்மது அவர்கள் வாரிசான **ஆர்.சாதிக் பாட்சா மற்றும் –**

**எம். முஹம்மது பஷீர் (குவைத்), எம். சபீர் அஹமத் (குவைத்), எம். பஷீர் அஹமத் சேட், எம். ஜாகிர் ஹுசைன் சேட் (புரூனை), கே.டி. நத்தர் ஷாபீ, ஏ. முஹம்மது சாதிக் –**

இனி, இதன்கீழ் இருவரித் தகவல்களாக இலங்கைத் தொடர்பு



கொண்டிருந்தவர்களைத் தொகுத்துத் தரத் திட்டம் (விரிவான குறிப்புகளுக்கு இடப்பஞ்சம்)

**பி.ப. அப்துல் ரஹீம் ஏ. முஹம்மது பாட்சா**

– இவர்கள் இருவரும் ஆரம்ப காலங்களில் கொழும்பில் தொழில் செய்த இரட்டையர்கள். பின்னர் சென்னை ஸ்டார் டீ. நாளடைவில் சொந்தமாக சிம்லா டீ நிறுவனம்)

**ஜே.எச்.சி. அப்துல் ஸமது சாஹிப்**

'அல் – ஹதீஸ் கவிஞர்' என தமிழகத்திலும் இலங்கையிலும் புகழெடுத்த **ஜே.ஹெச்.சி. அப்துஸ் ஸமத்** கொழும்பில் சில காலம் தொழில் புரிந்து வந்தார். பின்னர் சிங்கப்பூர் சென்றார்.


**பண்ணைக்கார பா.அப்துல் ஹமீது சாகிப்**

'இர்ஃபானி' என அழைக்கப்படும் இவரும் இலங்கை வணிகர். பின்னர் சைகோன். இறுதியில் சென்னை.

**ஹக்கீம் அப்துல் ரஹ்மான் சாஹிப்**

யூனானி மருத்துவத்தில் நீண்ட காலம் வைத்தியராகத் திகழ்ந்த இவர்கள் இலங்கையில் வணிகராக வாழ்க்கையைத் தொடங்கியவர்.

**இமாம் அ. அப்துல் லத்தீஃப் சாகிப்**



ஊரிலிருந்து இலங்கை சென்று பிரபல தொழிலதிபர்களாக இருந்து அங்கு பல்வேறு சேவைகளை செய்த பெருமக்களின் பட்டியலைப் பார்த்தோம். அதுபோல இரு பெரும் மார்க்க அறிஞர்கள் இலங்கையில் புகழ் பெற்ற இமாம்களாக இருந்து பன்நூறு மக்கள் மார்க்கக்கல்வி பயில காரணமாயிருந்துள்ளனர்.

ஒருவர் சக்கராப்பள்ளி பெரிய தெருவில் வாழ்ந்த மவ்லவி **அப்துல் லத்தீபு சாஹிப்** அவர்கள் பல்லாண்டுகள் மேலப்பள்ளி வாசலில் இமாமாக பணியாற்றிக் கொண்டிருந்தபோது ஊர் வணிக பெருமக்கள் இவர்களை இலங்கை அழைத்துச் சென்று அங்குள்ள மஸ்கேலியா நகரின் பிரதான பள்ளிவாசலில் பணியமர்த்தினர்.



இவர்கள் ஷேம் சாபில் வலியுல்லா அவர்களின் பேரப்பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றொருவர், மவ்லவி **அல்ஹாஜ் என்.ஏ. அப்துல் ஹைபாகவி.** இவர்கள் இலங்கை டிக்கோயா என்ற ஊரில் இமாமாக இருந்து அவ்வூரில் புதிய பள்ளிவாசல் உருவாவதற்குக் காரணமாக இருந்தவர்கள். மிகச்

சிறந்த எழுத்தாளராக இருந்ததால் இலங்கையில் பிரபல வார – மாத இதழ்களில் கட்டுரைகளை எழுதினார்கள். இலங்கை வானொலியிலும் மார்க்கப் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள்.

**வல்லம் அப்துல் ஹமீது ஹாஜியார்**

இவர் 1935லேயே இலங்கையில் வணிகத் தொடர்பைக் கொண்டவர். மலை நாடே பிரதானம்

ஏ.எஸ். ஷு மார்ட்' என்ற காலணிக் கடை வைத்திருந்த மில்லத் நகரைச் சேர்ந்த இவர் இலங்கைக்குக் காலணிகள் ஏற்றுமதி செய்தவராவார்.

**முஹம்மது சுல்தான் – முஹம்மது காசிம்**

மில்லத் நகரைச் சேர்ந்த இவ்விருவரும் 50 களின் இறுதியில் நாகை துறைமுகம் வழியாக இலங்கைக்கு மாட்டிறைச்சி ஏற்றுமதி செய்தனர். இவர்கள் அதற்குப் பயன்படுத்திய மடுவம் என்ற சிமெண்ட் தலத்தை வழுத்தூர் தென்னந்தோப்பு ஒன்றில் இன்றும் காணலாம். (ஏற்கனவே அபிமானிகளுக்கு அறிமுகம் செய்யப்பட்ட நூலாசிரியர் ஹபீப் ரஹ்மானின் தந்தையாரே முஹம்மத் காசிம். கடந்த 2012 ஆம் ஆண்டில் ஓய்வுறக்கம் கொண்டார்கள்.)

***'இனிய இலங்கைத் தொடர்புகள்' – பட்டியல் மிக நீண்ட ஒன்று. இந்நூலில் பக்க அதிகரிப்பு இத்துடன் இங்கு நிறுத்தி இன்ஷா அல்லாஹ், இன்னுமொரு பதிப்பில் பூர்த்தி செய்யத் திட்டம். பெயர்கள், குறிப்புகள் இடம் பெறாதோர் எனக்கு மன்னிப்பளித்துப் பொறுத்திட வேண்டும்.***

**– ஆய்வாளர்.**

'தந்தை சொல் மதிப்பது, தாய் மீது அன்பு காட்டுவது, சகோதர சகோதரிகளிடம் பிரியமாகவும், நீண்ட உறவுகளை அறிந்து, நெடுங்கால வரலாறுகளை புரிந்து, தலைமைக்குக் கட்டுப்பட்டு கண்ணியமாக வாழ்கிற பெரு ஊரில் இரண்டு காரியங்கள் குறித்த நேரத்தில் நிகழும். ஒன்று திருமணம்! மற்றொன்று மவுத் அடக்கம்!

**– வாலன் ஜெ. சுலைமான் பாட்சா**
**(கட்டுரையொன்றில்....)**

# 7.
# அருமை! அருமை!!
# அழகிய முன்மாதிரிகள்!!!



நெற்களஞ்சியங்களின் தலைமைப் பீடமான தஞ்சை மாவட்டத்தில் முஸ்லிம் சமுதாயம் பல்கிப் பெருகி அதிகமாக வாழ்கின்ற இடம் இந்த அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளி.

உண்மையில் ஓர் ஊரையோ, நகரத்தையோ உயர்த்துவது அங்கு கடைப்பிடிக்கப்படும் அழகிய முன் மாதிரிகளே!

`நம்ம ஊர்கள் இரண்டிலும் (அதாங்க, நமது பார்வையில் பட்டிருக்கும் ஊர்களுக்கு) அவற்றுக்குப் பஞ்சமே இல்லை!

அல்ஹம்துலில்லாஹ்!

எதை முதலில்அபிமானிகளின் பார்வைக்கு வைப்பது என்பதில் தாமதமே வேண்டியதில்லை!

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில மாநாட்டில் (தாம்பரம் டிச 11.2010) ஆயிரக்கணக்கில் சமுதாய மக்கள் கூடியிருந்த சபையில், **`தமிழ் நாட்டின் முன்மாதிரி மஹல்லா ஜமாஅத்**''தாக அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளி முஸ்லிம் பரிபாலன சபை கௌரவம் அடைந்தது.

அதன் அழகிய அருமையான செயற்பாடுகள் ஒவ்வொன்றும் பிற ஜமாஅத்தினருக்கு முன்மாதிரிகள்.

பைத்துல்மால், மதரஸாக்கள் முதற்கொண்டு, இலவச மருத்துவ முகாம்கள், வசதியற்ற மாணவர்கள் கல்விச் சகாய நிதி, பருவப் பாவையர் மணவிழா உதவி, விதவையர்கள் நல நிவாரணம், திருமணப் பதிவேடுகளின் பராமரிப்பில் காட்டும் அக்கறை எனப் பட்டியல் நீளும். இருந்தாலும் சுருக்கிவிட இயலாது. பதிவு செய்தே ஆக வேண்டும்.

**``ஒப்பறை, வாசிகளுக்காக'' என ஒரு திட்டம்!**

இதன் மூலம் வயது முதிர்ந்த ஆண், பெண் ஒப்பறை வாசிகள் தன் சுயதேவைகளை நிறைவேற்ற இயலாமல் நடை, உடை வசதியில்லாமலும், நோயாளிகளாகவும் உள்ளோருக்கு ஆயுட்காலம் வரை ஐநூறு (ரூ.500) சன்மானம்! இதுபோக, தனியாக **`முதியோர் நல உதவித் திட்ட'மும்!**

திவ்விய ரமலான் மாதத்தில் காட்டப்படும் அழகிய முன் மாதிரிகள் அளவில்லாதவை.

ஆலிம் பெருமக்கள், மு.அத்தீன்கள் முதற்கொண்டு நலிந்துள்ள குடும்பங்கள், விதவைகள் வரை நிறைவான பங்கீடுகள்!

**`பெண்கள் விழிப்புணர்வு முகாம்'** மற்றொரு நல்ல முன்மாதிரி முயற்சி.

மாணவ மாணவியரை அவரவர் பெற்றோர்களுடன் அழைத்து சமூக விழிப்புணர்வு முகாம் நடத்தப்படுகிறது. அதில் அறிவார்ந்த பெருமக்கள் பங்களிப்புச் செய்கின்றனர்.

மேலும் `விழாக்களிலே பேணப்பட்டு வரும் நேரந் தவறாமை!

கண்ணியமாக, கௌரவமாக நடந்து முடியும் வைபவங்கள்!

மழைத்தூறல்கள் போல சமூகத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் `ஒற்றுமை உணர்வு'.

`கருத்து வேற்றுமையா? களைவோம் வாருங்கள் வாலிப சமுதாயத்தினரே!'' எனத் துடி துடிக்கும் இளைஞர்களை அரவணைத்து அளவளாவும் பாங்கு (பார்க்க: 30.09.2011ல் வெளியாகியுள்ள வழிமுறை விளக்கம்)

அனைத்தையும் விட இரு பெரும் ஊர்களுக்கும் **ஒரே ஜமாஅத்!** (ஆஹா!)

இவை போதுமே! இலங்கைப் பேனாவுக்கு இன்னும் ஏன் நிறைய வேலை?

இருந்தாலும் இதன் கீழ் இப்பொழுது சேவையாற்றும் நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி என்பேனாவின் பாராட்டுக்களை அள்ளி வழங்குகின்றேன்.

**``ஜமாஅத்'' நிர்வாகிகள் :**

**தலைவர் : ஹாஜி ஓ.ஆர்.ஜெ. முஹம்மது பஷீர்,**

**உப தலைவர் : ஹாஜி மஷாயக் என்.எம். ஆரிப் பாட்ஷா**

**செயலாளர் : ஜனாப். கொக்கரட்டி எம். முஹம்மது பாரூக்**

**இவர்களுடன் இணைந்து ஜமாஅத் பணிபுரியும் செயல் வீரர்களை (மெம்பர்)களையும் இதயம் நெகிழ்ந்து பாராட்டுகிறேன்.**

**உயர் கல்வி வாய்ப்புப் பயிற்சி முகாம்கள்**

இதை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருவோர் பிரபல **`ஜம் ஜம்' குடும்பத்தார்!** இப்பெயரை மட்டும் சொன்னாலே எல்லோரும் புரிந்து விடுவார்கள்.

ஆனால் என் பேனா இடம் கொடுக்க வேண்டுமே!

அஞ்சலக அதிகாரியாக, மருந்துகள் விற்பனை முகவராக (சென்னை) ரியல் எஸ்டேட் நிறுவனராகப் பரிணமித்த, எளிமைக்கும், இனிமைக்கும், அமைதிக்கும் அமல்களுக்கும் முன்மாதிரி மாமனிதராக மூன்று தலைமுறை முஸ்லிம் லீக் தொண்டரான 85 வயது 'குழந்தை' **ஹாஜி எஸ்.எம். பதுருத்தீன்** பெரியவர் அவர்களினதும், அவர்தம் புத்திரர்களினதும் அழகிய முன்மாதிரியே இப் பயிற்சி முகாம்கள்!

தங்கள் ஊர் இளவல்களுக்கு மட்டுமல்லாது தமிழகம் முழுதுமாகப் பரந்துபட்ட ஓர் நற்சேவையை `ஜம் ஜம் ரியல் எஸ்டேட்' நிறுவனம் முன்னெடுத்துச் செய்கிறது. பயன்படுத்துபவர்கள் பாக்கியசாலிகள்.

**`வஸியத் நாமா' வழங்கியுள்ள `ஜம் ஜம்' ஹாஜி!**

சற்று முன் படித்த செயற்பாட்டின் பிதாமகனாரது மற்றொரு வித்தியாசமான ஏற்பாடு இது!

மதிப்பிற்குரிய **`ஜம் ஜம்' ஹாஜி எஸ்.எம். பதுருதீன்** அவர்கள் தனது பூர்வீகம் தஞ்சாவூர் என்பதை எப்பொழுதும் மறக்க மாட்டார். மறைக்கவும் மாட்டார். (செய்யதலி பாட்சா (சௌதலி தெரு)

அங்கே, கீழவாசலில் ஐந்து தலைமுறைக் கடை ஒன்று அன்னாருக்குச் சொந்தமாக இன்றும் உள்ளது.

அதன் மூலம் கிடைக்கும் வாடகைப் பணம், தஞ்சை சௌதலி தெரு ஜும்ஆ பள்ளிவாசல் மின்சாரச் செலவுக்கும், ரமலான் கால ஒரு நாள் நோன்புக் கஞ்சிக்காகவும், ரபியுல் அவ்வல், ரபியுல் ஆகிர் மாதங்களில் நடைபெற்று வரும் மவ்லீது ஷரீஃப் மஜ்லிஸிற்காகவும் வழங்கப்படுகிறது.

இச் சேவையுடன் மேலும் சில நற்பணிகளும் தனது காலத்திற்குப் பிறகும் தொடர வேண்டும் என்ற ஆவலில் மூத்த குமாரர் **ஹாஜி எஸ்.எம்.பி. குத்புதீன்** அவர்களிடம் அக்கடமைகளை வழங்கி **`வசியத் நாமா'** எழுதிக் கொடுத்துள்ளார்கள் `ஜம் ஜம் ஹாஜி! நாள் 2009 பிப்.24 (ஹிஜ்ரி 1430 ஸஃபர் 26).

அவர்களுக்கு இறைகிருபை எப்பொழுதும் இருக்குமாக என இறைஞ் சிடுவோம்.

**`கண்ணேறு' போகக் கண்ட வழி! (உப–தலைவர்)**

எந்த ஊர் ஜமாஅத்திற்கும் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஏதோ ஒரு ரூபத்தில் `கண்ணேறு ஏற்படுவதுண்டு.

அப்படியொன்று, 1973லிருந்து 81 வரையில் இங்கு ஏற்பட்டது.

மிகப் பெரும் சண்டை சச்சரவுகள் நீடித்து காவல் துறை அலுவலகம் என்றும், நீதிமன்றம் என்றும் அலைந்தார்கள். மிகப் பெரும் அளவில் பொருளாதாரத்தை இழந்தார்கள். நீயா நானா என்று போட்டி போட்டுக் கொண்டு சொந்த பந்தங்களை எல்லாம் துறந்தார்கள். அந்தக் கால கட்டம் மிகவும் வேதனையான காலம். அச்சமயம் ஒற்றுமை எனும் கயிற்றைப் பற்றிப் பிடிக்க இஸ்லாமிய நெறிகளே சிறந்தது என்பதை ஒரு முஸ்லிம் லீக் பிரமுகரே உணர்த்தினார்!

அன்னார் இன்றைக்கு எம்மனைவருக்கும் நெருக்கமான **`முனீருல் மில்லத்' பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன்** பெருந்தகையே!

இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் தமிழக கலாசார துறை செயலாளர் என்ற பதவியை மட்டும் வைத்துச் செயல்பட்ட அவர்கள், ஊர் ஒற்றுமைக்காக அரும்பாடுபட்டு, அமைதி, நிம்மதி ஏற்படுவதில் வெற்றியடைந்து பச்சிளம் பிறைக் கொடியைப் பறக்க விட்டார்கள்.

அப்பொழுது ஆயிரக்கணக்கான வெண்புறாக்களும் பறந்தன.

கீழப் பள்ளிவாசல் நிர்வாகிகளால் 1943ஆம் ஆண்டிலிருந்து அருமை பெருமையாக வளர்க்கப்பட்ட அந்தப் புறாக்களும் சமாதானத்திற்காக சிறகடித்தன! பறந்தன! மீண்டும் கூடுகளுக்குள் வந்தடைந்தன. **(இப்புறாக்கள் பற்றிய சுவைக் குறிப்பு இன்னும் சில பக்கங்களுக்குப் பிறகு)**

மேலும், இன்னுமொருவர், ஏற்கனவே `இலங்கைத் தொடர்புகள்' அத்தியாயத்தில் அறிமுகமாகி விட்ட அல்குர்ஆன் மாநாடுகளின் பிதாமகனார்` பீ.ஏ. ஹாஜியார்' அப்துல் ரஹீம் சாஹிப் அவர்கள் செய்த அழகிய முன்மாதிரியான காரியம், **மார்க்க மேதை ஆத்தூர் அப்துல் நஜீர் மௌலானா** எனும் பேரறிஞரை ஊருக்கு அழைத்து வந்து, கத்தியும், வாளும் செய்யாத வேலையை மார்க்க சொற்பொழிவுகள் மூலம் செய்ய வைத்து ஊராரை ஒற்றுமைப்படுத்துவதில் வெற்றி கண்டதே!

பின்னர் இந்த `பி.ஏ. ஹாஜியார்' அவர்கள், தன் சொந்தப் பணத்தில் ஒரு தனிமனிதராகச் செயல்பட்டு, தமிழகமே வியக்கும் அளவில் (இன்றுங்கூட!) 24 அல்குர்ஆன் மாநாடுகளை தமது மண்ணிலேயே முன்மாதிரி நிகழ்த்தி காட்டினார். (இத் தகவலை அவசியம் கருதி `இலங்கைத் தொடர்புகள்' அத்தியாயத்திலும் விரிவாகத் தந்துள்ளேன்.)

## ஒரு புதுத் தெருவின் பின்னணி!

இன்று ரஹ்மானியாத் தெருவாக உள்ள வீதியை வாஞ்சையுடன் பலரும் `புதுத் தெரு' என்றும் அழைக்கிறார்கள்

ஒரு நல்ல பின்னணி இதற்குண்டு.

ஒரு காலத்தில் சகோதர சமுதாயத்தவர் இங்கே பெருமளவில் வாழ்ந்தனர். தங்கள் சமூகத்தவர் ஒன்றாக வாழ இன்னும் பெரிய வசதியான

வசிப்பிடம் விரும்பி நின்றனர்.

இன்றைய **`கோபாலபுரம்'** கிடைத்தது!

அது அப்பொழுது முஸ்லிம்களின் உரித்தாக இருந்தது!

அக்காலத்தில் பெரும் தோட்டம் தோப்புகளுக்கு சொந்தக்காரர்களாக இருந்த முஸ்லிம் நிலச்சுவான்தாரர்களிடம் பரிவர்த்தனை அடிப்படையில் பல ஆலோசனைகளை நடத்தி காரியம் சாதித்தார்கள் **வாணக்கார முஹம்மது ராவுத்தர்** அவர்கள்!

இந்த ஏற்பாட்டை மனிதாபிமான அடிப்படை எனலாமா? அல்லது மதநல்லிணக்க எடுத்துக் காட்டு எனலாமா?

இரண்டுமே பொருந்துமே!

1951 ஆம் ஆண்டில், இப்பகுதி நிலத்தின் பெரும் பகுதியை வாங்கி கட்டடங்களுக்கு அடிகோலிய **அல்ஹாஜ் எஸ்.கே. அப்துர் ரஹ்மான் சாகிப்.** (அன்றைய நிர்வாக சபைத் தலைவர்!) அவர்கள் பெயரைக் கொண்டு `ரஹ்மானியாத் தெரு' பரிணமித்தது முதல் மனை ஜம்ஜம். ஹாஜியார் வாங்கியது.

## மற்றுமொரு எடுத்துக்காட்டு - மருத்துவமனை இடம்

அய்யம்பேட்டை சக்கராப்பள்ளிக்கு மேற்குப் புறமாக உள்ள பசூரில் (பசுபதி கோவில்) அமைந்துள்ள புனித கபிரியல் (மிஸ்ஸியம்மா ஆஸ்பத்திரி) மருத்துவ மனைக்கு இடம் தேவைப்பட்டபொழுது **`தொக்கை'க்** குடும்பத்தைச் சேர்ந்தவர்களே தங்கள் நிலத்தை அன்பளிப்புச் செய்து, இன மத வேறுபாட்டைக் கடந்து முன்மாதிரி காட்டினர்! (இவர்கள் நமது `ஜம் ஜம்' பதுருதீன் ஹாஜி குடும்பத்தைச் சார்ந்தோர்.'

## பள்ளிவாசல் பராமரிப்புக்கு நிலங்கள்

இன்றைய மூத்த முதன்மைப் பள்ளிவாசலாகத் திகழும் மேலப்பள்ளிவாசல் எனும் ஜாமிஆ மஸ்ஜித் பராமரிப்புக்காக செருமாக்க நல்லூர் கிராமத்தில் இருந்த நிலத்தினை வழங்கி வக்ஃபு செய்துள்ளார்கள், **பட்டா மணியார் குண்டு ஜெய்னுல் ஆபிதீன்** என்ற வள்ளல் பெருந்தகை!

அன்னாரைப் போலவே, **கான் ஹாஜி முகம்மது சுல்தான்** என்ற வள்ளலும் **`ரயிலடி பள்ளிவாசல்'** எனச் சொல்லப்படுகிற **`மஸ்ஜிதே மஹ்பூபு சுப்ஹானிக்கும், `வாணியத் தெரு பள்ளிவாசல்'** என்ற பழம் பெயர் கொண்ட **`முஹியித்தீன் ஆண்டகைப் பள்ளிவாசலுக்கும்'** சென்னையில் ஒரு கட்டடங்களை வாரி வழங்கி அழகிய முன்மாதிரி காட்டியுள்ளார்கள்.



## இரு ஊர்கள் - ஒரு திருமணப் பதிவேடு

இரு ஊர் ஜமாஅத்தார்களுக்குமென ஒரே நிக்காஹ் தஃப்தர் (திருமணப் பதிவேடு)!

1925 முதல் நடைமுறையில் உள்ள பதிவேட்டில், 2003 வரையிலான ஒரு கணக்கில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட திருமணங்கள் நிகழ்ந்துள்ளதாக ஒரு தகவல் (ஜாமிஆ மஸ்ஜித் திறப்பு விழா சிறப்பு மலர் 2003 பக்.162).

அவ்வாறாயின், பத்து ஆண்டுகள் கழிந்த பிறகு இப்பொழுது (2013) எத்தனை அதிகரிப்பு?

கணக்கிட்டுச் சொல்லுங்கள். தொலைக்காட்சி காரர்கள் கொடுப்பது போல் நானும் பரிசு கொடுக்கிறேன்.

## பச்சிளம் பிறை மருத்துவ சேவை!
## (கிரீன் கிரசென்ட் மெடிக்கல் மிஷன்)

இந்தச் சிறப்பு தலைப்பு, மர்ஹூம் `சிராஜுல் மில்லத்' ஆ.கா.அ. அப்துஸ்ஸமத், அவர்களால் தஞ்சை மாவட்ட முஸ்லிம் லீக் ஆம்புலன்ஸ் சர்வீஸுக்கு உள்ளன்புடன் சூட்டிய சிறப்புப் பெயர்.

1990ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் தேதி பண்டாரவாடையில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட முஸ்லிம் லீக் செயற்குழுவில் மாநிலத் தலைவர் அல்ஹாஜ் ``சிராஜுல் மில்லத்'' அவர்கள் ஒப்புதலுடனும், ஆசியுடனும் தொடங்கிய பணி இது.



இந்த ஆய்வு நூலுக்காக எனது பேனா முதன் முதல் சந்தித்த, முதல் அத்தியாயத்தில் இடம் பெற்ற மூத்த பெரியவர் மேனாள் தஞ்சை மாவட்ட முஸ்லிம் லீக் தலைவர் ஹாஜி **எம்.ஏ. குலாம் மைதீன்** அவர்கள் இதற்கு பிதாமகனார்.

**ஹாஜிகள் இ.எஸ்.எம். பக்கீர் முஹம்மது எம்.பி., ஒ.எஸ். ஜெய்னுலாப்தீன் சாஹிப்** ஆகியோர் ஆசிகளுடன், மாவட்டப் பொருளாளர் **ஹாஜி எம்.ஏ. ஜமால் அப்துல் கனி** மற்றும் பொறுப்பாளர்கள் துணையுடன் துவங்கப்பட்டது இந்த ஆம்புலன்ஸ் சேவை.

''அனைத்து சமுதாய மக்களுக்கும் சேவை செய்தலே இந்த ஏற்பாட்டின் முக்கிய நோக்கம்' என்பதை மறக்காமல் பதிவு செய்யுங்கள்'' என்றார்கள் பெரியவர் குலாம் மைதீன்.

நானா மறப்பேன்? மத நல்லிணக்கம், மனிதநேயம் என் எழுது 'கல'த்தில் நிறையவே உண்டே!

இந்த ஆம்புலன்ஸ் சேவை செய்த ஒரு முக்கியக் கடமையை இலங்கையில் இருக்கும் பொழுதே நாளேடுகள், தொலைக்காட்சி ஒளிபரப்புகளில் அறிந்திருந்தேன்.

அது, 1997 ஜூலை தஞ்சை பெரிய கோவில் கும்பாபிசேக நிகழ்வில் (வளாகத்தில்) ஏற்பட்ட தீ விபத்து. நாற்பது பேர் மரணம், எண்பது பேருக்குத் தீக்காயங்கள்.

அப்பொழுது, `பச்சிளம் பிறை மருத்துவ சேவை' ஆம்புலன்ஸ்கள் இரண்டும் செய்த பணிகளை அனைத்து மக்களும் அறிவர்.

எல்லாப் புகழும் இறையோனுக்கே.

**அடிக்குறிப்புகள்:**

புதிய ஆம்புலன்சின் அவசியத் தேவையை கருத்தில் கொண்டு புருணைவாழ் வணிகப் பிரமுகர்கள் கைகொடுத்ததை இவ்விடத்தில் நினைவில் கொள்ள வேண்டும். **அல்ஹாஜ் மர்ஹபா ஏ. பஷீர் முஹம்மது** அவர்கள் பொறுப்பில் அம் முயற்சி கை கூடியதாம். ''Donated by Indian Citizen in Brunei' என்ற மகுடம் தாங்கி செயல்படுகிறது.

இந்தச் சேவை தஞ்சை மாவட்டத்துடன் நிற்காமல், திருச்சி, புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், தென் ஆற்காடு மாவட்டங்களின் தேவைகளையும் நிறைவேற்றியுள்ளது.

## கடைசிப் பயணத்துக்கு கஃபனிடும் பயிற்சி!

இல்லமொன்றில் எமது பெண்மணிகளுள் ஒருவர் உயிர் மூச்சை விட்டவுடன் அடுத்த நிமிடம் அவர் ஜனாஸாவாகி விட, குளிப்பாட்ட வேண்டியவரை நினைக்கிறோம்'. அவரைத் தேடிக்கண்டுபிடிக்க ஓடுகிறோம்!



ஆனால்...... ஆனால்...

அந்தத் `தாய்' அன்றைக்கு கிடைப்பதற்கு அல்லாஹ் கிருபை வேண்டும்.

இந்த நிலைமை தமிழகத்தில் மட்டுமல்ல; இலங்கையிலும் தான்!

பிரச்சினை தீர எந்தப்பெண்ணுக்கு எம் வீட்டில் பயிற்சி கொடுத்திருக் கிறோம்? (எனது இல்லம் விதிவிலக்கு துணைவியார் நிபுணி!) அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி, நேருநகர், `அல்மதரஸத்துல் காதிரிய்யா அறக் கட்டளை'யினர் நடத்தும் இஸ்லாமிய மகளிர் கல்லூரி மாணவியருக்கு ஒரு சிறப்புச் சொற்பொழிவாற்றச் சென்றபோது `கபனிடப்பட்ட ஒரு ஜனாஸா'வைப் பார்த்து, `எப்பொழுது மவுத்து?' எனக் கேட்க வாய் எடுத்து, நல்ல வேளை! அடக்கிக் கொண்டேன்!

அது ஒரு பொம்மை ஜனாஸா!

அங்கே கற்கும் மாணவியருக்கு, குளிப்பாட்டி, கபனிடும் பயிற்சி!

இவ்வாறு பொம்மை ஜனாஸாவை வைத்து குளிப்பாட்டி கபனிடும் பயிற்சி ஷைக் மீரா(ன்) ஆலிம் (வலி) ரிஸ்வான் மதரஸாவிலும் பல்லாண்டுகளாக நடைபெற்று வருகிறது.

## மன்றங்களின் முன்மாதிரிகளை மறக்க முடியுமா? மறைக்க முடியுமா?

அனைத்து ஊர்களிலும் அமைந்திருப்பது போல் அய்யம்பேட்டை சக்கராப்பள்ளியிலும் மன்றங்களுக்குக் குறைவில்லை.

இவ்வாய்வில், அலைகடலுக்கு அப்பாலிருந்தவாறே ஊர் நலம் பற்றி கவலை கொண்டு உறக்கமின்றி இருக்கும் மன்றங்களுக்கு முதலிடம் வழங்கியுள்ளேன்.

இருந்தாலும் வரிசைப்படுத்தவில்லை.

பேனா எதைத் தொட்டதோ அது முதலில்.....

**குவைத்தில் மன்றங்கள் ஐந்து!**

**1. குவைத் முஸ்லிம் நல்வாழ்வுப் பேரவை, குவைத்**

**2. மில்லத் நகர் நல்வாழ்வு குவைத் ஜமாஅத்**

**3. அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளி முஸ்லிம் ஜமாஅத்–குவைத்**

4. **அல்இஹ்ஸான் நல்வாழ்வு சங்கம்**

5. **அல்ஈமான் நற்பணி மன்றம்**

– ஆகியவற்றின் செயல்களும் சேவைகளும் பல தமிழக ஊர்களுக்கும் முன்மாதிரியானவை.

முதலாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள நல்வாழ்வுப் பேரவையின் தோற்றம் 1978ல்.

ஒரு 10, 12 ஆண்டுகள் அதன் சேவை தொய்வில்லாமல் நடந்து 01.09.1989ல் நடந்த நிர்வாகிகள் மாற்றத்தில் தலைவர் சன்லைட் ஏ.ஜமால் முஹம்மது (அஜ்ஜி) செயலாளர். **மாமாத்தே ஏ.ஏ. ரஹ்மான்** (பாவாஜான்) பொருளாளர் **எஸ். ஜபார் சாதீக் (ராஜா)** போன்ற பலரின் முன்மாதிரிச்சேவைகளை ஊரார் பெற்றனர்.

ஆனால், 1980களில் மில்லத் நகர் குவைத் வாழ் மக்கள், அலயத்தர் வீட்டு ஜின்னா அவர்கள் தலைமையில் பெயரிடப்படாமலேயே ஓர் அமைப்பை உருவாக்கி பல்வேறு முன்மாதிரிப் பணிகளைச் செய்துள்ளது ஹபீப் ரஹ்மான் நூலிலிருந்து தெரிகிறது. (பக். 90).

இவ்வமைப்போடு வேறு சிலரும் இணைந்து 2003ல், `**மில்லத் நகர் நல்வாழ்வு குவைத் ஜமாஅத்**' என பெயர் சூட்டி ஒரு நற்பணி இயக்கம் துவக்கி சேவை புரிய ஆரம்பித்துள்ளனர்.

2008ம் ஆண்டுக்குப் பிறகு வசதியற்ற குமர்ப் பெண்களின் வாழ்வில் வசந்தம் வீசிட பல்வேறு உதவிகளை அமைப்பு ரீதியாகச் செய்து வருகின்றனர்.

தற்போதையத் தலைவர் **ஜனாப் காதர் ஷா** (தம்பி ராஜா), செயலாளர் நாட்டக்கார **அப்துல் மாலிக், அ. ஷாஹுல் ஹமீது**, அமைப்பாளர்கள்: பொருளாளர் ஜனாப் **எம். இஸ்மாயில், ஆர். நத்தர் ஷா.** ஒரு செயற்குழுவும் இவர்களுக்கு உறுதுணை.

## அய்யம்பேட்டை - சக்கராப்பள்ளி முஸ்லிம் ஜமாஅத் - குவைத்

உறுப்பினர்களுக்கு வட்டியற்ற கடன் மூலம் கல்வி, மருத்துவ சிகிச்சை, நகைக்கடன் மீட்பு, பயணச் செலவு மற்றும் விசாக் கட்டணங்கள் (அக்காமா) போன்றவற்றுக்கு உதவி. இதுவரை பதினைந்து ஆயிரத்து இருநூறு (15,200) தினார்கள் சுழல் முறையில் வழங்கியுள்ளனர்.

♦ ஆண்டுதோறும், குவைத்திலும், ஊரிலும் மருத்துவ முகாம்கள் நடத்துகின்றனர்.

♦ வருடம் ஒரு முறை குவைத்திலிருந்து உம்ராப் பயணத் திட்டமும் ஏற்பாட்டில் உள்ளது.

♦ குவைத்தில் வீடுகளில் வேலை செய்யும் ஊர்வாசிகள் வெளியில் வந்து தொழில் பெற வாய்ப்பிருந்தும் பணப் பிரச்சினையால் முடியாமல் போனால் உதவிகள்.




♦ ஆர்வமுள்ளோருக்கு அரபு, ஆங்கிலம் பேச்சுப் பயிற்சி.

♦ ஆதரவற்ற குடும்பத்தினருக்கு அவர்கள் வருமானத்திற்கு உதவும் வகையில் நிதியுதவிகள்

♦ ஊரில் பெண்களுக்கான சிறப்பு விழிப்புணர்வு கூட்டம்

♦ வேலைவாய்ப்பு தொடர் மையம் ஏற்படுத்தி வேலை இல்லாத சகோதரர்களுக்கு வேலைக்கான உதவிகள்

♦ கடித விநியோகங்களை இலவசமாக குவைத்திலும் ஊரிலும் செய்தல்

♦ குவைத்தில் நமது சகோதரர்கள் காலமானால் அவர் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வழங்குதல்

♦ எதிர்பாராத விதமாக உடல்நல குறைவால் செயல்பட முடியாமல் ஊர் செல்வோருக்கு அவரது எதிர்காலம் கருதி ரூ.50,000 நன்கொடை வழங்குதல்

நடப்பாண்டின் தலைவராக **கொட்டப்பாக்கி ஏ.சுலைமான் பாச்சா** (லக்கீ)

பொதுச் செயலாளராக **ஆவூர் ஏ. பஷீர் அஹமது,**

பொருளாளராக காச்சியா **ஏ. முஹம்மது கமால் பாட்ஷா** ஆகியோர் செயற்குழுவினருடன் இணைந்து அமைப்பை செம்மையாக நடத்தி வருகிறார்கள்.

**ஒரு விசேட அடிக்குறிப்பு**

எதிர்காலத்தில் இவ்வமைப்பின் ஏற்பாட்டில் அஞ்சுமன் பள்ளிவாசல் வளாகத்தில் நடைப்பயிற்சிக்கான பாதையுடன் கூடிய `சமூக நலப் பூங்கா' விற்கு 11.101.2013 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பூத்து மணம் பரப்ப உள்ளது. இன்ஷா அல்லாஹ்.

## அல்-இஹ்ஸான் நல்வாழ்வு சங்கம் - குவைத்

1981 செப்டம்பர் 04 ஆம் நாளில் அமையப் பெற்றது. அப்பொழுது இருபது உறுப்பினர்களே! இப்பொழுது கணிசமானோர்!

முப்பத்தியொரு ஆண்டுச் சேவையில், அங்கத்தவர்களின் அயராத

பங்களிப்பில் பல அழகிய முன்மாதிரிகள்!

♦ ஏழைக் கன்னிப் பெண்களின் கல்யாணத்திற்கு உதவித் தொகைகள்

♦ ஏழைச் சிறுவர்களின் கத்னா உதவி

♦ மதரஸாக்கள், மன்றங்கள், பள்ளிவாசல்கள் கட்டுமானப் பணிகளுக்கு நன்கொடைகள்



♦ இலவச கண் சிகிச்சை முகாம், மருத்துவ முகாம் மற்றும் நலிந்தோருக்கு தேவையான மருத்துவச் சிகிச்சைகள்

♦ வசதி இல்லாமல் இறந்து போனவர்களின் ஜனாஸா நல்உதவி.

♦ தாருல் குர்ஆன் மதரஸா, அல் இஹ்ஸான் (ஹிப்ளு) மதரஸா தொடங்கி கிட்டத்தட்ட 50க்கு மேற்பட்ட ஹாபிழ்கள் உருவாக்கம்.

♦ ஹைரோடு பள்ளி வளாகத்தில் தொடங்கி, அய்யம்பேட்டை கனிநகரில் சொந்தமாக கட்டடம் கட்டி 19.01.1995 ஆம் ஆண்டு சமுதாயத் தலைவர் அல்ஹாஜ் சிராஜுல் மில்லத் ஏ.கே.ஏ. அப்துஸ் ஸமத் சாஹிப் அவர்களால் திறப்பு விழா!

♦ ஊரில் தூர இடங்களிலிருந்து வரும் ஜனாஸாவை 'மூமின்களின் பூங்கா'விற்கு எடுத்து வரும் பணிக்காக 'ஜனாஸா ஊர்தி' செயல்படுகிறது.

– இவைபோன்ற சேவைகளின் தொடர்ச்சியில் இன்று முத்தான நற்பணிகளில் ஒன்றான கல்விச் சேவையினை கையில் எடுத்துப் பெரும் பங்கினை செய்ய முன்வந்து படிக்க ஆர்வமுள்ள மாணவர்களை தத்து எடுத்து அவர்களின் மேற்படிப்புக்கு உதவிகளை வழங்கி வருகிறது.

நடப்பு ஆண்டின் தலைவராக, **கான்லெப்பை ஆர்.எம். அப்துல் காதர் ஜின்னா,** பொதுச் செயலாளராக **மாமா ராவுத்தர் டி.எம். அஷ்ரப் அலி,** பொருளாளர் **சலாரி எஸ். ஜாபர் சாதிக்** மற்றும் ஒருங்கிணைப்பாளர் **கம்பளி ஏ. முஹம்மது பஷீர்,** செயற்குழுவினரும் அரணாக இருந்து அல் இஹ்ஸான் நல்வாழ்வு சங்கத்தை வழி நடத்தி வருகிறார்கள்.

## அல் ஈமான் நற்பணி மன்றம் - குவைத்

இம்மன்றம் பிறந்து ஐந்தாண்டுகளே பூர்த்தி (01.05.2008). ஆனால் ஜெட் வேகத்தில் செய்துள்ள செய்து வருகிற சேவைகளை பலரும் வியக்கின்றனர்.

முக்கியமாகக் கடந்த மூன்றாண்டுகளில் (13.12.2013) சுமார் இருநூறுக்கு குறையாத அளவிற்கு வசதி குறைந்த குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து அவர்களது அனைத்து நோன்பு கால தேவைகளையும் பூர்த்தி செய்தது நற்பணி மன்றம்.




வேறு இரண்டு சேவைகளையும் செய்து கொடுத்ததில் மன்றம் ஆத்ம திருப்தி அடைகிறது.

♦ ஷைகு மீரா ஆலம் நிஸ்வானில் பயில வரும் மாணவிகளை அழைத்து வர வாகன (வேன்) வசதி.

♦பசூர் (பசுபதி கோவில்) சையது மீரான் பள்ளிவாசலுக்கு சொந்தமான இடத்தில் 3500 சதுர அடியில், சுற்றுச்சுவர் மதில் அமைத்து வக்ஃபு செய்தது,

அத்தோடு, ஷைகு மீரா ஆலம் நிஸ்வானில் பணியாற்றும் ஆசிரியமணிகளுக்கு மாதந்தோறும் ஊதியத்தில் ஒரு பகுதியை வழங்குவதிலும் முன்னின்று உதவுகின்றனர்.

வசதியற்ற வனிதையர் இல்லறத்திற்கு திருமண உதவிகள் செய்வதிலும், `அல் ஈமான் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சேமிப்பு மற்றும் வட்டி இல்லாக் கடன் வழங்குவதிலும், பெண்கள் விழிப்புணர்வு மாநாடு நடத்துவதிலும் முனைப்பாக நின்று முன்மாதிரி காட்டி வருகின்றனர். (22.05.2011ல் இவர்களது விழிப்புணர்வு மாநாடு பெரும் விழிப்புணர்வை ஊட்டியது!)

தலைவர் : மரைக்காயர் ஹாஜி **எம்.அப்துல் ஜப்பார்;** செயலாளர் : **கான்லெப்பை என். ஜின்னா;** பொருளாளர் : **உச்சி எம். இத்ரீஸ் அஹமது** மற்றும் அச்சாணிகளாக திகழும் சகோதரர்களின் முழு ஒத்துழைப்பால் மனநிறைவுடன் திறம்பட செயல்பட்டு வருகிறது. சக்கராப்பள்ளி கீழப்பள்ளி வாசல் கேட்டுக் கொண்டதற்கிணங்க நுழைவு வாயிலில் கண்ணாடி கதவு சுமார் இரண்டரை லட்சத்தில் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ரமலான் நற்பணி மன்றம் - துபாய்

பெயரில் மட்டுமே ரமலான் நற்பணி! ஆனால், அனைத்து மாதங்களிலும் அமீரக அய்யம்பேட்டை சக்கராப்பள்ளிவாசிகள் தங்கள் மண்ணை

நினைத்துக் காரியமாற்றுகின்றனர்.

1975களில் அமீரகப் பாலைவனத்தில் பொருள் தேட வந்தோர் தங்கள் பகுதி வசதியற்றவர்களையும் நினைத்ததே ஓர் அழகிய முன்மாதிரி!

1981ல் பிறந்தது மன்றம்.

அப்பொழுது அதன் தூண்களாக **கத்தீப் கே.ஏ. சுலைமான் பாட்சா, பின்னகுளம் அப்துல் காதர், அப்துல் லத்தீப், வைத்தியர் கமால் பாட்சா, வாட்சாராவுத்தர், சுலைமான் பாட்சா, நாட்டுக்கார அப்துல் காதர் பாட்சா** ஆகியோர் விளங்கினர்.

எத்தனையோ வேலைப் பளுவிற்கு மத்தியிலும் அதிக ஆர்வமுடன் தலைவர்களாகவும், செயலாளர்களாகவும், பொருளாளர்களாகவும், ஆலோசனை குழுவினர்களாகவும், வாலன் **ஜெ.அக்பர் பாட்சா, கத்தீப் ஏ. அக்பர் பாட்சா, சின்ன மாமு ஹாஜி முகம்மது பாரூக், செரியன் இக்பால், பாவாரை இ.ஏ. முஹம்மது அலி** போன்றவர்களுக்கு பிறகு, சகோதரர்கள் **வாலன் ஜெ. சுலைமான் பாட்சா, லப்பா, பி.எம்.ஏ. சுஹூது, மெட்டஷா ஏ.எம். ஜபருல்லா, மாமாதே அய்யூப், சிம்லா ஏ.எம். இஸ்மாயில், ஈயக்கார முஹம்மது கனி (சேட்டு), மரைக்காயர், ஏ.எம். ஜின்னா, கே.எஸ்.ஏ. அப்துல் சலாம்** போன்றவர்கள் செம்மையான வகையில் நிர்வாகத்தை தளராது நடத்தி வந்தார்கள். அதன் பிறகு, **கத்தீப், ஏ. ஜாஹீர் உசேன், காச்சியா சர்புதீன், ஈயக்கார லத்தீப், மோதீன் பஷீர் அஹமது, மஷாயக் பாரூக் பாட்சா, மாமாத்தே, ஐ. ஜெய்னுலாப்தீன், (பாப்ஜி) வைத்தியர் (ராஜா) முஹம்மது அலி** போன்றவர்களின் நிர்வாகத்திற்கு பிறகு –

**எஸ்.கே. கமால்தீன், மோதீன் கே. அப்துல் நஜீர், தொக்கை ஜமால், மரைக்காயர் நிஜார், மாமாத்தே இத்ரீஸ், லப்பா அப்துல் நஜீர்** என பல செயற்குழு உறுப்பினர்களைக் கொண்டு சிறப்பான முறையில் பல நல்ல காரியங்களை செய்துள்ள இந்த அமைப்பு, குமர் காரிய உதவி, ஈத் பெருநாளைக்கு முன் ஏழை முதியோர்களுக்கு பண உதவி போன்ற காரியங்களை செய்து வந்த நிலையில் வசதியற்ற மாணவர்களுக்கு மேற்படிப்புக்கான கல்வி உதவித் தொகை வழங்கிட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் கல்விக்குழு என்ற ஓர் இணை அமைப்பை ஏற்படுத்தி,, 2000 – 2002 ஆண்டுகளில் நான்கு மாணவமணிகளை இராஜகிரி தாவூது பாட்சா கலைக்கல்லூரியில் கற்கச் செய்தனர்.

இப்பொழுது ஆண்டுகள் பல பூர்த்தியான நிலையில் அந்த நான்கு மாணவர்களும் எத்தகைய உயர்ந்த நிலையில் உள்ளனர், இந்த மன்றத்தை



நினைவில் கொண்டுள்ளனரா என்பவற்றை அரிய என் பேனாவுக்கு மிகமிக ஆவல்!

33 நீண்ட ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள மன்றம், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புது நிர்வாகிகளைத் தேர்வு செய்யும் வழக்கப்படி–

தற்போது தலைவராக குண்டு ஜே.எம். அப்துல் காசிம் ராஜாஜி, பொதுச் செயலாளராக **ராஜஹான் ஏ. பக்கீர் முகைதீன் சாபுஜி** பொருளாளராக மாமா **ராவுத்தரர் ஐ. ஷாஜஹான் ராஜா** மற்ற பொறுப்புக்கான நிர்வாகிகளும் 8.8.2013 அன்று வாலன் ஜே. ஜெய்னுலாப்தீன் தலைமையில் கூடிய பொதுக்குழு அமீரக வருகை புரிந்திருந்த சிம்லா பி.ஏ. முஹம்மது நஜீப் முன்னிலையில் தேர்வு பெற்று செயல்பட்டு வருகின்றனர்.

ஆரம்ப கால முக்கிய நிறுவனங்களில் ஒருவரும், இன்றைய `அஞ்சுமன் திருமண நிக்காஹ் மஹால்' செயலரும், நல்ல எழுத்தாளரும், சொல்லரசுமான **வாலன் ஜெ. சுலைமான் பாட்சா** இம்மன்றத்தின் வளர்ச்சியில் மிகவும் ஆர்வப்பட்டு பல முன்மாதிரிச் சேவைகளைப் புரியத் திட்டமிடுவதில் கண்ணுங் கருத்துமாக இருப்பதை என் பேனா புரிந்தது. பாராட்டுக்கள்.

## அகில மலேசிய
## அய்யம்பேட்டை - சக்கராப்பள்ளி ஜமாஅத்

மிகவும் அமைதியாக ஆரவாரமில்லாமல் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இயங்கும் மன்றம் இது!

**நாட்டக்கார ஹாஜி ஏ. லியாக்கத் அலி(ராஜா)** அவர்களைத் தலைவராகக் கொண்டு செயலாளராக **மோதீன் எம். முத்தலிப் (சாதிக்),** பொருளாளராக **காச்சயா ஹெச். முஹம்மது இஸ்மாயில் (ஹாஜா)** இவர்களுடன் சம்சு கே.எம். தாஜுதீன், ஆலியார் ஆர். முஹம்மது ஆரிப் இவர்களின் மகத்தான ஒத்துழைப்புடன் செயற்குழு உறுப்பினர்கள் செயல்படுகிறார்கள்.

## புருணை அய்யம்பேட்டை - சக்கராப்பள்ளி
## முஸ்லிம் ஜமாஅத், தாருஸ்ஸலாம்

சிறப்பு மிக்க, வளம் நிறைந்த புருணை நாட்டிற்கு 1958ம் ஆண்டு காலடி எடுத்து வைத்த முதல் தமிழ் நாட்டவர் அய்யம்பேட்டை சக்கராப்பள்ளியைச் சேர்ந்த **பூதுராரான் ஹாஜி முஹம்மது இஸ்ஹாக்** ஆவார். அரசுப் பணியில் சேர்ந்த பெருமையும் இவரையே சாரும்.

**அப்புக்குட்டி அப்துல் காதர்** வழி வகுத்தார். இவரின் வழிகாட்டிலில் பலர் தொழில் செய்ய முன்வந்தனர் .

இன்று, தமிழகத்தைச் சேர்ந்த 3 ஆயிரம் பேரும், அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி மைந்தர்கள் 300 பேரும் வணிகமும் தொழிலும் புரிகின்றனர்.

மவ்லூது, மஜ்லிஸ்கள் நடத்துவதில் முனைப்பு காட்டும் ஊர்வாசிகள்.

உத்தம நபியின் உதய தினத்தை புருணை, தாருஸ் ஸலாமில் பரவச் செய்த பெருமைக்குரியவர்கள். **கொக்கரட்டி ஹாஜி டி.எம் ஜபருல்லாஹ், நாட்டாண்மை முஹம்மது ஹுசைன் மரைக்காயர், ஹாஜி நூர் முஹம்மது** ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அங்கு, புனித ரமளான் மாதத்தில் 15 இடங்களுக்கும் மேற்பட்ட இடங்களில் தராவீஹ் தொழுகை நடைபெறுகிறது. பெரும்பாலான இடங்களில் தமிழகத்திலிருந்து அழைக்கப்பட்ட ஹாபிழ்களைக்கொண்டு தராவீஹ் தொழுகை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

மேலும், அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி பொது நலச் சேவைக்கு தேவையான பொருளாதாரங்களை புருணை தாருஸ்ஸலாம் முன்வந்து வாரி வழங்குவது குறிப்பிடத்தக்கது. **கொக்கரட்டி ஹாஜி டி.எம். ஜபருல்லாஹ், பட்டாணி ஹாஜி ஏ. பாரூக் பாட்சா, வாணக்கார ஹாஜி எம். அப்துல் மாலிக், குண்டு ஹாஜி ஏ. சபீர் அஹமது, பட்டாணி ஹாஜி அப்துல் ரசூல், மர்ஹபா ஹாஜி ஏ.கே. பஷீர், அஹமது காதியா, ஹாஜி ஏ. அப்துஸ் ஸலாம்** போன்ற பலர் இதில் குறிப்பிடத்தக்கவர்களாவர். அதிலும், மூன்று முக்கிய அமைப்புகளுக்கு (அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி முஸ்லிம் ஜமாஅத், காயிதெ மில்லத் பேரவை, தமிழ்நாடு முஸ்லிம் ஜமாஅத்) தலைவராகவும், அய்யம்பேட்டை சக்கராப் பள்ளி சேமநலச் சங்கத்திற்கு (பைத்துல்மால்) துணைத் தலைவராகவும் திகழ்கிற **`இறையன்பக் கொடையாளர்' அல்ஹாஜ் கொக்கரட்டி டீ.எம். ஜஃபருல்லாஹ்** அவர்கள், இந்த ஆய்வுப் பணிகளை நான் ஊரில் மேற்கொண்டிருந்த பொழுது **`அஞ்சுமன் திருமண (நிக்காஹ்) மஹால்** தலைவராகவும் நியமனம் பெற்ற தகவல் கிடைத்தது, தித்திப்பாக அமைந்தது.

நேர்காணல் செய்ய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இருந்தபோதிலும் இம்மஹாலிலும், ஒரு பின்னணிக் கதை இருப்பதை செயலாளர், `சொல்லரசு' வாலன் ஜெ. சுலைமான் பாட்சா அவர்களைக் கடைசி நிமிடத்தில் சந்தித்தபொழுது அறிந்தேன்.

அப்பொழுது ஏற்பட்ட `மகிழ்ச்சி கலந்த பிரச்சினை', என்னவெனில் புருணைவாழ் மக்களின் பங்களிப்பை என்ன செய்வதென்பது?

ஜமாஅத் தலைவர் மற்றும் நிர்வாகிகளைக் கலந்த பொழுது –

அஞ்சுமன் நிர்வாகத்திற்கு சொந்தமான பகுதியைப் பெற்று அதில் ஒரு திருமண நிக்காஹ் மஹால் கட்டுவது என தீர்மானிக்கப்பட்டு, அஞ்சுமன் திருமண (நிக்காஹ்) மஹால் 22.08.2012ல் திறக்கப்பட்டது.
(படம் மறுபக்கத்தில்)





அம் மண்டப நிர்வாகத்தை வெளிநாட்டில் வசிக்கும் நமதூர், பிரமுகர்களின் கட்டுப்பாட்டில் வைத்து செலவிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஏற்கெனவே 03.01.2003ல் திறப்பு விழா கண்ட ஜாமிஆ மஸ்ஜித் வளாகத்தில் சமுதாயக் கூடம் (விருந்தோம்பல் மண்டபம்) அமைக்க உதவிய புருணை மற்றும் அமீரக குவைத் ஊர்வாசிகள் இணைந்து, இதிலும் சளைக்காமல், முன்வந்து சாதனையாளர்களானார்கள்.

ஆக, பல தலைமைப் பதவிகளைச் சுமந்திட்ட `இறையன்பக் கொடையாளர்' ஹாஜி ஜஃபருல்லாஹ் இதற்கும் தலைவராக இப்பொழுது இலங்குகிறார்கள்!

தலைவர் தமது அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருப்பதையும் அபிமானிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்: ``துபை, குவைத்தில் உள்ள நமது மண்ணின் மைந்தர்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்களிடமும் நிதி ஆதாரங்கள் பெறவே செய்தோம். மலேசிய, சிங்கப்பூர், ஊர்ப் பொதுமக்களின் ஒத்துழைப்பும் நிறைய நிறையப் பெற்று நிறைவு செய்தோம்.'

அல்ஹம்துலில்லாஹ். மென்மேலும் இப்பெருமக்களது ஒற்றுமை உணர்வு ஓங்கிட இறைஞ்சுவோம்.

இந்தப் `புது வெளிச்சங்கள்' நூலுக்கு தஞ்சாவூர் மாவட்டம், அய்யம் பேட்டை அஞ்சுமன் திருமண (நிக்காஹ்) மஹாலும் புதியதொரு ஒளி விளக்கே!

வெளியீட்டு விழா அங்கே! அல்ஹம்துல்லில்லாஹ்.

## முன்னோர்கள் மூத்தோர்களின் அழகிய முன்மாதிரிகள்

முதன்மைப் பள்ளிவாசலாம் அன்றைய மேலப்பள்ளிவாசல், இன்றைய ஜாமிஆ மஸ்ஜிதுக்கு முன்னோர்கள், மூத்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட பல சேவைகளில் சில:

♦ **மர்ஹூம் அல்ஹாஜ் உச்சி அப்துல் காதர்** அவர்கள், இறையில்லத்திற்கு சலவைக்கற்கள் பதித்தும், நிக்காஹ் நிகழ்வுறும் இடதுபக்கத்தில் ஜன்னல்கள் அமைத்தும் அழகுபடுத்தினார்கள். இதேபோல் பங்களாப் பள்ளியைப் புதுப்பித்தவர்களும் அவர்களே! இப்பொழுது இது, (`மஸ்ஜித் ஃபாத்திமா பத்ர்') மத்ரஸா.

♦ ஜும்ஆ நேரம், ஸஹர், இஃப்தார் ஆகிய காலங்களை அறிவிக்க `மின்சங்கு' அமைப்பை **மர்ஹபா, ஹாஜி ஏ. பஷீர் அஹமது** (தொக்கை முஹம்மது கனி நினைவாக) ஏற்படுத்தினார்.

♦ அன்று `நகூரா மேடை' நிர்மாணிப்பைச் செய்து கொடுத்தார் **மாங்குடி கமாலுத்தீன் சாகிப்.**

♦ அஞ்சுமன் மதரஸா கிரமமாக நடைபெறுவதில் அதிக சிரத்தை காட்டி அரும்பாடுபட்ட பெரியவர் **அல்ஹாஜ் அப்துல் ரஹ்மான் சாஹிப்** (வேலூருக்கு அடுத்தபடியாக இங்கேயே பலர் `மவ்லவிப் பட்டம்' பெற்றனர்).

♦ அல்ஹாஜ் உச்சி **அப்துல் காதர் மகனார் ஏ. சேக் தாவூத் (சேட்),** தன் அன்னையார் நினைவில் கட்டியுள்ள `ஆமினா மஸ்ஜித்' சக்கராப்பள்ளி, கீழ மெயின் ரோடு ஷேக் சாஹிப் தைக்கா வளாகத்தில் உள்ளது.

♦ ஒரு நூறு வீடுகளுக்கு மத்தியில் ஒரு எழில்மிகு இறை இல்லம். அதன் பெர் மஸ்ஜிதுல் மதீனா,

இடம் அன்பளிப்பு : மர்ஹூம் கருப்பூர் ஹாஜி பக்கீர் மைதீன் அவர்களின் குடும்பத்தார்கள்.

பொருள் உதவி : பொது மக்கள்.

ததவல் தருபவர் : மௌலவி அப்துஸ் ஸலாம் மன்பஈ

♦ பங்களாப்பள்ளி (மஸ்ஜித் ஃபாத்திமா பத்ர்), ஆமினா மஸ்ஜித் இரண்டுக்கும் நிலம் வழங்கியவர் **மஷாயிக் ஹாஜி நூர் முஹம்மது** அவர்கள்.

♦ **மர்ஹூம் ஹாஜி ஆவூர் அப்துல் காதர் சாஹிப்** நினைவில் மகனார் தொழில் அதிபர் **ஆவூர் ஹாஜி முஹம்மது ஃபாரூக்** அவர்கள் `மூமீன்களின் பூங்காவை (அடக்கத்தலச் சுற்றுச்சுவர்) அழகுபடுத்தி வைத்தார்.

♦ அதன் உள்பகுதியை (ஜனாஸாத் தொழுகை கூடத்தை) கட்டிக் கொடுத்தவர் **மெர்லின் சாகிப்** அவர்கள்.

♦ பாதை நடையை அமைத்து வழங்கியவர் **கான் ஹாஜி முஹம்மது இப்ராஹீம் சாகிப்** அவர்கள்.



♦ மதகடி பள்ளிவாசலுக்கு இடத்தை வழங்கியவர் **கனியார் தாவூது சாஹிப்.** வாணியத் தெரு பள்ளிவாசல் கட்டியவர் **ஈயக்கார குடும்பத்தார்கள்.** அதன் உள்ளே மார்பிள் கண்ணாடி அடைப்பு **கத்தீப் ஏ. பாரூக் பாவா** மூலம் செய்யப்பட்டது. இப் பள்ளியின் பராமரிப்பு செலவிற்காக **மர்ஹூம் ஹாஜி கான் முஹம்மது சுல்தான்** சென்னையில் கட்டடம் ஒன்று வாங்கி வக்ஃபு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

♦ சுபுலு ஸ்ஸலாம் மதரஸாவை (அரபிக் கல்லூரி) புதுப்பித்து கட்டிக் கொடுத்தவர் நொக்கத்தார் **ஏ. அப்துல் ஜப்பார்.**

♦ அல் இஹ்ஸான் ஹிப்ஸ் (அல்குர்ஆன் மனனம் செய்யும்) மதரஸாவிற்கு தரை மொசைக்கும், மர வேலைகளையும் **மர்ஹூம் ஹாஜி அடையகட்டி எம்.பி. முஹம்மது காசிம்** அவர்கள் செய்து கொடுத்தார்கள்.

♦ ரயிலடியில் உள்ள மஹபூப் சுபுஹானி மதரஸாவின் செலவிற்காக, **மர்ஹூம் ஹாஜிகான் முஹம்மது சுல்தான்** அவர்களால் சென்னையில் கட்டிடம் ஒன்று வாங்கி வக்ஃபு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

♦ வடக்கு தெரு மதரஸா இஹ்ஸானுல் முஸ்லிமீன் கட்டிடத்தில் முதல் மாடியை **மர்ஹூம் ஜெ.எச்.சி. அப்துஸ் சமத்** அவர்களின் நினைவாக அவர்களது மகனார் **ஜெ.எச்.சி.ஏ. பாவாஜான் அஸ்ரப் அலி சித்தீக்** அவர்களால் கட்டி கொடுக்கப்பட்டது.

♦ **மில்லத் நகர் முகையதீன்** ஆண்டவர்கள் பள்ளிவாசலுக்கு பைப், மோட்டார் அன்பளிப்பு **ஆவூர் அப்துல் காதர் சாஹிப்** ஜெனரேட்டர் வக்ஃபு செய்தார்கள். பாவாஜி நகர் சித்தார்த்த **ஹாஜி ஏ. அப்துல் ஹமீது, மில்லத் முஹம்மது இஸ்மாயில்** நட்பின் நினைவாக '**தங்கப்பல்' என்.எம். குமாரர்களால்** வாங்கி கொடுக்கப்பட்டது. 07.08.2009ல் புனர் நிர்மாணம் பெற்று புதுப் பள்ளிவாசலாகத் திறப்பு விழா காணச்செய்வதில் தொழிலதிபர் மதிப்புமிகு **முஹம்மது ஹனீஃபா** (மலேசிய பார்கோஸ் நிறுவனங்கள் அதிபர்) அவர்களின் ஈடுபாடும் பங்களிப்பும் அளப்பரியதென அறிந்து ஆன்மிக மகிழ்வு கொள்கிறது ஆய்வுப் பேனா.

## பதவிகளைப் பறக்க விட்டார்கள்!

பதவிகளுக்காகப் பறந்து திரிபவர்களை ரசித்துப் பார்க்கும் ஒரு கால கட்டமிது!

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் இரு முக்கிய முஸ்லிம் லீக் `புள்ளிகள்' தங்கள் பதவிகளை பறக்க விட்டனர் காற்றிலே!

அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளியில்தான் நடந்தது!

அந்த அழகிய முன்மாதிரியை நடந்தது நடந்தபடியே தந்து விடுகிறேனே!

அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளியில் முஸ்லிம் லீக் ஊழியர்கள் ஒரு


இப்போதைய முஸ்லிம் லீக் கட்டிடம்

புதிய மாடிக் கட்டடத்தை கட்டி முடித்தார்கள்.

`உழைப்பின் சிகரம்' எனச் சிறப்பு பெற்ற **ஆலிமான் ஏ. ராஜா முஹம்மது** அவர்களின் சீரிய முயற்சியுடன், உண்மை ஊழியர் **அல்ஹாஜ் பதுருதீன் சாஹிப்** (ஜம்ஜம் ஹாஜி) அவர்களின் ஒத்துழைப்புடன் இப்பணி ஆரம்ப மாயிற்று.

பிரைமரி முஸ்லிம் லீகின் தலைவர் ஜனாப் **டாக்டர் ஜியாவுதீன் சாஹிப்** அவர்களின் துணையுடன் ஊழியர்கள், ஊர் மக்கள் அனைவரின் ஒத்துழைப் புடன் தஞ்சை மாவட்டத்தின் முக்கிய இடமான அய்யம் பேட்டையில் ரஹ்மானியத் தெருவில் (புதுத்தெரு) இந்தக் கட்டிடம் ரூ.30 ஆயிரம் செலவிலே கட்டப்பட் டது.

`**காயிதெ மில்லத் மன்ஸில்**' என்று பெயர் சூட்டப்பட்ட அந்தக் கட்ட டத்தை 21.5.1971 அன்று ஜும்ஆ தொழுகைக்குப் பின் **கெளமின் காவலர் அல்ஹாஜ் காயிதெ மில்லத் இஸ்மாயில் சாஹிப்** அவர்கள் திறந்து வைத்தார்கள்.

கட்டிடத் திறப்பு விழாவையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் **ஜனாப் அப்துல் வகாப் ஜானி சாஹிப் எம்.எல்.சி.**, ஆ.கா.அ. அப்துஸ் ஸமது, வடகரை **பக்கர் சாஹிப், ஹாஜி எம்.எம். பீர் முஹம்மது எம்.எல்.ஏ., அப்துல் லத்தீப் எம்.எல்.ஏ., பாபநாசம் தொகுதி எம்.எல்.ஏ திரு. கணபதி** மற்றும் பலர் பங்கு கொண்டனர்.

அதே தினம் அங்கே நடைபெற்ற முஸ்லிம் லீக் செயற்குழு கூட்டமும் முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியது. அதிலே ஒன்று வக்ஃபு போர்டு பற்றியது.

``**முஸ்லிம் லீகின்** தோழமைக்கு முரணாக மட்டும் அல்ல. அறிஞர் அண்ணா விரும்பிய முறைக்கும் மாற்றமாக வக்ஃபு போர்டு உறுப்பினர்கள் பெரும்பாலோர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். பழைய ஊழலுக்கும் காரணமானவர்களையும், மேலும் ஊழலை மாற்ற இயலாதவர்களையும் சமூகத்துக்கோ பொது வாழ்வுக்கோ சம்பந்தமில்லாதவர்கள் பலரையும் நியமித்திருக்கிறார்கள்.

ஆகவே, சமூகம் எதிர்பார்க்கும் அளவுக்கு வக்ஃப் போர்டு சரியாக இயங்க இயலாது. அதுமட்டுமல்ல, பழைய ஊழல்களையும் விசாரித்து நீதியறிந்து தீர்வு காண இயலாது. ஆகவே, மேலும் ஊழலுக்கு இடம் தரக்கூடிய முறையில் திருத்தவே இயலாத வகையில் இயங்க வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள புதிய வக்ஃபு போர்டில் நம் இயக்கத்தவர்கள் இருப்பதில் பயனில்லை என நாம் கருதுகிறோம். எனவே, பெயர் அறிவிக்கப்பட்ட தஞ்சை மாவட்ட முஸ்லிம் லீக் தலைவர் **எம்.எம். பக்கர் சாஹிபும், ஹாஜி எம்.எம். பீர் முஹம்மது சாஹிபும்** அப் பதவியை ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை'' என்ற தலைவர் அவர்களின் கருத்துக்கு இணங்க செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியது.


அதை அந்த உறுப்பினர்கள் இருவரும் ஏற்றுக் கொண்டனர். தஞ்சை மாவட்ட லீக் தலைவர் **எம்.எம். பக்கர்** அவர்களும் ரவணசமுத்திரம் **எம்.எம். பீர் முஹம்மது** அவர்களும் அன்றைய தினம் `தியாகி' களாயினார்கள்.

தலைமையின் ஆணைக்கு ஏற்ப தங்களுக்கு வந்த பதவியை வேண்டாமெனச் சொல்லி காற்றிலே கலக்கச் செய்த செயலை இன்றைய காலகட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், எத்தகைய அழகிய முன்மாதிரி என்பது பளிச்சென வெளிச்சமிடும்.

நல்லது. இந்த அத்தியாயம் இன்னமும் நீண்டு விட அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளிவாசிகளிடம் எத்தனையோ பல முன்மாதிரிகள் உண்டு.

## அஸ்ஸலாமு அலைக்கும்...... (வரஹ்)

சக்கராப்பள்ளி ரஹ்மானியத் தெரு, பெரியவர் ஹாஜி `ஜம் ஜம்' அவர்களது இல்லத்தின் மேல்மாடியில் இந்த நூலுக்குப் `புது வெளிச்சங்கள்' பாய்ச்சும் இறுதிக் கட்டத்தில் மூழ்கி, `அழகிய முன்மாதிரி' நிகழ்வுகளைத் தொகுத்து கொண்டிருக்கையில் வாசலில் யாரோ, ஸலாம் உரைப்பது கேட்டது! உண்மையில் எந்த மனிதரும் அதைச் செய்யவில்லை! ஓர் அழைப்பு மணிக் கருவியின் சேவை அது! எத்தனையோ நவீனக் கண்டுபிடிப்புகளில் `அழகிய முன் மாதிரி'யாகச் சந்தைக்கு வந்துள்ள வீட்டு வாசல் `பெல்' தடதடவென கீழே ஓடிவந்து கதவைத் திறந்தால் ஒரு `விடலை' நின்றிருந்தான்! ``நீங்க தானா மானா மாக்கான்? என்று கேட்டான். `மக்கீன்' எனச் சொல்ல வராமல் `மாக்கான்' என்றான்!



`அட! இந்தப் பயலுக்கு நான் அடிக்கடி மலேசியா செல்வது எப்படி தெரிந்தது?' என்ற வியப்புடன் ``ஆமா நான் தான் மாக்கான்'' என்றேன்.

``எங்க சிம்லா நஜீப் பெரியப்பா இந்தக் கவரை உங்க கிட்ட குடுத்திட்டு ஓடிவரச் சொன்னாங்க,

இந்தாங்கப் பிடிங்க'' என்று என் பதிலுக்குக் காத்திராமல் கைகளில் கடித உறையைத் திணித்து விட்டுச் சிட்டாகப் பறந்தான்!

உண்மையில் ஓர் குற்ற உணர்வு எனக்கு! அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர், ``சொல்லின் செல்வர்'' சிம்லா ஹாஜி அவர்களை ஒரே ஒரு முறை சந்தித்து `சிம்லா டீ' பருகியதோடு அவரை எட்டியும் பார்க்கவில்லை! பயங்கரமான பிரியாணி, விருந்தோம்ப லுக்குப் பயந்தும், அத்தோடு கால அவகாசம் குறையவும், இவற்றையெல்லாம் புரிந்து கொண்டு பேருள்ளம் உடைய மனிதர் இப்பொழுது ஒரு `கவரை' அனுப்பியிருக்கிறார்! `கவரில் காசோ, காசோலையோ இருந்திடலாகாது அல்லாஹ்வே' என்ற இறைஞ்சுதல்களோடு உடனேயே திறந்தால் ஒரு நாலுவரி நல்ல முகவுரையுடன் இரண்டு மூன்று பக்கங்களில் இரத்தினப் பதிவுகள்! எந்தவிதமான எடிட்டிங், கிடிட்டிங், கத்தரிக்கோல் போடாமல் அப்படியே இங்கே பதித்துவிட விருப்பம் மிக!

**''அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளியின் சரித்திர சுவடுகளுக்கு `புதிய வெளிச்சம்' பாய்ச்சும் ஆசிரியர் மானா மக்கீன் அவர்களால் எழுதப்படாத அல்லது விடுபட்டுப் போன சில தகவல்களை பதிய வேண்டியது என் கடமையாக கருதுகிறேன்.**

**`தாயின் பாதத்தின் கீழ் சுவர்க்கம்' உள்ளது என்பது மாநபியின் மணிமொழி. `தாயிற் சிறந்த கோயிலுமில்லை; தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பது தமிழ் மொழி. இதனை இதயத்தில் ஏந்தி, தாய் தந்தை மீது அளவிட முடியாத பாசத்தையும், அன்பையும் பொழிவோர் எங்களூர் மக்கள்.**

**தாய் தந்தையை ஒதுக்கி வாழ்பவன் அல்லது ஒதுங்கி வாழ்பவனை ஊர் மதிப்பதே இல்லை. அத்தகையோரை பத்தடி தள்ளி வைத்தே பார்ப்பது ஊர் வழக்கம். ஆனால், தாய் தந்தையரை போற்றுபவரை தலையில் தூக்கி வைத்து கொண்டாடும் நமதூர். அவ்வகையில், தன் தாயின் பெயராலேயே ஐந்து அல்லாஹ்வின் இல்லங்களும், பள்ளிவாசல் அரபி மதரஸாக்களும், பெண்கள் நிஸ்வான் ஆகியவற்றை இங்குள்ள எங்கள் சொந்தங்கள் உருவாக்கியுள்ளார்கள் என்பது பெருமை கொள்ளத்தக்க எடுத்துக் காட்டாகும். அற்புதஅழகிய முன்மாதிரியாகும்.**

**``உ.அ.'' என்றழைக்கப்படும் அல்ஹாஜ் உச்சி அப்துல் காதர் அவர்கள் தன் தாயார் ஃபாத்திமா பீவி அம்மையார் பெயரில் மஸ்ஜித் ஃபாத்திமா பத்ர் பள்ளிவாசலும்,**

**``உச்சி அஜ்ஜிபாய்'' என்றழைக்கப்படும் உச்சி அல்ஹாஜ் முஹம்மது அலி அவர்கள் தாயார் ஹலீமாபீவி அம்மையார் பெயரில் ``ஹலீமா மஸ்ஜிதும்'',**

**``உச்சிசேட்டு'' என்றழைக்கப்படும் சேக் தாவூது அவர்கள் தன் தாயார் பெயரில் ஆமினா மஸ்ஜிதும் ஆக மூன்று அல்லாஹ்வின் திரு இல்லங்களை மேற்கண்ட ஒரே குடும்பத்தார்களே உருவாக்கியுள்ளது அற்புத அழகிய முன்மாதிரியாகும்.**

**மேலும், அல்ஹாஜ் காதியா அப்துல் சலாம் தன் தாயார் தாஜின்னிஸா அம்மையார் பெயரில் தாஜ் மஸ்ஜிதும், ஆவூர் அல்ஹாஜ் ஏ. முஹம்மது பாரூக் பிரதர்ஸ் அவர்கள் தங்கள் தாயார் சபூராபீவி அம்மையார் பெயரில் சபுரா மஸ்ஜித் ஆக ஐந்து மஸ்ஜிதுகள் உள்ளதும் ஊரின் பெருமைக்குரிய வரலாறு.**

**250 பெண்கள் வரை பயிலும் சேக் மீரா ஆலம் நிஸ்வான் பெண்கள் மதரஸாவிற்கு தங்கள் தாயார் பசீரா கனி அம்மையார் பெயரில் மதரஸா மாளிகை உருவாக்கி கொடுத்துள்ளவர்கள் அல்ஹாஜ் கொட்டபாக்கி ஏ. அப்துல் கபூர் சன்ஸ் சுலைமான்பாட்சா, சாப்ஜி இல்யாஸ் ஆகியோர் ஆவார்கள்.**

**ஹைரோடு பள்ளிவாசல் விஸ்தரிப்பு செய்து தன் தாய் தந்தை மாங்குடி அமீர்பாட்சா ஜெமிலா கனி அம்மையார் பெயரில் வக்ஃபு செய்து அளித்துள்ளவர் அல்ஹாஜ் ஏ. முஹம்மது அலி ஆவார்கள்.**

**இப்படி எண்ணற்ற நற்காரியங்கள் அழகிய முன்மாதிரிகள் வரிசையில் மதரஸா சுபுலுஸ்ஸலாம், நமதூரின் நடமாடும் அவ்லியா என போற்றப்பட்ட மர்ஹூம் ஹாபிழ் அப்துல் நூர் அவர்களால் துவங்கப்பட்டது.**

**அதன்பின், அல்ஹாஜ் நொக்கத்தார் அப்துல் ஜப்பார் அவர்கள் புதிய கட்டிடம் கட்டி வக்ஃபு செய்யப்பட்டு மதரஸா இயங்கி வருகிறது.**

**இவ்வாறாக அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி மணிமகுடத்தில் ஊரிலுள்ள பதினைந்து பள்ளிவாசல்களும் வைரக்கற்களாய் ஜொலிக்கின்றன. அதுவும் கேள்வி ஞானம் எதுவுமே வளராத அக்காலத்திலும் திட்டமிட்டு நான்கு திசைகளிலும் பள்ளிவாசல் அமைந்திருப்பது ஆச்சரியமான விஷயமாகும்.**

**இக்காலத் தலைமுறையினர் யாரும் அறிந்திராத முக்காலத்திற்கு முன்பே தோன்றி ஊரின், முதல் பள்ளிவாசல் மேற்கில் அமைந்துள்ள ஜாமிஆ மஸ்ஜித் எனும் மேலப்பள்ளிவாசலாகும். ஏறத்தாழ இக்கால கட்டத்திலே உருவாகி தற்சமயம் இஸ்லாமிய கலாசார மையமாகத் திகழும் பூப்பள்ளிவாசல் கிழக்கிலும், வடக்கில் அமைந்திருந்த பாட்சா ராவுத்தர் பள்ளிவாசலும், தெற்கில் இறைநேசச் செல்வர் ஜிந்தா மதார் தர்கா அமைந்துள்ள அஞ்சுமன் பள்ளியும் தான் இவ்வூரின் மிகவும் பழமை வாய்ந்த புராதன பள்ளிவாசல்களாக இருந்துள்ளது.**

**கடற்கரை ஊரான அதிராம்பட்டினத்திற்கு ஒரு முஸ்லிம் லீக் விழாவிற்கு**

**சென்றிருந்தபோது, அங்கு விநியோகித்த ஒரு மலரில் 'அய்யம்பேட்டை பாட்சா ராவுத்தர் பல்லக்கில் பவனி' என்ற ஒரு சொற்றொடர் வந்தது. ஆக, அய்யம்பேட்டையை சேர்ந்த பாட்சா ராவுத்தர் அவர்கள் மிகப் பிரபலமானவராக இருந்துள்ளமைக்கு அதிரையில் பார்த்த செய்தி ஒரு சான்றாகிறது.**

**மேலும், பாட்சா ராவுத்தர் பயணித்த பல்லக்கு மேலத்தெருவில் உள்ள அவர் வீட்டுத் திண்ணையிலேய நீண்ட காலம் இருந்துள்ளதை பலரும் பார்த்துள்ளார்கள்.**

**இத்தகவலை சமீபத்தில் காலமான பாட்சா ராவுத்தர் சுலைமான் பாட்சா என்னிடம் பகிர்ந்து கொண்டார்கள்.**

**இவ்வூர் மக்களின் திரைகடல் பயணத்திற்கு பின் மிகப் பெரும் வளர்ச்சி ஏற்பட்டு பற்பல உதவிகளும் இவ்வூரில் நடந்துள்ளன. துபாய் வாழ் எம்மவர் முன்னெடுத்த பைத்துல்மால், குவைத் வாழ் சகோதரர்கள் துவக்கிய பைத்துல் ஜகாத் ஆகியவையும், அதன் செயல்பாடுகளும் அதிசயிக்கத்தக்கவையாகும். பைத்துல்மால் மூலம் வட்டியில்லா கடன் உதவி மருத்துவத்திற்கு இலவச பொருள் உதவி பைத்துல் ஜகாத்தில் கிடைக்கிறது. ஏழை விதவை தாய்மார்கள் சுயமாக தையல் தொழில் செய்யலாம். அதற்கான தையல் எந்திரங்கள், வெட் கிரைண்டர்கள் எனப் பட்டியல் நீள்கிறது.**

**ஆக, தொடரும் சரித்திரத்தில் செய்ய வேண்டியவை ஏராளமாய் இருக்கின்றன. இருப்பினும் சிலவற்றை மட்டும் பகிர்ந்து விடைபெறுகிறேன்.**

இறுதியாக என் ஆய்வுக் கிடைத்த ஒரு தகவலையும் பகிர்ந்து கொள்ள விருப்பம்:

``மதராஸப்பட்டின''மாகிய மாபெரும் சென்னையில் சென்ட்ரல் தொடர்வண்டி பெரும் நிலையம் அருகே அச்சொட்டாக மாநகர சபைக் கட்டடமும், ``மூர் மார்க்கெட்'' எனப்படுகிற இடத்திற்கும் நேர் எதிரே இன்னும் தெளிவாகச் சொன்னால் பூங்கா மின் தொடர் வண்டி நிலையத்தின் பக்கமாக உள்ள ஒரு கட்டடத்தில் அய்யம்பேட்டை மண் வாசனை வீசுகிறது. அக்கட்டடத்தின் பெயர் `**சித்தீக் சராய்**'.

சென்னை வரும் பயணிகள் விசேஷமாக ஹஜ் யாத்திரை மேற்கொள்வோர் மூன்று நாட்கள் வரை இலவசமாகவும், அதன்பின் மிகக் குறைந்த வாடகையிலும் தங்கிக் கொள்ள ஏதுவாக, புகழ்பெற்ற மேல்விஷாரத்தைச் சார்ந்த நவாப் **சி.அப்துல் ஹக்கீம்** அவர்கள் 1921ம் ஆண்டு இக்கட்டடத்தை வாங்கி வக்ஃபு செய்தார். இவரது பூர்வீகம் அய்யம்பேட்டை என்பதுதான் இங்கு குறிப்பிடத்தக்க தகவலாகும். (ஆதாரம்: எம்.ஆர்.எம். அப்துல் ரஹீம் எழுதிய, `இஸ்லாமிய கலைக்களஞ்சியம்').



– இவ்வாறாக அபிமானத்திற்குரிய வரும், தமிழக முஸ்லிம் லீக் செயல்வீரர்களுள் ஒருவருமான **ஹாஜி சிம்லா முஹம்மது நஜீப்** அவர்கள் அள்ளி வழங்கியுள்ள தகவல்களினால் என் ஆய்வுக் கடமையில் நான் செய்ய வேண்டியது குறைந்தே போய்விட்டது நன்றி பல. அடுத்த முத்தாய்ப்பு அத்தியாயத்தைக் கூட, அவர்களது அருமையான அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளி வர்ணனையை முதன்மைப்படுத்தியே ஆரம்பித்து முடிக்கப் போகிறேன்.

அதற்கு முன், கல்வித்துறையில் காட்டப்படும் அழகிய முன்மாதிரிகளையும் ஒரு `பறவைப் பார்வை' பார்த்து விடுவோமே! விசேஷமாக, உன்னத மார்க்கக் கல்விக்காக அரபிப் பாடசாலைகளிலும், மத்ரஸாக்களிலும் தங்கள் சந்ததியினரைப் புடம் போட்டெடுக்கும் அதேசமயம், உலகக் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்து, ஊரில் பற்பல பொது கல்விக்கூடங்களை இயங்க வைத்திருக்கும் அந்த அற்புதத்தை வர்ணிக்க வார்த்தைகள் குறைவு.

சுருக்கமான சில ஆய்வுத் தகவல்கள் :

## ஷைகுமீரா ஆலம் நிஸ்வான் மதரஸா



ஷேக் மீரா ஆலம் வலியுல்லாஹ் அவர்களின் புதல்வர் பிஸ்மில்லாஹ் ஸாஹிபும் மிகப் பெரும் மார்க் அறிஞராக திகழ்ந்தார்கள். இவர்களின் 8–வது தலைமுறையில் பிறந்த முஹம்மது பஷீர் ஆலிம் பாகவி அவர்கள் தம் மூதாதையர்களின் தீன் பணி தொடர வேண்டும் என்ற தமது எண்ணங்களை வாரிசுகளிடம் ஒரு வசியத்தாகவே வலியுறுத்தி கூறினார்கள்.

தந்தையின்வேண்டுகோளுக்கிணங்கி இவர்களின் மூத்த புதல்வரும், இஸ்லாமிய கலாசார பேரவையின் நிறுவனருமான **மவ்லவி அல்ஹாஜ் பி.எம். ஜியாவுத்தீன் பாகவி** அவர்கள் நீடூர் நெய்வாசல் ஜாமிஆ மி பாஹுல் ஹுதா அரபி கல்லூரியில் 21 வருடம் பேராசிரியராக பணியாற்றிய தன் ஆசிரியப் பணியை ராஜினாமா செய்துவிட்டு ஷைகு மீரா ஆலம் மகளிர் நிஸ்வான் மரதஸாவை உருவாக்கினார்கள்.

மதரஸாவில் 5 ஆசிரியைகள், 1 ஊழியர், 130 மாணவிகள் படிக்கிறார்கள். மதரஸா பிரிவு 1 வருட பாடத் திட்டமாகவும், நிஸ்வான் 3 வருட பாடத் திட்டமாகவும் செயல்படுகிறது.

உருது, மின்ஹாஜ், தப்ஸீர், துஆ, தாரிஹ் ஹதீஸ், பிக்ஹ் போன்ற

பாடங்கள் விரிவாக நடத்தப்படுகின்றன. பிரத்யேக பாடத்திட்டமாக கம்ப்யூட்டர் பயிற்சியும், தையல் எம்ப்ராய்ட்ரி, கூடை பின்னுதல் பயிற்சியும், ஜனாஸாவை குளிப்பாட்டும் பயிற்சி முறையும் அளிக்கப்பட்டு வருகின்றன.

## சக்கராப்பள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி

ஒரு நூற்றாண்டைக் கடந்து (03.03.1893) கல்வி அறிவை கம்பீரமாகப் புகட்டிக் கொண்டிருக்கும் இப்பள்ளிக்கூடம் (வடக்குத் தெரு) ஆரம்பத்தில் ஐந்தாம் வகுப்பு வரையில் செயல்பட முடிந்தது.

1978க்குப் பிறகு தரம் உயர்த்தப்பட்டு 8ஆம் வகுப்பு வரையில் 600க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கற்கின்றனர்.

200க்கு மேற்பட்டவர்களுக்கு சத்துணவு கிடைக்கிறது.

(இந்நூலின் பதிப்பாளர் / வெளியீட்டாளர் இப்பள்ளியிலேயே அரிச்சுவடியை ஆரம்பித்தார் என்றறிந்து அவரது கைகளை குலுக்கினேன்.)

## அரசினர் உயர்நிலைப்பள்ளி

ஆரம்பத்தில் 8ஆம் வகுப்பு வரை கற்பித்த இப்பள்ளி 10.07.2006 முதல் அரசினர் உயர்நிலைப் பள்ளியாகப் பரிணமித்தது.



இந்த உயர்வுக்கு முழுமுதற்காரணமாக இருந்தவர், நானும் என் பேனாவும் முதன் முதலில் சந்தித்த மூத்த பெரியவர், முஸ்லிம் லீகின் தூண்களுள் ஒருவர் ஹாஜி எம்.ஏ. குலாம் மைதீன் அவர்களே என்பதும், அன்னாரே இப்பொழுதும் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதையும் பிறர் சொல்ல அறிந்தேன். (தன்னடக்கத்துடன் தன்னைப் பற்றியத் தகவல்களைக் குறைத்துக் கொண்டதை எண்ணிப் பார்த்து வியக்கிறேன்! அதுவும் ஓர் அழகிய முன்மாதிரியே எனப் பதிக்க வேண்டியிருக்கிறது!)

அய்யம்பேட்டையைச் சுற்றியுள்ள நாற்பதுக்கு மேற்பட்ட கிராமங்களிலிருந்து நாளைய சந்ததியினர் இங்கே அறிவுத் தாகத்தோடு ஒடி வருகிறார்களாம்!

`அதிசயமான தகவல்!

1921ல் இடைநிலைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு `78ல் மேல்நிலைப் பள்ளித் தரத்திற்கு உயர்வு பெற்று அரசினரால் நடத்தப்படுவது.

1850 மாணவ மாணவியர் 50க்கு மேற்பட்ட ஆசிரியமணிகள்.

கட்டட விரிவாக்கம் 2011–ல் நடந்தன. இப்பொழுது பூர்த்திதானே? அறிந்தவர்கள் தெரிவியுங்கள் (தெரிய எனக்கு நேரமிருக்கவில்லை).

## சக்கராப்பள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி

முதலில் பதித்தது வடக்குத் தெரு பள்ளியை. இது தெற்கு.

1931ல் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் என்பது செவிவழிச் செய்தியாக இருந்தாலும், 12.07.1940லேயே, பெண்களுக்கு மட்டுமென அதிகாரப்பூர்வ மான தோற்றம்.



1965களில் **கத்தீப் எம். முஹம்மது இஷ்ஹாக், ஈயக்கார கமால் பாட்சா** ஆகியோர் நிதிக்கொடை பெற்று புதிய அமைப்பில் கட்டடம் எழுப்பியுள்ளார்கள்.

இப்பொழுது இது, இரு பாலாரும் கற்கும் கல்விக் கூட மாக அறிவொளி பாய்ச்சுகிறது.

இங்கே கல்விப் பயிற்சிகளில் சில விசேடங்கள்:

**மடிக்கணினி (லேப் டாப்) பயிற்சி:**

Project - T.V., D.V.D. மூலம் பயிற்சி கொடுப்பது செயல் வழிக்கற்றல் மூலம் மாணவர்களுக்கு கற்பிப்பது, தமிழ் ஆங்கிலம் வாசிப்புப் பயிற்சி மற்றும் சொற்களஞ்சியம் மேம்பட செய்வது போன்ற சிறப்புகள்.

## ஸ்டார் லயன்ஸ்



அய்யம்பேட்டை 9, அக்ரஹாரத்தில் எஸ். கோவிந்த ராவ் அவர்களால் 1975ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஸ்டார் லயன்ஸ் பள்ளி இப்பொழுது மேல்நிலைப்பள்ளி யாக உயர்ந்துள்ளது.

## அல்முபீன் அறிவுக்கூடம்

அல்குர்ஆன் விழாக்கள் நடத்தி வரலாறு படைத்த `பீ.ஏ. ஹாஜியார்' (மர்ஹூம் ஹாஜி எம்.ஏ. அப்துல் ரஹீம்) அவர்கள் இதன் நிறுவனர். நிறுவிய நாள் 01.06.1984.

இப்பொழுது அன்னாரின் மூத்த மகனார் **ஹாஜி ஏ. ஜாஃபர் அலி, பி.ஏ.**




அவர்கள் தாளாளர்.

பள்ளியின் சிறப்புக்களை ஒரு தனி கையேடாகப் பதிக்கும் அளவுக்குத் தகவல்கள் உள்ளன.

அய்யம்பேட்டை ரயிலடிப் பாதையில் கல்விப் பணியில் கால் நூற்றாண்டையும் தாண்டி விட்ட (29 ஆண்டுகள்) பெருமையை அல்–முபீன் அறிவுக்கூடம் பெற்றுப் புகழ் பரப்புகிறது.

## அஞ்சுமன் பள்ளி



அதே அய்யம்பேட்டை, ரயிலடிப் பாதையில் பதின்மூன்று (2001) ஆண்டுகளுக்கு முன் **கனியார் எம். அன்வர் பாட்சா** அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த அறிவுக்கூடத்திற்கு இப்பொழுது **தாளாளர் ஏ. முஹம்மது இபுராஹீம்** அவர்கள்.

பல சாதனைகளைப் புரிந்துள்ள நிர்வா கத்தினர், 6 முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவியர்க்கு கப்பல் நகர் தாய் ரஹீமா நகரில் `பெண்கள் பிளாக்' ஒன்றைக் கட்டி முடிக்கும் முனைப்பில் ஜமாஅத்தார் முன்னிலை யில் 31.07.2011ல் அடிக்கல் நாட்டப்பட்ட தகவலின்படி, இப்பொழுது இரண்டாண்டுகள் கடந்த பிறகு கட்டி முடிக்கப்பட்டிருக்கும் என்பது இலங்கைப் பேனாவின் எதிர்பார்ப்பு.

மேலும், காலத்திற்கேற்ற சில `அதிரடி' அழகிய முன்மாதிரிகளை நிர்வாகம் கடைப்பிடிப்பதாக `இளம்பிறை' ஈகைத் திருநாள் மலரில் கண்டேன். (பக்.53 – 2011).

♦ அலைபேசி (செல்போன்) செயல் இழக்கும் கருவி நுழைவாயிலில்!

♦ அந்த நுழைவாயிலின் உள்ளே பெண்கள் மட்டுமே செல்ல அனுமதி!

♦ அதே வாயிலில் கண்காணிப்பு காமிராவும் இருக்கும்.

## இந்தியன் சிட்டி ஸ்கூல்

பெயருக்கேற்றபடி ஆங்கி லக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஆண்டுதோறும் ஆங்கில எழுத்துப் பயிற்சிப் போட்டி நடத்தி வருகிறார்கள்.





அப்துல் ஹமீது நகரில் 01 .06.2003ல் **எம். அக்பர் அலி** அவர்களால் ஆரம்பித்து, அன்னவரே தாளாளர் பொறுப்பில் அமர்ந்து நடத்தி வருகிறார்.

இப்பள்ளி வளாகத்தி லேயே Indian Technical Institute நடத்தும் பல்துறை சார்ந்த பயிற்சி வகுப்புகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

## சபுரா கார்டன் `மார்டன் பள்ளி'



**ஆவூர் ஏ. பஷீர் அஹமது** அவர்களால் 10.06.2005ல் ஆரம்பிக்கப்பட்டு சக்கராப்பள்ளி **ஏ.ஏ.கே. சபுரா கார்டனில்** நடக்கும் இப்பள்ளி கல்வி புகட்டுவதுடன் மார்க்க கல்வியையும் சேர்த்து அளிக்கிறது.

இங்கும் எல்.கே.ஜி முதல் 5ஆம் வகுப்பு வரையே படிப்பு.

தாளாளராக **எம். முஹம்மது இஸ்மாயில் (பாசாஜி)** பணியாற்றுகிறார்கள்.

இவ்வாறாக, மொத்தமாக பத்து அறிவுசார் பள்ளிக் கூடங்கள் இங்கு இச்சிறு ஊரில் இயங்கிக் கொண்டிருப்பது நல்ல அழகிய முன்மாதிரி நடவடிக்கைகளே!

இங்குள்ள இளையோர், அறிவைத் தேடி ஓடுபவர்களாக இருக்கிறார்கள். ஆஹா! அற்புதம்!

இந்தளவில் ஒரு முக்கியக் கருத்துக் குறிப்பைக் கவனத்தில் கொள்க அபிமானிகளே!

♦ இறை இல்லங்களை முதன்மைப்படுத்தியும் அங்குமார்க்கக் கல்வி புகட்டும் மத்ரஸாக்களை ஊக்குவிக்கும் வகையாலும், மக்களது மேம்பாட்டு நடவடிக்கைகளிலும் நல்ல அழகிய முன்மாதிரிகளை பலர் தனிப்பட்ட வகையிலும் அமைப்புரீதியாகவும் செய்தே இருப்பார்கள்.

மிகக் குறிப்பாக –

கால் நூற்றாண்டைப் பூர்த்தி செய்துவிட்ட **`சிராஜுல் மில்லத் நற்பணி மன்ற**'(1985)த்தார், பன்னிரண்டு ஆண்டுகளைக் கடந்து சேவைகளைத் தொடரும் **`இஸ்லாமிய கலாசாரப் பேரவை'** (11.05.2000) **`காயிதெ மில்லத் நற்பணி மன்றம்'** மற்றும் மூன்றுக்கு குறையாத பைத்துல்மால் அமைப்புகள்,

**`தௌஹீத் சகோதரர்களின் இயக்கம்'** அனைத்துமே ஊருக்குப் பல நன்மைகளை செய்திருக்கின்றன; செய்து வருகின்றன.

### அல் அமானஹ் பைத்துல்மால்

அய்யம்பேட்டை அலீம் சதுக்கம் அபு காம்ப்ளக்ஸில் அல் அமானஹ் பைத்துல்மால் 2003ம் ஆண்டு ஜுன் மாதம் தொடங்கப்பட்டது.

வெளிநாடு செல்கின்றவர்களின் பயண ஏற்பாட்டிற்கு தேவையான பயண டிக்கெட்டிற்கும், அவசர மருத்துவ செலவினங்களுக்கு உதவி கேட்பவர்களுக்கு உதவி செய்வது குறிப்பிடத்தக்கது. மேலும், வட்டியில்லா கடனுதவியும் மேற்படிப்பு உதவிகளும் செய்து வருகிறது. ரமளான் காலங்களில் சதக்கா ஜக்காத் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. ஆம்புலன்ஸ் சேவையும் உண்டு.

நல்லுள்ளம் படைத்த பெருங்கொடையாளர்கள் வழங்கும் நன்கொடைகளின் மூலம் பல நற்காரியங்கள் சிறந்த கட்டமைப்புடன் முறையாக 10 வருடங்கள் கடந்து 11ம் ஆண்டு பாதம் பதித்துள்ளது.

இது இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட இஸ்லாமிய வங்கியாக மாறும் என்ற எதிர்பார்ப்புடன் சமூகப் பணியில் தங்களை முழுமையாக தங்களை ஈடுபடுத்தி செயல்பாட்டில் செயலாற்றி வருகின்றனர். இவர்களின் நம்பிக்கை வெற்றி பெற இறைவன் அருள்புரிவானாக, ஆமீன்!

### பாசமலர் சோஷியல் சர்வீஸ்

நமதூரில் இளைஞர்கள் பல வகையில் தங்களது சமூகப் பணி நற்காரியங்களில் தங்களை ஈடுபடுத்தி ஊருக்கும், சமுதாயத்திற்கும் தேடித் தந்த வண்ணம் உள்ளனர். அதனடிப்படையில் 2010ம் ஆண்டு பாசமலர் வெல்ஃபேர் அசோசியேஷன் இறை இல்லமாம் பள்ளிவாசலை தூய்மைப்படுத்தும் சுகாதாரப் பணியில் தங்களை ஈடுபடுத்தி இன்றுவரை செய்து வருவதுடன், இஸ்லாமிய சொற்பொழிவு மூலம் மார்க்கத்தின் மகத்துவத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்கிறார்கள்.




வருடந்தோறும் இரத்த தான முகாம், அவசர கால இரத்ததானம், கண் பரிசோதனை முகாம், பொது மருத்துவ முகாம், மருத்துவ உதவித்தொகை, வருடந்தோறும் 10, +2 மாணவ மாணவிகளுக்கு கல்வி விழிப்புணர்வு முகாம் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் வழக்கறிஞர் படிப்பிற்கான தேவையான ஆலோசனைகளை மாணவ மாணவர் களின் மத்தியில் கொண்டு செல்வதில் விடாமுயற்சி செய்து வரும் இவர்களின் பணி மென்மேலும் வெற்றி பெற துஆச் செய்வோம்.



### புகழ் பெற்ற புறாக்கூடு

சக்கராப்பள்ளி கீழப்பள்ளி வாசலின் பின்புறத்தில் புராதனமான புறாக்கூடு ஒன்று இருந்தது. தமிழகத்தில் புறாக்கள் வந்து தங்கி பாதுகாப்பாக குடியிருப்பதற்கு ஏற்ற வகையில் 1940களிலேயே தனியாக ஒரு கட்டடத்தைக் கட்டி நிர்மாணித்து, அதற்கு தினமும் தீனி போட்டு அந்த இடத்தை சுத்தம் செய்து பராமரித்து வந்த உன்னதமான செயல் வேறெங்கும் காண முடியாத அதிசயம்.

சற்றேறக்குறைய இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட புறாக்கள் – மணிப்புறாக்களும் – மாடப் புறாக்களமாக குடியிருந்தன.

பொதுமக்கள் யாரும் அதற்கு எந்தவிதமான தொந்தரவுகளும் செய்யமாட்டார்கள். அவரவரும் தங்கள் தங்களின் விருப்பப்படி கோதுமையும், அரிசி குருணைகளையும் உணவாகப் போடுவதுண்டு.

அந்தப் புறாக் கூண்டுகளுக்ளே கிடைக்கிற எச்சங்கள், கழிவுகளை சிறந்த உரமாகவும் பூச்சிக்கொல்லி மருந்தாகவும் பயன்படுத்துவர்.

மேலும் முழங்கால் வலி, மூச்சுப் பிடிப்பு போன்ற பல வேறு நோய் நொடிகளுக்கு அவற்றின் ரத்தத்தைத் தடவி நிவாரணம் பெறுவது நாட்டு மருத்துவமாக இருந்தது.

இவ்வாறு அந்தக் காலத்தில் ஜீவகாருண்ய அடிப்படையில் பறவைகளுக்காக உணவு, உறைவிடங்களை ஏற்பாடு செய்வதற்கு ஒரு வாலாற்று பின்னணியுண்டு. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் கஃபத்துல்லாவின் பராமரிப்புக்காக குரைஷியர்கள் தனித்தனி இலாகாக்களை ஏற்படுத்தியிருந்தனர்.

அவற்றில் ஒன்று, அங்கு வந்து கூடும் புறாக்களுக்கு தீனி போடுவது.

இந்தப் பொறுப்பினை பெருமானாரின் பெரிய தந்தை அபுதாலிப் அவர்கள் ஏற்றிருந்தார்கள். எனவே இவருக்கு ‘‘முத்யிமுத்தைர்’’ – பறவைகளுக்கு உணவளிப்பவர் என்ற பிறப்பு பெயருண்டு. அந்தப் பாரம்பரியம் இன்றுவரை தொடர்வதை மக்காவுக்குச் செல்பவர்கள் காணலாம். அதன் தொடர்ச்சியாகத்தான் நமது முன்னோர்கள் பள்ளிவாசல், மதரஸாக்களில் இத்தகைய ஏற்பாட்டினை செய்திருந்தனர்.

அதிசயகரமாக – இவை சில சமயங்களில் நம்மூரில் சமாதான தூதுவர்களாகவும் செயல்பட்டிருக்கின்றன.

**த**மிழக நெற்களஞ்சியம்
நல்லோர்கள் நிறைந்த பொற்களஞ்சியம்
இல்லையென்று வருவோர்க்கு
அள்ளி வழங்கும் வள்ளல்கள் நிறைந்த நல்லூர்
அதுவே, தஞ்சை மாவட்டம்
அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி!
இங்கே
காயிதெ மில்லத்தின் கல்பில் நிறைந்ததும்,
சிராஜுல் மில்லத்தின் சிந்தை கவர்ந்ததும்,
முனீருல் மில்லத்தின் முஹப்பத்திற்குரியதுமான
முஸ்லிம் லீகின் கோட்டை!

**– சிம்லா ஹாஜி பி.ஏ., முஹம்மது நஜீப்**
**(தலைவர், அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளி**
**இந்திய யூனியன் முஸ்லிம் லீக்)**



# 8.

# பச்சைக்கொடியை உயர்த்திப் பிடித்திருக்கும் முதன்மை இடம்

இதுவே, இவ்வாய்வுச் சிறு நூலின் முத்தாய்ப்பு அத்தியாயம்.

இப்படிப் பேனா பதிவு செய்ததும், `அப்பாடா!' என்று ஆனந்தப்படுபவர்களும் இருப்பார்கள்.

இருந்து விட்டுப் போகட்டுமே!

இன்னும் கொஞ்சம் பொறுங்கள். புத்தகத்தை மூடி விட்டு வேறு வேலைக்குப் போகலாம்!

இன்றைய வங்கதேசத்தில் (பங்களாதேஷ்) தலைநகர் டாக்காவில் 1906 டிசம்பர் 30ல் **நவாப் வக்காருல் முல்க்** தலைமையில் நடந்த ஒரு முஸ்லிம் கல்வி மாநாட்டில் முஸ்லிம்களுக்கென ஓர் அரசியல் கட்சி தேவை என்பதற்கு அறைகூவல் விடுக்கப்பட்டது. **`முஸ்லிம் லீக்'** என்ற அமைப்பொன்றுக்கு வித்திடப்பட்டது.

அடுத்த நாள் ஆரம்பக் கூட்டமும் நடந்தது. **சர். சுல்தான் முஹம்மது ஷாஹ் ஆகாகான்** முஸ்லிம் லீகின் தலைவராகவும், **நவாப் முஹ்ஸினுல் முல்க், நவாப் வக்காருல் முல்க்** ஆகியோர் பொதுச் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**மௌலானா முஹம்மதலி ஜவஹர்** அவர்களைப் பொறுப்பாளராக கொண்டு சட்ட திட்டங்கள் அமைப்பதற்கு குழு அமைக்கப்பட்டது.

இளம் பச்சை வண்ணக் கொடியின் இடதுபுற மேல் மூலையில் நட்சத்திரமும், வெள்ளை நிறத்தில் பதிக்கப்பட்ட கொடி அகில இந்திய முஸ்லிம் லீகின் கொடியாகவும் உருவாக்கப்பட்டது.

முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், முஸ்லிம்களின் கோரிக்கைகளை அரசுக்கு எடுத்துரைத்தல், முஸ்லிம்களுக்கும் பிற சமுதாய மக்களுக்குமிடையே நட்புறவை வளர்த்தல், அரசின் தவறுகளை நல்லெண்ணத்துடன் சுட்டிக் காட்டி நிவர்த்திக்கச் செய்தல் ஆகியவை அகில இந்திய முஸ்லிம் லீகின் நோக்கங்களாக அறிவிக்கப்பட்டன.

இவ்வாறு, இந்திய நாடு சுதந்திரம் பெறும் முன்னர், ஒரு வங்கதேசத்தில் துவங்கிய முஸ்லிம் லீக், சுதந்திரம் அடைந்த பிறகு தமிழ்நாட்டில் 10.03.1948ல், **கண்ணியத்திற்குரிய காயிதெமில்லத் (ரஹ்)** அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்பொழுது அந்த அமைப்பிற்கு அன்புக்கரமும், ஆதரவுக்கரமும் நீட்டி, பச்சைக்கொடி உயர்த்திப் பிடித்த ஊர்களில் **அய்யம்பேட்டை சக்கராப்பள்ளிக்கே முதன்மை இடம்** என்பதைப்



புரிகிறேன்; மெய்சிலிர்க்கிறேன்.

அச்சமயம் மலேசியாவில் தொழில் புரிந்து கொண்டிருந்த **அய்யம்பேட்டை ஆலிமான் ராஜா முஹம்மது** என்ற ஓர் இளம்பிராயத்தின் மூச்சும் பேச்சும் முஸ்லிம் லீகாகவே இருந்தது.

வயது பதினாறில் மலேசியா சென்றடைந்த அந்த `டீன் ஏஜ்' பையன் இருப்பத்தைந்தை நெருங்கிய பொழுது, `முஸ்லிம்கள் அனைவரும் முஸ்லிம் லீகர்களே' என உரத்துக்குரல் எழுப்பி உணர்வலைகளை ஒசையிட வைத்தான்.

1958ல் நடந்த ஒரு 'திருச்சி மாநாடு' அவனுக்கு மட்டுமல்ல, அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி வாலிபர்களின் சமுதாய உணர்வுக்கு ஒரு திருப்பு முனையாக, திருச்சி திருப்பமாக அமைந்து போனது.

அந்த வரலாற்றை, ஜம்ஜம் ஹாஜி **எஸ்.எம். பதுருதீன்** பெரியவர் அவர்கள், தங்களது '**வாழ்க்கைப் பாதை**' நூலில் மீட்டும் பொழுது இப்படி வர்ணித்திருக்கிறார்கள்:

''1945களில் தமிழ்நாட்டில் முஸ்லிம் லீக் உணர்வுகள் தலைதூக்கி நின்றன. அகில இந்தியத் தலைவராக காயிதே ஆஜம் பாபா முஹம்மது அலி ஜின்னா சாஹிப் அவர்கள் இருந்தார்கள்.

தமிழ்நாட்டிற்குப் பொறுப்பாளராக, கண்ணியத்திற்குரிய காயிதெ மில்லத் முஹம்மது இஸ்மாயில் சாகிப் அவர்களின் முஸ்லிம் லீக் ஜிந்தாபாத்!' முழக்கங்கள் தமிழகம் முழுவதும் எதிரொலித்தன. எங்களூரில் ஆலிமான் ராஜா முஹம்மது தீவிர முஸ்லிம் லீக் தொண்டராக இருந்தார். கவிஞர் இக்பால் ராஜா, ஆர்.எம். ஜியாவுதீன் ஆகியோரின் தந்தையார்). அவர் தான் நான் முஸ்லிம் லீகில் ஈடுபாடுகளில் தொடர்பு வைக்க காரணமானவர்.


ஆலிமான் ஏ. ராஜா முஹம்மது அவர்கள் இன்று இருப்பார்களேயானால் அகவை 92. (தோற்றம் : 25.12.1922 மறைவு : 14.06.1987). அன்னார் தனது சமுதாய சேவையில் ஒரு முத்திரையைப் பதித்தபொழுது வயது 36. அவரால் அய்யம்பேட்டையும் சுற்று வட்டாரமும் வரலாறு காணா ஒரு மாநாட்டை கண்டது. அதுவே **தஞ்சை மாவட்ட முஸ்லிம் லீக் ஊழியர் மாநாடு!** அய்யம்பேட்டை, கிரவுன் டாக்கீஸில் 10.9.1958–ல் நடந்தது. தலைமை தாங்கியவருக்கோ முப்பத்து இரண்டே (32) வயது!

யார்? யார்?


அவர் யார் என்பதை அறியுமுன் மாநாடு நடந்த மண்டப வாயிலை நினைவு படமாக அடுத்த பக்கத்தில் வழங்குகிறேன்.




## 1958–ல் அய்யம்பேட்டை ஊழியர்கள் நடத்திய மாநாடு!



தலைவர் காயிதே மில்லத்



தலைவர் சிராஜுல் மில்லத்





இம்மண்டபத்தில் ஊழியர் மாநாட்டுக்கு தலைமை தாங்கிய இளைஞர் பெயர் இதோ!

ஒப்பாரும் மிக்காரும் இல்லா **சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது சாகிப்** அவர்களே!

அனைவரையும் முந்திக் கொண்டு சமுதாயத் தானைத் தலைவராக பரிணமிக்க இருந்த இஸ்லாமிய இலக்கியவாதியை அன்றே அடையாளம் கண்ட அய்யம் பேட்டைவாசிகளுக்கு என் பேனா எதைத்தான் அள்ளி வழங்கும்?

1958ல் நடந்த மாநாட்டை நடத்த ஆலிமான் ராஜ் முஹம்மது அவர்களுக்கு தோளோடு தோள் நின்று துணைபுரிந்த மூத்த தொண்டர்கள் இருவர், இப்பொழுது எம்மோடு இருப்பது எமக்குப் பெருமையே!



♦ **அல்ஹாஜ் டாக்டர் ஏ.எம். ஜியாவுத்தீன் சாகிப் அவர்கள்** (நகர முஸ்லிம் லீக் தலைவர் 1958)


♦ **அல்ஹாஜ் எஸ்.எம். பதுருதீன்** அவர்கள் (நகர முஸ்லிம் லீக் செயலாளர் – 1958)

பின்னர் – இக்பால் சொற்பயிற்சி மன்றச் செயலர் – 1959

இவ்விருவருக்கும் அப்பொழுது (மாநாடு சமயத்தில்) வயது முறையே 33! 29!

இவர்கள்; குறிப்பாக, ஆலிமான் அவர்களும், ஜம் ஜம் ஹாஜியும் 1980 செப்டம்பர் 17, 18 தேதிகளில் சிங்காரச் சென்னையில் நிகழ்வுற்ற தமிழகம் தழுவிய மாநில முஸ்லிம் லீக் மாநாட்டில் அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி மக்களின் ஒருமைப்பாட்டுணர்வைக் காட்ட –

சென்னைக்குச் சிறப்புத் தொடர் வண்டி (ரயில்) ஒன்றையே அய்யம் பேட்டையிலிருந்தே தக்பீர் முழக்கத்துடன் புறப்படச் செய்தார்களாம்! (ரயில் பெட்டிகளின் பக்கவாட்டில் பச்சிளம் பிறைக்கொடிகளைக் கட்டவும் தவறவில்லை!)



இப்படியான எழுச்சி உணர்வுப் புறப்பாடு, செயற்பாடுகள் முன்பும் 1945 களில் சென்னைக்கு காயிதெ ஆஜம் ஜின்னா சாகிப் வந்தபொழுதும் நடந்து `டிரையின் ஸ்பெசல்' ஒன்று புறப்பட்டுப் போனதாக ஜம் ஜம் ஹாஜி அவர்களது வாழ்க்கை வரலாற்று நூலில் காண முடிகிறது.

மேலும், மேற்குறிப்பிடப்பட்ட 60களின் சென்னை மாநாட்டில் அய்யம் பேட்டை முஸ்லிம் லீக் சார்பில் மாவட்டத் தலைவர் டாக்டர் ஹாஜி ஏ.எம். ஜியாவுத்தீன் சாகிப் அவர்கள் **வெள்ளியிலான செங்கோல்** ஒன்றை கண்ணியத்திற்குரிய காயிதெ மில்லத் கரங்களில் சமர்ப்பித்து மக்களது அன்பை காட்டியிருக்கிறார்கள்.

அன்று, 1971களில், நாற்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன், அய்யம்பேட்டை – சக்கராப்பள்ளியில் நடந்தேறிய ஓர் அற்புத நிகழ்வை அப்போதைய இலக்கிய சஞ்சிகையான `**மணிவிளக்கு**', தனது 1971 ஜூன் இதழில் பிரமாதமாக வெளிச்சமிட்டிருக்கிறது.

● அய்யம்பேட்டை எப்போதுமே சமுதாய இயக்கத்தின் கோட்டையாக விளங்குகிறது. அந்தச் சிறப்புக்கு என்றும் பெருமை சேர்க்கும் வகையில், அய்யம்பேட்டை சக்கராப்பள்ளியில் முஸ்லிம் லீக் ஊழியர்கள் ஒரு புதிய மாடி கட்டடத்தை கட்டி முடித்திருக்கிறார்கள்.

`**காயிதெ மில்லத் மன்ஸில்**' என்று பெயர் சூட்டப்பட்ட அந்தக் கட்டிடத்தை 21.5.71 அன்று ஜும்ஆ தொழுகைக்குப் பின் கௌமின் காவலர் அல்ஹாஜ் **காயிதெ மில்லத் எம். முஹம்மது இஸ்மாயில் சாஹிப்** திறந்து வைத்தார்கள். தஞ்சை மாவட்ட மக்களும், முஸ்லிம் லீகின் செயற்குழு உறுப்பினர்களும், சட்டமன்ற மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்களும் வருகை தந்திருந்தார் கள்.

**`உழைப்பின் சிகரம்' என சிறப்பு பெற்ற ஆலிமான் ஏ. ராஜா முஹம்மது அவர்களின் சீரிய முயற்சியுடன், உண்மை ஊழியர் அல்ஹாஜ் எஸ்.எம். பத்ருதீன் சாஹிப் அவர்களின் ஒத்துழைப்புடன் இப்பணி ஆரம்பமாயிற்று.**

**பிரைமரி முஸ்லிம் லீகின் தலைவர் டாக்டர் ஏ.எம். ஜியாவுதீன் சாஹிப் அவர்களின் துணையுடன் ஊழியர்கள், ஊர் மக்கள் அனைவரின் ஒத்துழைப்புடன், தஞ்சை மாவட்டத்தின் முக்கிய இடமான அய்யம்பேட்டை ரஹ்மானியா தெருவில் இந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.**

**மாடியில் முஸ்லிம் லீக் அலுவலகமும், கீழே அஞ்சல் நிலையம் இயங்கத் தோதுவாகவும் ஒரு நூல் நிலையம் அமைக்கும் முறையிலும் திட்டமிட்டுக் கட்டியிருக்கிறார்கள்.**

**எப்பொழுதும் சிறப்புடன் ``காயிதெமில்லத் மன்ஸில்'' விளங்கவல்ல இறைவன் துணை செய்வானாக! `மணி விளக்கு ஜூன், 1971**

இது சரியாக 43 ஆண்டுகளுக்கு முன், பதிவாகியுள்ள வரலாற்று வைரச் செய்தி!

இப்பொழுதோ, கடந்த 11/12.11.2012–ல் மற்றொரு மாணிக்கத் தகவல் வழங்கியிருப்பது அந்த ‘மணிவிளக்கு’க் குடும்பத்து ‘மணிச்சுடர்’ நாளிதழ்.

**``நாற்பது ஆண்டு பழமையான கட்டடத்திற்குப் பதிலாக அய்யம்பேட்டை நகர முஸ்லிம் லீகிற் புதுக் கட்டடம் கட்ட முடிவு’** என்ற லட்டுச் **செய்தி அது!**

**`நகர இந்திய யூனியன் முஸ்லிம் லீக் செயற்குழு கூட்டம் சக்கராப்பள்ளி ஹக்கீம் நகர் `ஜாஸ்மின் இல்லத்’தில்10.11.2012ல் நகரத் தலைவர் சிம்லா பி.ஏ. முஹம்மது நஜீப் தலைமையில் கூடியது. நகர முஸ்லிம் லீகிற்குச் சொந்தமான 40 ஆண்டுகள் பழமைவாய்ந்த கட்டடத்திற்குப் பதிலாக அங்கேயே ஒரு புதுக்கட்டடம் நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டது’ என அச்செய்தி மணம் பரப்பியது.**

**‘நகர இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் சொத்துப் பாதுகாப்புக்குழு மற்றும் கட்டட நிர்மாணக்குழு ஆலோசகராக ஹாஜி எம்.ஏ. குலாம் மைதீன் தேர்வு செய்யப்பட்டு சிம்லா பி.ஏ. முஹம்மது நஜீப், மோதீன் கே.ஏ. அப்துல் நசீர், கட்டா ராவுத்த ஆர்.நூர் முஹம்மது, ஈயக்கார ஏ. அப்துல் மஜீத், ஆலிமான் ஆர்.எம். ஜியாவுதீன், மில்லத் எஸ்.பி.முஹம்மது இஸ்மாயில், கோம்பை எம். சுலைமான் பாட்சா, பொதக்குடி எம். முகம்மது பைசல், குண்டு ஜே.எம். அப்துல் காஸிம், ராஜாஜி ஆகியோர் உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர்** என்றும் அச்செய்தியில் தகவல்கள் இருந்தன.

இந்த நூலுக்கு `**புதிய வெளிச்சங்கள்**’ எனப் பெயர் கொடுக்கப்பட்டதற்கே முக்கிய காரணம், எதிர்காலத்தில் நகர முஸ்லிம் லீகிற்கு ஒரு புதுக் கட்டடம், புதிய வெளிச்சம் பாய்ச்சி பிரம்மாண்டமாக எழும்ப உள்ளது என்பதை அறிந்துதான்!

இன்ஷா அல்லாஹ்.

## பதிப்பகமும், அறக்கட்டளையும் அமைத்த ஒரேயொரு அமைப்பு!

என் பேனாவும் நானும் அறிய தமிழக முஸ்லிம் அமைப்பொன்று நூல் வெளியீட்டுப் பதிப்பகம் ஒன்றையும், அதற்கெனப் பல ஊர் மக்களையும் உள்ளடக்கிய அறக்கட்டளை ஒன்றையும் அமைத்திருப்பது தமிழ்நாடு மாநில இந்திய யூனியன் முஸ்லிம் லீகாகவே இருக்கும்.

பரந்த வாசிப்பின் முக்கியத்துவம் ஒவ்வொரு கால கட்டத்திலும் உணர்த்தப்படுகிறது. பல வரலாறுகளைப் பதிய தனித்துவம் மிக்க பதிப்பகத்தின் தேவையும் உணரப்படுகிறது.

அந்த வகையில், வரலாற்றுப் பேராசிரியர், `ஆற்றொழுக்கு’ அற்புத எழுத்தாளர், இதழாளர், **லீக் தலைவர்**, `**முனீருல் மில்லத்**’ பெற்ற பிள்ளையே இந்த `**முஸ்லிம் லீக் பதிப்பகம்**’. அவ்வமைப்பின் தலைவர் அவர்களே!

மிகச் சிறப்பாக வளர்த்திடப் பொருளாளர், முத்தான முத்துப்பேட்டை `மைந்தர்’ நாடாளுமன்ற உறுப்பினர் `**பிறைமேடை**’ பிரதம ஆசிரியர் **அல்ஹாஜ் எம். அப்துல் ரஹ்மான்** அவர்கள்.

பதிப்பகச் செயலாளரை அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி லீகினரே தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ளனர்!

மதிப்பிற்குரிய ஜம் ஜம் எஸ்.எம்.பீ. ஹாஜியார் அவர்களால் முழுநேர முஸ்லிம் லீக் ஊழியராக ஆக்கப்பட்டுவிட்ட `**மில்லத்**’ **எஸ்.பி. முஹம்மது இஸ்மாயில்** அவர்களே துடிதுடிப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

**``இந்திய யூனியன் முஸ்லிம் லீகிற்கு இளம் ரத்தம் பாய்ச்சப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அதன் பொதுச் செயலாளராக இளைஞர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் துடிப்போடு செயல்படுகிறார். புதைந்து கிடக்கும் வரலாறுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வர முஸ்லிம் லீக் பதிப்பக அறக்கட்டளை செயல்படுகிறது. அதன் செயலாளராக இளைஞர் மில்லத் எஸ்.பி. முஹம்மது இஸ்மாயில் விழிப்புடன் பணி செய்கிறார்’** என முஸ்லிம் லீக் கொள்கை பரப்புச் செயலாளரும், உலகத்திற்கே ஒரேயொரு தமிழ் முஸ்லிம் மாலைத் தினசரியான `**மணிச்சுடர்**’ பிரதம செய்தி ஆசிரியருமான சகோதரர் இனியவர் **காயல் மகபூப்** அவர்கள் குறிப்பிடுகிறார். **(ஆலிமான் ஆர்.எம்.ஜியாவுதீன்** தொகுத்த `இளம்பிறை’ ஈத் மலர் 2011, பக்.97லில் பதித்திருப்பதற்கு மேலாக நான் ‘கலம்’ உழ கைவசம் எதுவுமில்லை! எதுவுமில்லை!

இதில் குறிக்கப்பட்டுள்ள `**இளம் ரத்தம்**’, `**இளைஞர்**’ என்ற வார்த்தைகள் இன்ப அதிர்ச்சியை அள்ளி வழங்குகின்றன என்பதையும் அபிமானிகள் உணர வேண்டும் என்பது என் விருப்பு.

அத்தோடு, பதிப்பக `உயிர் நாடி’யான அறக் கட்டளைக்கும் இங்கிருந்தே முத்தான மூவர் தேர்வாகி உறுப்பினர்களாக்கப்பட்டுள்ளனர்.

- ♦ **அல்ஹாஜ் கொக்கரட்டி டீ.எம். ஜஃபருல்லாஹ் அவர்கள்**
- ♦ **ஆலி ஜனாப் வாலன் ஜெ. ஜெய்லான் பாட்சா அவர்கள்**
- ♦ **அல்ஹாஜ் கொட்டபாக்கி ஏ. சுலைமான் பாட்சா அவர்கள்.**

இவர்களுடன், மொத்தமாக 28 உறுப்பினர்கள் பல முக்கிய நகரங்கள், ஊர்களிலிருந்து தேர்வாகியுள்ளனர்.

பதிப்பக அறக்கட்டளைக்கு ஒரு மேலாளரும் அவசியமல்லவா!

அவரை காயல்பட்டினம் அளித்திருக்கிறது. அன்னார், என் பெயரில் பாதியை உடையவர்! ஆலி ஜனாப் **எஸ்.ஏ. இப்ராஹீம் மக்கீ** என்ற இளம் இரத்தம்!

இதன் ஆரம்பம் 2010

பதிப்பகம் தொடர்ந்து பணிபுரிய வேண்டியது காலத்தின் கட்டாயம்.

நல்லது அபிமானிகளே!

நானும் அல்–கலமும் (பேனா) விடைபெறும் வேளை நெருங்குகிறது.

இச்சமயம், 1967ல், 19.05 அன்று, சேலம் கூட்டமொன்றில் பேரறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றுகையில், ''**முஸ்லிம் லீகர்கள் ஒவ்வொருவருமே அரும்பணியாற்றும் திறமை பெற்றவர்கள்**'' என உதிர்த்த வார்த்தை வெண்முத்து. (நான் பத்திரப்படுத்தி வைத்திருப்பது) பளிச்சிடுகிறது.

மேற்குறிப்பிட்ட பதிப்பகச் செயற்பாடுகள் அதற்கு நல்ல உதாரணம்.

அதே நேரத்தில் –

தஞ்சாவூர் மாவட்டத்தில் மதங்கடந்த மனித நேயத்தோடு மக்கள் நெடுங்காலமாக வாழ்கின்றனர். '**தாயா பிள்ளையா, மாமன் மச்சானா, அங்காளி பங்காளியா வாழ்றோம்**' என்ற குரல்கள்.

இந்து – முஸ்லிம் இருதரப்பிலும் பரவலாகக் கேட்கின்றன.

இவ்வாறு கேட்பதற்கு, தஞ்சாவூர் மாவட்ட முஸ்லிம் லீகர் – முக்கியமாக, முன்பக்கங்களில் குறிப்பிடப்பட்ட மர்ஹூம்கள், இப்பொழுது எம்முடன் இருக்கும் பெரியோர்கள் ஆகியோருடன் **தஞ்சாவூர் ஹாஜி, எம்.ஏ. முகம்மது சாலிஹ் பி.ஏ.பி.எல்.**, போன்றோரின் கடும் உழைப்பும் –

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் எம்.முகம்மது இஸ்மாயில் சாகிப் பூரிப்புடன் சொல்லிக் காட்டியது போன்று ''**அய்யம்பேட்டை வட்டாரத்தில் வாழ்ந்து வரும் 'தாய்மார்கள், ஆண்களைவிட முஸ்லிம் லீக் உணர்வு மிகுந்தவர்களாக இருந்து அனைத்துத் தரப்பு மக்களையும் அரவணைத்துச்** சென்ற பண்பும் முக்கியமாக அமைந்து விட்டிருக்கின்றன.

இப்பொழுதும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் செயல் வீரர்களாகிய பழையவர்களாலும் புதியவர்களாலும் அந்த உயரிய பண்பாடு மிக மிகச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

## முதன்மையானவர்களில் முத்தானவர்கள்

**ஊ**ரின் முதல் பட்டதாரியான **அடையக்கட்டி பீர் முஹம்மது பி.ஏ.,** அவர்கள் பிரிட்டிஷ் அரசினரால் திருநெல் வேலி மாவட்ட ஆட்சியாளராகி (கலெக்டர்) நீலகிரி, கோவை மாவட்டங்களிலும் பணியாற்றி இறுதியாக வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.

கலெக்டர் பீர் முஹம்மது அவர்களின் மகன் **பி. அஹமது பாஷா** பி.ஏ.,பி.எல்., ஜுடியல் சப் மாஜிஸ்திரேட் ஆகி 1967ம் ஆண்டில் முதல் தர மாஜிஸ்திரேட்டாக உயர்ந்து ஓய்வு பெற்றார்.

மாஜிஸ்திரேட் பி. அஹமது பாஷா, பி.ஏ.பி.எல்., அவர் களின் மகள் **ஏ.சோபியா** 1962ம் ஆண்டு டாக்டராக தேர்வு பெற்றார். தஞ்சை மாவட்டத்திலேயே முதல் பெண் டாக்டர் இவரே!



முதல் முதலாக **மௌலானா ஹாபிழ் அபிதுல் நூர் ஹஜ்ரத்** 1945–46ம் ஆண்டில் குர்ஆனை மனனம் செய்து ஹாபிழ் பட்டம் பெற்றவர் என்றாலும் அதற்கு முன் ஒருவர் ஹாபிழ் பட்டம் பெற்ற தகவலும் உண்டு.

**உச்சி எம். முஹம்மது நஜீர்** (ரோஸ்லன்) முதல் விமான ஓட்டியாக தேர்வு பெற்றார்.

1997ஆம் ஆண்டிலிருந்து ஏழாண்டு காலங்கள் தென்னக ரயில்வேயின் போர்டு ஆலோசனைக் குழு உறுப்பினராக பணியாற்றியவர் வீணன் அப்துல் அஜீஸ்

**கே.எஸ். அப்துல் ஹமீது** (பாவாஜான் பாய்) நெல், மாவு, தானிய வகை அறவை மிஷின்களை முதலில் தொடங்கி யவர்.

அப்பா முஹம்மது ஹுசைன் மரம் அறுக்கும் பட்டறையை 1939–40ம் ஆண்டில் தொடங்கியவர்.

முதல் நாட்டாண்மையாக 1850ம் ஆண்டில் **ஐ. உசேன்ஸா ராவுத்தர்.**

**ஹாஜி கா.சு. முஹம்மது இஸ்மாயில்** ரயில்வே ஸ்டேஷன் அருகில் 1952ம் ஆண்டில் போன்மில் வைத்து பெருமள வில் எலும்புகளை அரைத்து கொடுக்கக்கூடிய மில்லும், நெல் கொதிநிலை மில்லும், உமி நீக்கும் மில்லும் வைத்து நடத்தியவர்.

## இலக்கிய – இதழியல் முன்னோடிகள்

படைப்பிலக்கியம், ஒலிபரப்புத்துறை **ஆர்.பி. மல்லாரி ரசீது**, அல்ஹதீஸ் கவிஞர் **ஜே.எச்.சி. அப்துல் ஸமத், எம்.பி. நூர் முஹம்மது**, சாற்றுக்கவி **ஸ்ரீலஸ்ரீ அ. முஹம்மது கனி**, கவிஞர் **அமுது ஏ. இப்றாஹீம், கிரசென்ட் ஏ. நூர் முஹம்மது**, கவியன்பன் **ஏ.எம். ஜக்கரியா**

'ஹிஜாத்துல் இஸ்லாம்', மாத இதழை, மவ்லவி அல்ஹாஜ் **அப்துர் ரஹீம்**, 1929ம் ஆண்டிலும், **உ.அ.அப்துல் மஜீது** 1920–25 'அல் கலாம்' மாத இதழையும், பூதலூர் **ஹாஜி இஸட். முஹம்மது** இஸ்ஹாக் 1950–52 களில் 'சமூக சூரியன்' என்ற பெயரில் மலேசியா பினாகில் மாத இதழை இலவசப் பிரதி வினியோகத்தையும், 1962 டி.எம். இப்றாஹீம் 'நண்பன்' மாத இதழையும் நடத்தினர்.

நிகழ்காலத்தில் 14.10.1991ல் 'இதயவாசல்' மாத இதழை **கவிஞர் இக்பால் ராஜா** தொடங்கி சில ஆண்டு காலம் நடத்தினார்.

இப்பொழுது இவர்கள்போல் பலர் இலை மறைத்த கனிகளாக பங்களிப்பு செய்கின்றனர்.

## மருத்துவத்துறையில் மகத்தானவர்கள்

ஹக்கீம் ஹாஜி க.அ. முஹம்மது காசீம், ஹக்கீம் அப்துர் ரஹ்மான் சாஹிப், ஹக்கீம் முஹம்மது சுலைமான் கொந்தாலன் ஹக்கீம் காதர்ஸா ராவுத்தர், ஹக்கீம் முஹம்மது லெப்பை, ஹக்கீம் எம். அப்துல் ரஜாக், கா. முஹம்மது ஷாரிப், காச்சியா மு. காதர்பாட்சா, மஷாயக் காஸிம் சாஹிப், என்.கே.அப்துல் முத்தலிப், என்.எம். சயீத், மஷயாக் ஹக்கீம், நிஜாமுதீன், மீராஞ்சி ஹக்கீம் எம்.ஏ. அப்துல் லத்தீப் ஆலிம் இவர்கள் எல்லாம் யுனானி சித்தா மருத்துவத் துறையில் சாதனை புரிந்து சரித்திரம் படைத்தவர்கள்.

டாக்டர் ஏ.எம். பஷீர் அஹமது எம்.பி.பி.எஸ்., தஞ்சை மெடிக்கல் காலேஜில் மருத்துவராக பணியாற்றியவர்.

நிகழ்கால மருத்துவத்துறையில் டாக்டர் ஏ.எம். ஜியாவுதீன் சாஹிப் முன்னோர்கள் வழியில் மருத்துவப் பணியில் சேவைச் செய்து இன்று தனது மகன் டாக்டர் அப்துல் ரஜாக் ஜானி, எம்.பி.பி.எஸ்., அவர்கள் இன்று சிறந்த மருத்துவ நிபுணராக திகழ்ந்து வருகிறார். மேலும் லயன் எம்.கே.எஸ். பரீத், என். கத்தீப், ஏ. சாகுல் ஹமீது, அமீருன்னிஸா பேகம், அஸ்ரப், பிஸ்மி எச். முஹம்மது இஸ்மாயில், பிஸ்மி எச்.அபுதாஹிர், ஏ. ஜாபர் அலி மீராஞ்சி, ஏ.மைதீன் பாட்சா மரைக்காயர், என். முஹம்மது இலியாஸ் ஆகியோர் மருத்துவத்துறையில் பணி செய்து வருகிறார்கள்.

கனியார் ஏ. முஹம்மது நாசர், ஆவூர் பி. முஹம்மது யாஸீம், ஏ. முஹம்மது அஸ்லம் இவர்கள் இந்த தலை முறையின் மருத்துவச் செல்வங்கள். அடுத்து டாக்டர் எம். அப்துல் ரஜாக் ஜானி, மகனார் ஏ. அர்ஷத் அஹமது, நல்லமரத்தார் எம். ராஜ் முஹம்மது, சொரியன் முஹம்மது இக்பால் இவர்களின் மகள்களும் மருத்துவக் கல்லூரியில் பயின்று வருவது குறிப்பிடத்தக்கது. ஜமாஅத் சபை சார்பில் நடத்தப்படும் மருத்துவமனை 24 மணிநேரமும் செயல்படுகிறது.

சகோதர சமுதாய டாக்டர் எம். கோட்டைசாமி அவர்களின் மருத்துவப் பணியும் மெச்சத்தக்கது.

### பட்டப் படிப்பில் முன்னணி

பி.ஏ., பி.ஈ., எம்.பி.ஏ., என இங்குள்ள தலைமுறையினர் முன்னணியில் உள்ளனர்.

ஒரு பட்டியல் கால அவகாசமின்மையால் இணைக்க முடியாமல் போனதில் பெருங்கவலை. மன்னிப்பு கிடைக்குமா?



## மகத்தான மார்க்கப்பணியில் முதுபெரும் ஆலிம் பெருமக்கள்

மஷாயிக் அப்துல்லாஹ் சாஹிப், கத்தீபு அப்துல் வஹாபு சாஹிப், கத்தீபு அப்துல் ரஹ்மான் பாகவி சாஹிப், மவ்லவி ஹாஜி அ.ற. அப்துர் ரஹீம் சாஹிப், மவ்லவி சொ. காதிர் முஹையதீன் சாஹிப், மவ்லவி ம.நூ. முஹம்மது ஆலிம் சாஹிப், சொரியன் மவ்லவி முஹம்மது இஸ்மாயில் பாகவி, வீணன் மவ்லவி அப்துல் கரீம் பாகவி, அடையக்கட்டி மவ்லவி அப்துல் ரஜாக் பாகவி, குண்டு மவ்லவி அப்துல் காதர் பாகவி, மௌலவி அப்துல் அலீம் சித்தீக், அ.அப்துல் லத்தீப் சாஹிப், மவ்லவி அல்ஹாஜ் மஷாயிக் பி. முஹம்மது பஷீர் ஆலிம் பாகவி, மவ்லவி மஷாயக் நூ. அப்துல் ஹை பாகவி, மவ்லானா அல்ஹாஜ் ஸ.அ. அப்துல் அஜீஸ் பாகவி, கத்திபு அ. ஜமாலுத்தீன் சாஹிப், கத்திபு ஐ. குத்புத்தீன் சாஹிப், கத்திபு அப்துல் ரஜாக் பாகவி, ஸ.அ.அப்துல் அஜீஸ் பாகவி, ஸ.அ. அப்துர் ரஷீது ஆலிம், ஸ.அ. முஹம்மது சாலிஸ் உமரி, ஸ.அ. முஹம்மது சயீது உமரி, மௌலவி அப்துல் லத்தீப் பாகவி, மௌலவி முஹம்மது இபுராஹீம் பாகவி, மஷாயக் குப்பத்தா அப்துல் ஹமீது பாகவி, அபுல்யான் எஸ்.எம். சையது முஹம்மது ஆலிம், மவ்லவி தாஜுல் பயான் ஏ.கே.எம். ஜியாவுத்தீன் பாஜில் மன்பஈ, மீராஞ்சி ஹாஜி ஹக்கீம் மவ்லவி எம்.ஏ. அப்துல் லத்தீப் ஆலிம், இவர்களுக்குப் பிறகு ஏராளமான ஆலிம்களும், ஹாபிழ்களும் உருவாகி உலா வருகிறார்கள்.

நல்லது அபிமானிகளே!

இந்நூலின் பக்க எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்ட ஒரு சூழ்நிலையில் என்னைப் பொறுத்தருளி எனக்கு முத்தாய்ப்பிட அனுமதிக்க வேண்டுகிறேன்.

என்றாலும், சிலபல நிழற்படங்களிலும் நெஞ்சம் நிறைந்த காட்சிகளை அடுத்தடுத்த பக்கங்களில் 'மீண்டும் நிஜமாக்கி' பெருமிதப்படுகின்றேன்.

> எப்பொழுதும் சமுதாய உழைப்புகள் உயர்ந்தே இருக்கட்டும்...
> என்றென்றும் மதங்கடந்த மனிதநேயம் மணம் பரப்பிக் கொண்டே இருக்கட்டும்...
> இவற்றுக்குப் படைத்தவனின் கிருபைகளுக்கு இறைஞ்சி இலங்கை மீளும்...



1970 ஆம் ஆண்டு தஃலீமுல் இஸ்லாம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட மக்தப் மதரஸா 1980 ஆம் ஆண்டு அல் ஜாமியத்துல் அரபிய்யா சுபுலுஸ்ஸலாம் அரபிக் கல்லூரியாக மாறியது. இதுவரை 9 ஆலிம்கள் ஸனது பெற்றுள்ளனர்.

## அலீம் சதுக்கம்



1944ம் ஆண்டு மீரட் மௌலானா அப்துல் அலீம் சித்தீக் சாஹிப் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்திய இவ்விடத்திற்கு அன்னாரின் நினைவாக அலீம் சதுக்கம் என அழைக்கப்படுகிறது.



## அய்யம்பேட்டை பேரூராட்சி மன்றம்

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் ஊராட்சி மன்றமாக உருவெடுத்தது தற்போது பேரூராட்சி மன்றமாக இயங்கி வரும் அய்யம்பேட்டை பேரூராட்சி மன்றத்தில் அன்றைய தலைவர் ஏ.ஆர். கோபால்சாமி தலைமையில் 21.09.1958ல் கண்ணியத்திற்குரிய காயிதெ மில்லத் (ரஹ்) ஏ.கே.ஏ. அப்துல் ஸமத் ஆகியோருக்கு வரவேற்பு கொடுக்கப்பட்டது.

15 வார்டுகள் உள்ள பேரூராட்சி மன்றத்தில் 2011–ல் நடைபெற்ற தேர்தலில் திரு.கே.வி. கோவிந்தராமன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயலாற்றி வருகிறார்.



## சக்கராப்பள்ளி ஊராட்சி மன்றம்



1956 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது இவ்வூராட்சி மன்றத்தில் 24.06.2004 அன்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், எம்.பி., பொதுச் செயலாளர் டாக்டர் ஹக்கீம் எஸ்.ஏ. சையத் சத்தார் ஆகியோருக்கு ஊராட்சி மன்றத் தலைவி என். குர்ஷித் ஜின்னா தலைமையில் வரவேற்பு கொடுக்கப்பட்டது.

12 வார்டுகள் உள்ள சக்கராப்பள்ளி ஊராட்சி மன்றத்திற்கு 2011–ல் நடைபெற்ற தேர்தலில் ஓ.ஆர்.ஜே.ஏ. துரைபுர்கானுதீன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயலாற்றி வருகிறார்.

## அய்யம்பேட்டை இரயில் நிலையம்




## சிட்டி யூனியன் பேங்க்




கும்பகோணம் சிட்டி யூனியன் (பி) லிமிடெட் வங்கி அய்யம்பேட்டைக்கு 25.11.1937 அன்று வந்தது. காலப் போக்கில் சிட்டி யூனியன் பேங்காக பேருந்து நிலையத்திற்கு பக்கத்தில் 19.5.2010 முதல் இயங்கி வருகிறது.




## கனரா வங்கி

கனரா வங்கி அய்யம்பேட்டைக்கு 01 .12.1963 அன்று வந்தது. சில இடங்களுக்கு, மாறி தற்போது மதகடி பஜாரில் செயல்பட்டு வருகிறது.

## இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

1937ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10ம் தேதி சென்னையில் தொடங்கப்பட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நமதூர் சக்கராப்பள்ளி ரஹ்மானியா தெருவில் 24.6.1981 முதல் செயல்பட தொடங்கியது. தற்போது 28.10.2013 முதல் சக்கராப் பள்ளி கிளை மேலத் தெருவிற்கு மாற்றப் பட்டு செயல்பட்டு வருகிறது.




## இந்தியன் வங்கி




1907ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி இந்திய சுதேசி இயக்கத்தின் ஒரு பகுதியாக தொடங்கப்பட்ட இந்தியன் வங்கி இன்று இந்தியா முழுவதும் 1546 கிளைகளுக்கு மேல் செயல்பட்டு வருகிறது.

23.06.1981 சக்கராப்பள்ளி ரஹ்மானியா தெருவில் பாங்க் ஆஃப் தஞ்சாவூர் (பி) லிமிடெட் என்ற பெயரில் இயங்கி வந்தது. 1990 முதல் இந்தியன் வங்கி என பெயர் மாற்றத்துடன் செயல்பட்டு வருகிறது.



## பாரத ஸ்டேட் வங்கி

பாரத ஸ்டேட் பாங்கு அய்யம்பேட்டையில் 07. 12.2010 முதல் இயங்கி வருகிறது.

## அய்யம்பேட்டை தபால் நிலையம்






## ரஹ்மானியா தெருவில் முஸ்லிம் லீக் கட்டிடத்தில் சக்கராப்பள்ளி தபால் நிலையம்




சக்கராப்பள்ளி
ஊராட்சி மன்ற
வளாகத்தில்
இயங்கும்
நூலகம்



சக்கராப்பள்ளி
ஊராட்சி மன்ற
வளாகத்தில்
தண்ணீர்
தொட்டி மற்றும்
சிறுவர்கள்
விளையாட்டு
பூங்கா



சக்கராப்பள்ளி வடக்குத்
தெருவில் அமைந்துள்ள
கிராம மார்க்கெட்



சக்கராப்பள்ளி
ஜாமியா மஸ்ஜித்
வளாகத்தில்
புரூனை தாரூல்
ஸலாம் விருந்து
கூடம்



இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முன்மாதிரி ஜமாஅத் விருதினை அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி முஸ்லிம் பரிபாலன ஜமாஅத் சபைக்கு வழங்கி கௌரவித்தமைக்கு ஜமாஅத் சபை சார்பாக நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்ட கூட்டத்தில் எடுத்த படம்



கவிஞர் இக்பால் ராஜா
அவர்களுக்கு
பாராட்டு தெரிவித்து
பொன்னாடை
அணிவிக்கிறார்
வாலன்
ஜே.சுலைமான் பாட்சா
உடன் ஜம்ஜம்
எஸ்.எம். பதுருதீன்
சிம்லா நஜீப்

வழுத்தூர்
அலீப் மெட்ரிக் பள்ளி
வளாகத்தில் நடைபெற்ற
பெருந்தலைவர் ஜி.எம்.
பனாத்வாலா 40 நாள்
நினைவு நாளில், நினைவு
மலரை ஜம்ஜம் ஹாஜி
எஸ்.எம். பதுருதீன் வழங்க
ஆலிமான் ஆர்.எம்.
ஜியாவுதீன் பெற்றுக்
கொள்கிறார். உடன் பள்ளி
தாளாளர்
ஏ. பஷீர் அஹமது





**அய்யம்பேட்டை அரசு மருத்துவமனை**

1947ம் ஆண்டு அரசினரின் சுகாதார நிலையமாக ஆரம்பிக்கப்பட்டு பின்பு 1987ஆம் ஆண்டுஅரசு ஆரம்ப சுகாதார மையமாகவும், 1999 அக்டோபர் முதல் அரசு மருத்துவமனையாகி மகப்பேறு மருத்துவம், சித்த மருத்துவமும், பிரேத பரிசோதனை மருத்துவ சட்ட மையம் ஆகிய பிரிவுகளை கொண்டு செயல்படுகிறது.




சக்கராப்பள்ளி அரசினர் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நகர முஸ்லிம் லீக் சார்பாக கட்டிக் கொடுக்கப்பட்ட மேடை அரங்கை, கட்டி காயிதே மில்லத் அரங்கம் என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அய்யம்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட ஹைரோடு பகுதியில் இரா. துரைகண்ணு எம்.எல்.ஏ. நிதியில் கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடைக்கு காயிதே மில்லத் பெயர் சூட்டப்பட்டது.

